# திருமூலர் வைத்தியம்

(கருக்கிடை – 600)



B. R. தேவராஜ நாயகர்

சென்னை.

S.403

[illegible]

84

[illegible]

40

[illegible]

47

[illegible]

[illegible]

12

R. S. வாசன் புக் டிப்போ,
ராஜா டாக்கீஸ் சமீபம்,
கும்பகோணம்.

# பித்த ரோக நிவாரணி.

கொத்தமல்லி
செண்பகப்பூ
தாளிசைபத்திரி
ஜீரகம்
பெருஞ்சீரகம்
வால்மிளகு
கோஷ்டம்
சிவதை வேர்
முசுமுசுக்கை
அதிமதுரம்
அருநெல்லி
ஏலம்
முந்திரிகைப்பழம்
இலந்தைப்பழம்
பச்சைப்பூரம்
எச்ச வெல்லம்
இலவங்கப்பூ
நெல்லி முள்ளி
எலுமிச்சம்பழம்
இஞ்சி
அக்ரகாரம்
சடாமஞ்சி
தான்றிக்காய்
கடாநாரத்தம்பழம்
கின்னல்
சிறுபயறு
நன்னாரி
வல்லாரை
[illegible]ம்பகிதீ
திற்பலி
கீழ்க்காநெல்லி

கோரைக்கிழங்கு
வில்வ வேர்
திருவைக்கள்ளி
தாமரை [illegible]
[redacted]ம்பூ
[redacted]
வாதா[illegible] [illegible]
[illegible]
[redacted]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[redacted]

உ

கடவுள் துணை

# திருமூலர் வைத்தியம்

## (கருக்கிடை-600.)



பழைய ஓலைச் சுவடியிலிருந்தும், சில அச்சுப்
பிரதிகளிலிருந்தும், சேகரித்து
வெளியிட்டது.

R. S. வாசன் புக் டிப்போ,
ராஜா டாக்கீஸ் சமீபம்,
கும்பகோணம்.

B. R. தேவராஜ நாயகர்
சென்னை

விலை ரூ. 2-50

எனைப்பாகம்
3¾ நீக்கால் குன்றினை கொண்
டது. ஒரு நீ மணவினை ௫. டது
மணவினை கொண்டது./ ஒருவிட
குகன் எனை. 1¼ விருகன் வினை
கொண்டது. ஒரு கணத்துக்கு 10
பக்கு. விருகன் வினை கொண்டது
1 ஒரு பலம். ஒரு ரூபா 1 எனை
கொண்டது. 1 ஒரு தோலா.
8. எட்டு பலம் கொண்டது 1 ஒரு
சேர். 30 முப்பது பலம் கொண்
டது. ஒரு மணங்கு அல்லது ஒரு ரூ
க்கல் 24. பலம் கொண்டது.
ஒரு மக்கசேர். 40 - காயமது.
குன்றி கொண்டது. ஒரு கலஞ்சி
காசு என்பது. ஒரு பிடி 1
உரி என்பது. அரைப்படி ½
உழக்கு என்பது. கால்படி ¼
ஆழாக்கு என்பது அரைக்கால்படி ⅛

உ

சிவமயம்

# திருமூலநாதர்
# கருக்கிடை வைத்தியம்-600

## காப்பு

### விநாயகர் துதி

அந்தி நிறத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. (1)

### தேவி துதி

தாதாவைப் போலே தயவு கொடுப்பவள்
வேதாக மத்தின் மெய்ஞ்ஞான மெய்ப்பொருள்
ஆதார சத்தி யரிய மனோன்மணி
மாதாவின் பாதம் வைத்தேனென் சென்னியே. (2)

## நூல்

### கருப்பக்கோள்

சென்னியில் வைத்தே திருநந்தி தாளிணை
மன்னிய காயம் வந்த வகைதன்னைக்
கன்னி வகுத்த கருப்பத்திரு மந்திரம்
உன்னி யுரைத்தே னுயர்வா மறுநூறே. (1)

உடலுற்ற வாறும் உயிருற்ற வாறும்
மடைவுற்ற வொன்பது வாசலின் வாறும்
திடமுற்ற தத்துவஞ் சீவன் புலன்களும்
கடலுற்ற நீர்போற் கண்ட கருவிதே. (2)

கருவை யொழிந்தவர் கண்டநன் மூவேழும்
புருட னுடலிற் பொழிந்தது மற்றொன்றும்
தெரிவை கருக்குழி தேய்வு புகுந்து
உருவ மிரண்டா யோடி விழுந்ததே. (3)

விழுந்ததுலிங்கம் விரிந்ததுயோனி
ஒழிந்தமுதலைந் துயிரோடுமேறித்
தெழிந்தது அப்புத் தேற்றுங்குணமும்
பொழிந்து புகுந்தது புணர்கின்றபோதே. (4)

போகின்றதெட்டும் புகுகின்ற பத்தெட்டும்
ஆகின்றமூன்றினும் அணியொன்பான் வாசலும்
நாகனுமெட்டும் நான்கிரவிமதிப்
பாகன்விடாவிடிற் படர்ந்தனலாமே. (5)

## சாதிகள்

ஏறவெதிர்க்கில் இனலயன் தானாகுந்
நேரொக்கவாகில் நிகர்போதன் தானாகும்
மாறவெதிர்க்கில் மறையவன் றானாகும்
பேரொத்த மைந்தனும் பேரரசாளுமே. (6)

## ஆண் பெண் அலி

ஆண்மிகிலாணும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணாம் இரண்டொன்றிப் பொருந்திலலியாகும்
தாண்மிகவாயில் தரணிமுழுதாளும்
பாண்மை மிகுந்திடிற் பாய்ந்தது மில்லையே. (7)

## வயதுண்டாங்காரணம்

பாய்ந்துமுன் னைந்தோடிற் பாராயுளுநூறாம்
பாய்ந்துபின்னைந்தோடிற் பார்வயதைம்பதாம்
பாய்ந்திடும்வாயு பகுத்தறிந்திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலுமாமே. (8)

## உடற்குறை

பாய்கின்றவாயு குறுகிற்குறளனும்
பாய்கின்றவாயு வளையின்முடமாகும்
பாய்கின்றவாயு நடுப்படிற்கூனாகும்
பாய்கின்றவாயுமா தர்க்கில்லைபார்க்கிலே. (9)

## மந்தன், ஊமை, குருடன்

மாதாவுதரம் மலமிகில்மந்தனும்
மாதாவுதரஞ் சலமிகி லூமையாம்
மாதாவுதரத் திரண் டொக்கிற்கண்ணில்லை
மாதாவுதரத்தில் வந்தகுழவிக்கே. (10)

## ஆண் பெண் அலி இரட்டைப்பேறு

குழவியும் ஆணும் வலத்தாதுவாகில்
குழவியும் பெண்ணும் இடத்தாதுவாகில்
குழவி இரண்டாம் அபானனெதுக்கில்
குழவி அலியாங் கொண்டகாலோக்கிலே. (11)

கொண்டநல்வாயு இருவர்க்கு மொன்றிடில்
கொண்டகுழவியும் கோமளமாய்விடும்
கொண்ட இவ்வாயு குறிப்பறிந்திவ்வகை
கொண்டதுமில்லை கோலம்உண்ணுதே. (12)

## பஞ்சபூத பிண்டோற்பத்தி

உன்னியகர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதுவி
வன்னியும்வாயுவு மாயுறுஞ்சுக்கிலம்
மன்னிச்சமனாய் வளர்க்கும் உதகமே. (13)

உதகம் உதிரம் உறுங்கனல் வாயுவால்
சிதகுறு மங்கங்கள் செய்து முடித்திடும்
பதகுறுமுரோமம் பகர்தசை அத்தி
நிதகுறுமொன்பது வாசலும் நீளுமே. (14)

நீங்கிட நீங்கிட நிமிர்ந்து வளர்ந்தோங்கும்
ஓங்கிட ஓங்கிட உறுதியாம் வாயுவும்
வாங்கிட வாங்கிட வன்னிதலைக் கொளும்
பாங்கிடப் பாங்கிடப் பத்தாகுந்திங்களே. (15)

### பிறக்கும்போதே நோயும் பிறந்தது

திங்கள்பத்தாகிற் தேய்வொடு வாயுசேர்ந்
தங்கிமலர்த்தி யமளியாய்க் கீழ்நோக்கிப்
பொங்கிப் பிறந்த நாள் புகழ்வார் வெறுவீணர்
தங்கிச்செ னிக்கையிற் றூநோயு முற்றதே. (16)

### நாடி-72000-த்தில் பத்து முக்கியம்

உற்றவிபரம் உறுதியாமெங்நந்தி
பற்றியமூலம் பகர்த்திடும் நாடிதான்
எற்றியே எண்ணிடில் எழுபத்திராயிரம்
மற்றதிற்பத்து வளமான நாடியே. (17)

### { நாடிகளே - வாயுக்கள் - முக்கியம் மூன்று ஆருதாரம் - மும்மண்டலம் }

வளமானபத்தில் வழங்குந்தசவாயு
உளமாம் இடைபின் சுழியென மூன்றுண்டு
களமான சக்கரங் காட்டியதாறுண்டு
தளமானமண்டலந் தான்மூன்றும் பாருமே. (18)

பாரும் இடைகலை பின்கலை மாறியே
தாரும் பெருவிரற் காலொடுதானேறிக்
காருங்கழுத்திற் கபாலவரை நின்று
வாரும் இடமாய் வலக்கரஞ் சாருமே. (19)

வலக்கரந்தன்னில் வளமானபின்கலை
நிலைக்க இடக்கரம் நின்றதிடைகலை
துலக்கநடுமையஞ் சுழிமுனையோடிடும்
பிலக்குமி வைமூன்றூற்பிறந்தது தாதுவே. (20

S403

## நாடிகளே தாதுக்கள்

தாதுமுறையே தனி இடைவாதமாம்
போதுறுபின்கலை புகன்றது பித்தமாம்
மாதுசுழிமுனை வழங்குவதை யமாம்
ஓதுமுறைபார்த் துணர்ந்தவர் சித்தரே. (21)

## மூவகை வாயு நாடி

உணர்ந்த அபானன் உறும் அந்தவாதத்தில்
புணர்ந்த பிராணன் புகும் அந்தப்பித்தத்தில்
அணைந்தசமானன் அடங்குங்கபத்தொடு
இணைந்திடுமூன் றுக் கெடுத்தகுறியொன்றே. (22)

## மூவகைநாடி யறிய

குறியாம் வலக்கரங் குவிந்த பெருவிரல்
மறிவாயதன்கீழ் வைத்திடுமூவிரல்
பிறிவாய் மேலேறிப் பிலத்ததுவாதமாம்
அறிவாய்நடுவிரல் அமர்ந்தது பித்தமே. (23)

பித்தத்தின்கீழே பிரண்டது ஐயமாம்
உற்றுற்றுப்பார்க்க ஓர்நரம்பேயோடும்
பத்தித்தமூவரும் பாய்கின்றவேகத்தால்
மத்தித்தநாளம் போல் வழங்கும் நரம்பிதே. (24)

## நாடிகளுக்கு மாத்திரையளவு

வழங்கிய வாதம் மாத்திரை யொன்ருகில்
தழங்கிய பித்தந் தன்னிலரைவாசி
அழுங்குங்கபந்தான் அடங்கியே காலோடில்
பிழங்கிய சீவற்குப் பிசகொன்று மில்லையே (25)

## நாடி நடைக் குவமானம்

இல்லையேவாதம் எழில்நடை கோழியாம்
எல்லையே பித்தம் எழும்புந்தவளைபோல்
ஒல்லையே ஐயம் ஊர்ந்திடும் பாம்புபோல்
அல்லையேகண்டு அறிந்தவர் சித்தரே. (26)

### நாடி இடம்

அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பேருஞ் சலத்தினில்
மறிந்திடும் ஐயம் வாசிக்கும் விந்துவில்
உறைந்திடும் மூன்றுக் குறவாந்தலமிதே. (27)

### நாடி நிறம்

உறவாங்கறுப்புஞ் சிவப்புறும் நல்வாதம்
குறைவான பச்சைப் பசுமை கொடும் பித்தம்
நிறைவான வெண்மையாய் நின்றது நல்லையம்
அறைவான வர்ணம தாகுந்தலமதே. (28)

### உடலிற்பூதம்

தலங்காட்டி யிந்தச் சடமான மைம்பூதம்
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந் தீகாட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே மனிதக்
குலங்காட்டி வானிற் குடியாயிருந்ததே. (29)

இருந்தவிவ்வைந்தா லெடுத்த சடமிது
பிரிந்திடு மாமிசம் பிருதிவின் மயமாகும்
சொரிந்திடு மிரத்தநீர் சொற்குறியப்புவாம்
வருந்திய வன்னி வளமாய் வெதுப்பமே (30)

வெதுப்பத்துடனே விடுபட்டு நாசியில்
எதுப்புற்று நிற்கு மிதுகாணும் வாயுவாம்
கதுப்பொத்து யாவுஞ் சுபளித்திட மிட்டு
மதுப்பொத்து நிற்கும் வானின் வளப்பமே. (31)

### பொறிகளிலிற் பூதம்

வளப்பங் கேள்பூமி வாசிக்கும் நாசியில்
தளப்பமாம் வன்னி தானுறுங் கண்ணினில்
அளப்பமாம் அப்பு அடங்கிடும் நாவினில்
பளப்பல வாயு பரிசிக்கும்எங்குமே. (32)

எங்கிய காதில் இருந்தூறும் ஆகாசம்
பொங்கிய தைந்துக்குட் பொல்லா திம்மூன்றுதான்
தங்கிய வாயு சமத்தன் மகாவாதம்
பங்கிய வன்னியாற் பகுந்தது பித்தமே. (33)

பகுந்த சலத்திற் பரிசிக்கும் நல்லேயம்
வகுந்த இம்மூன்ருல் வளர்ந்தது நோயெல்லாம்
அகுந்தது தானறிந் தளவிட்ட யோகிகள்
மகிழ்ந்தே யிதில்நின்ற மயக்கம் அறிவரே. (34)

## வாதக்குணம்

அறிய இம்மூன்றின தாண்மை சொன்ஞர் நந்தி
எறியநல்வாத மெறிக்குங் குணங்கேளு
குறியெனக்கைகால் குளேச்சு விலாச்சந்து
பறியென நொந்துடற் பச்சைப்புண்ணுகுமே. (35)

புண்ணுய் வலிக்கும் பொருமுங் குடலோடித்
தண்ணு மலத்தைத் தம்பிக்கும் போக்காது
ஒண்ணுன ஆசனம் உறவே சுருக்கிடும்
பண்ணுர் குளிர் சீதம் பகுத்திடும் வாதமே. (36)

## பித்தக் குணம்

பகுத்திடிற் பித்தம் பலபல சிந்தையாம்
வகுத்திடும் வாந்தியும் வாய்நீர் மிகவூறும்
மகுத்திடுமேனியில் மாட்டி யெரிப்பேறும்
மிகுத்துத் தவனிக்கும் மிக்கவிடாய்க்குமே. (37)

## ஐயக்குணம்

விடங்கிய ஐயம் மேலிரைப் பேற்றிடுந்
தடங்கி யிருமிடுந் தனிவிலா ரெண்டுநோம்
அடங்கிச் சுரங்காயும் அளவற்ற கோழை நீர்
இடங்கியுடல் வற்றி யிரத்தமுங் கக்குமே. (38)

## வாயுவின் சிறப்பு

கக்கிய மூவர்களிற் பெலன்தான்கேளு
ஒக்கிய வாயுதான் வுடல்கூடிடிற் பெலன்
தக்கிய வாயு சகலத்துக் காதாரம்
சிக்கிய நோயைச் சிறக்க விளக்குமே. (39)

## தாபச்சுரமும் சீதச்சுரமும்

விளக்கிய வன்னியும் வாயுவுமேற் கொண்டால்
தளக்கியதாபச் சுரங்காணுந் தோஷமாம்
வளக்கிய அப்புவும் வன்னியும் மேற்கொண்டால்
இளக்கியசீதச் சுரங்காணிதன் பேரே. (40)

## தோஷ நிறக்குறி

பேரான தோஷம் பிறக்கு முறைகேளு
வாரான வாதமும் வன்னிக்குந் தோஷமாம்
தாரான பித்தமுந் தழலூடில் வெண்மையாம்
சேரான ஐயஞ் சிவப்பேறும் வாய்விலே. (41)

வாயுவடங்கினல் வளமான தோஷம்போம்
வாயுவெழுங்கினல் மண்ணும் நீரொன்ருகும்
வாயுவு நீரால் வழங்கிய வன்னிசாம்
வாயுவு மாகாசம் மண்டல வோசையே. (42)

## ஐம்பூதங்களின் குணம் இடம்

ஓசையிலைந்தும் ஒளியினிலோர் மூன்றும்
நாசியில் நான்கும் நாவினிலிரண்டும்
தேசியுந்தேசனுஞ் சேர்ந்து பிரிந்திடம்
மாசிலா நந்தி மகிழ்ந்துரைத்தாரே. (43)

## ஓராண்டிலு மீராண்டிலும் சாகுங்குறி

உரைத்தது வாசிக் குறுதிக் குறிகேளு
விரைத்திடப்பின்கலை விடாதோடில் மூன்று நாள்
இரைத்தசடம் ஆண்டில் எய்திடுமாகாசம்
பரத்திலிரண்டுநாட் பாயி லிரண்டெண்ணே. (44)

S.403



### மூவாண்டிலும் ஆறுதிங்களிலும் சாகுங்குறி

எண்ணி யோருநா ளியங்கிடிற்பின் கலை
தண்ணிய மூவாண்டிற் தப்பாது மாரணம்
ஒண்ணி யுபயத்தில் ஓடிடிற் பத்துநாள்
மண்ணில் மதியாறில் மரிப்பான் குறியிதே. (45)

### நாள்மூன்றிலும் பதினைந்திலும் சாகுங்குறி

குறிகேளு மூக்கன்றிக் குலவிவாய் வழியோடில்
மறிகேளு மூன்றுநாள் மரித்திடுவன் தப்பாது
தெறிகேளு மூ மலமுந் திரண்டுமிகக் குறைந்துவரில்
பரிவாகும் பட்சமதிற் பாருயிர்தான் தப்பாதே. (46)

### ஆறுதிங்களிலும் உடனேயும் சாகுங்குறி

தப்பாது வாய்நீர்தான் தாக்கிற்றன் மேல்விழிலே
ஒப்பாகத் தனுமறைய வொழிந்திடுவன் மதியாறில்
செப்பாகத்தானிருக்கத் தேகநிழ லலைந்திடினும்
அப்பா கேள்சாவுநிச மறிந்து கற்பங்கொண்டிடே. (47)

### ஆறுநாளில் சாகுங்குறி

கொண்டிடுந்தோஷக் குறிசொன்னாரெங்நந்தி
தண்டும் உதடுந் தனிப்பல்லும் நாக்கோடு
மண்டிடுந்தாது வளமாய்க் கருப்பேரில்
ஒண்டிடும் ஆறுநாளுறுதியாய்ச் சாவானே. (48)

### ஒரு மாதத்தில் சாகுங்குறி

உறுதியாம் பித்தம் உடம்பு மிளைப்பாகும்
பொறுதிப் பெருத்தால் போவான்மதியொன்றில்
அறுதியாம்ஐயம் அஸ்த்தியுலர்த்திடில்
உறுதியோர்மதியி லொடுங்கிடுஞ்சீவனே. (49)

### சாகுங்குறி சாகாக்குறி

சிவகளையாய்ச் சேர்ந்திடும்நாடியில்
ஆவக்கரம்வைத் தழுத்திடின்மேலேறும்
தாவொத்துமேல்நோக்கிற் சாகானொருநாளும்
பாவொத்துக்கீழ்நோக்கிற் பதையாமற்சாவனே. (50)

பதைக்கின்றமூவரிற் பக்குவந்தப்பியே
பிதைக்கின்றவாதமும் பித்தமும்நீங்கிடில்
சுதைக்கொண்டிருந்தாலுந் தோற்றுமுயிர்விடும்
பிதைக்கொண்டவாத பித்தம்பெலனுமே. (51)

## வைத்தியர்க்குறுதி

பித்தம் அடங்கினுற் பேசாதேபோய்விடு
எத்தியவையம் எழும்பிடிற்கிட்டாதே
எத்தியவாதம் எழும்பில்மருந்துசெய்
எத்தியிம்மூன்றின் இயல்புக்கறிந்திடே. (52)

## மகாதோஷக்குறி

புக்கியுந்தியிற்கை பொருந்தவொருவிரல்
எக்கியுயரம் எழும்பில்மகாதோஷம்
அக்கியவுந்திதா னுதாரம்வாய்விற்கு
வைக்குந்தலமென வகுத்தனர்சித்தரே. (53)

## பத்திடங்களில் நாடிகாண

தாதுமுறைகேள் தனித்தகுதிச்சந்து
ஓதுறுகாமியம் உந்திநடுமார்பு
காதுநடுமூக்குக் கண்டங்கரம்புருவம்
போதுறுமுச்சி புகல்பத்தும்பார்த்திடே. (54)

## சாகாக்குறி - சாகுங்குறி

பார்க்கின்றநாடி பதைப்புண்டாய்நின்றிடில்
ஏர்க்கிற்பலநா ளிருப்பானிறந்திடான்
காக்கிடுங்காமியம் கழன்றுசுழித்தோடில்
ஆர்க்கிலெமனுல கடைவதுமுண்மையே. (55)

## உமிநீர்க்குறியாற் சாவு

உண்மைகேளின்னு மூமிழ்ந்திடநோயுள்ளோன்
தன்மையாய்த்தூரத்தே தாக்கிடிற்சாவில்லை
கண்மையாம்வாயு கழன்றிடிற்கிட்டிடும்
வண்மையாய்ப்பார்க்க வகுத்தனர்நந்தியே. (56)

## நோய்கள் வருங் காரணம்

வருத்தமுறைப்பாடு மந்தத்தால்வாயுவாம்
மிகுத்தநல்வாயுவால் விளைந்திடும்நோயெலாம்
பகுத்திவையிரண்டாற் பாரச்சுரமுறும்
முகுத்திவைமூன்றால் முத்தோடங்காணுமே. (57)

## மந்தம் வருதல்

காணுமேமந்தம் கவளிக்குமன்னத்தால்
காணுமேமந்தம் கடுமாமிசம்மீறில்
காணுமேமந்தம் கலந்தமாப்பண்டத்தால்
காணுமேமந்தம் கடுமேதிப்பாலுக்கே. (58)

## அன்னமே சாவிக்கும் பிழைப்பிக்கு மெனல்

மேவியஅன்னத்தால் விளங்கியதிச்சடம்
பாவியேகொன்று பழியுறுமன்னந்தான்
ஆவில்மிதந்தப்பில் ஐயுற்றுநோயாகும்
காவிலிவையெலாம் கண்டுகொளன்னமே. (59)

அன்னம்பிறந்தது அனைத்துவிதையிலும்
மன்னியவெட்டை மகாசீதம்ரெண்டினால்
பன்னிப்பதிந்திதைப் பார்ப்பார்பெரியோர்கள்
கன்னிமயக்கத்தாற் கண்டிடும்மேகமே. (60)

## மேகமுண்டாகும் விதம்

மேகம்பிறந்த விதஞ்சொன்னாரென்னந்தி
ஆகமிளங்கைப் பருவத்தில்மோகித்துப்
போகந்தினஞ்செய்யில் புகல்மந்தத்தேகூடில்
வாகப்பசியால் வழங்குஞ்சையோகமே. (61)

சையோகஞ்செய்யத் தனித்தசுழியோடும்
ஐயா அமிர்தம் அடக்கிக்கனலேறும்
மெய்யாகவிந்து விழவிழப்புண்ணாகும்
மையானமேகம் வளருங்கிரந்தியே. (62)

### சீழ்மேகம் வாயு சூலை பலமேகம்

கிரந்தியிரணம் கிளர்ந்திடுஞ்சீழ்மேகம்
உரைந்திவையிரண்டா லுறுவாய்வுசூலையாம்
பரந்திவைமூன்றாற் பற்பலமேகங்கள்
துரந்திவைதொட்டுச் சூழ்நோய்களுற்றதே. (63)

### இலங்கணமிடுதல்

உற்றசுரத்துக்கு முறுதியாம்வாய்வுக்கும்
அற்றேவருமட்டு மன்னத்தைக்காட்டாதே
உற்றக்கனல்ராசன் உன்வழியேவரில்
ஒற்றேநிறைந்தோடி லொன்றுக்குமஞ்சாதே. (64)

### காயசித்தி

அஞ்சியுகத்தி லழியாமற்காயந்தான்
மிஞ்சியகற்பம் விளம்பினேம்நூற்றெட்டில்
தஞ்சமுறவே தான்தின்னவல்லோர்க்குப்
பஞ்சுநரைபோய்ப் பதிந்தோங்கிவாழ்வாரே. (65)

### சுரத்துடன்வாயு (பிளேக்)

வளமானபித்தத்தில் மருவிக்கபங்கட்டில்
தளமானவாயுவாற் றூனேவெதுப்பேறிக்
களமானகன்னத்திற் கட்டியேமூலமாம்
உளமாஞ்சுரத்தி லுறுகின்றவாயுவே. (66)

### வாயுவே சகலத்துக்கும் மூலமெனல்

வாயுவினாலே மலசலம்கட்டிடும்
வாயுவினாலே வாங்கிடும்மேல்மூச்சு
வாயுவினாலே மலருமிரணங்கள்
வாயுவினாலே வரும்ருத்திர ரோகமே. (67)

### பேசிக்கொண் டிருக்கையிற் சாகுதல்

மேகமிருபதில் மிகுந்தேறிவாயுதான்
வாகுற்றநெஞ்சில் வலித்தேமயக்கிடும்
போகுற்றபித்தத்தைப் போகாமற்றம்பித்தால்
பாகுற்றுப்பேசையிற் பதையாமற்கொல்லுமே. (68)

### சுகசன்னிவரும் காரணம்

பதமாஞ்சுகசன்னி பாயும்விதம்கேளு
நிதமாகமூழ்கி நிறையவேசாப்பிட்டுக்
குதமாகமந்தத்திற் கூடிடவாயுவால்
அதமாமனுபேக மணந்திடிற்சன்னியே (69)

### மாதோஷம் காயமழிதல்

சன்னிசுகத்தினற் றூக்கும்வியர்வைதான்
கன்னிசுகத்தினற் கண்கள்சிவப்பேறும்
வன்னிசுகத்தினல் வழங்குமகாதோஷம்
அன்னசுகத்தின லழிந்திடும்காயமே. (70)

### மூலம் வரும் காரணம்

காயத்தில்மூலம் கண்டவிதங்கேளு
பாயொத்ததீபனம் பரிந்தேயடக்கினும்
மாயைமயக்க மலத்தையடக்கினும்
ஒயுற்றகுண்டலிக் குட்புகும்வாயுவே. (71)

### முளை மூலம்

வாயுபுகுந்து மலத்தோடபானத்தைத்
தேயுவைக்கூட்டித் திரட்டிக்கருக்கிடும்
தோயும்மலம்வரிற் சுருக்கிமுன்னேநின்று
ஆயுமுளைபோ லபானனிருக்குமே. (72)

### இரத்த மூலம்

இறுக்குஞ்சிலமூல மெழுமண்டலம்போல
மறுக்கரணம்கொண்டு வருகுஞ்சிலமூலம்
உறுக்கியவாயுவா லுதிரமும்தான்கூடித்
தறுக்கிவிழுக்காட்டும் தான்ரெத்தமூலமே. (73)

### மூலத்தின் பயன்

மூலமெழுந்திடில் முன்னேபசிபோகும்
மூலமெழுந்திடில் முனைவிந்துநாசமாம்
மூலமெழுந்திடில் முழங்குமிரைச்சல்தான்
மூலமெழுந்திடில் முகியாக்கழிச்சலே. (74)

### கிராணியின் குறி

கழிச்சல்கிராணி காணும்விதம்கேளு
அழிச்சியபித்த மனல்வாதமையமாம்
செழுச்சியவாயு சேர்ந்திவைமூன்ருலே
பழிச்செனப்பேதிக்கும் பார்பெலம்போகுமே. (75)

பெலமானமேகத்திற் பிறந்ததொருபேதி
குலமானமூலத்திற் கொடியதொருபேதி
சலமானவாயுவாற் சங்கித்தொருபேதி
வலமானதாறும் வகுத்தமுறையாமே. (76)

### மேகம் 201-ல் பித்தமேக நிறம்

முறையானமேகம் முழங்கிருபத்தொன்றின்
துறையானதெல்லாஞ் சொல்லினுரென்னந்தி
கறையாகுஞ்சீலேயிற் கண்டிடில்மஞ்சள்போல்
பறையானபித்தாற் படுகின்றமேகமே. (77)

### கப, வாத, மேகநிறம்

படுகின்றசீலேதான் பாங்காய்வெளுப்பாகில்
அடுகின்றவையத்தா லாகுங்காணம்மேகம்
மடுகுங்கபீனத்தில் மயில்நிறம்போற்பட்டால்
விடுகின்றவாதத்தால் விழுகின்றமேகமே. (78)

### தமரேரி மேகம் நீர்த்துளி மேகம்

மேகமிம்மூன்றில் வெவ்வேறுகுணங்கேளு
வாகியபித்தமும் வாயுவும்கூடிடில்
தாகியநாளத் தமரிலெரிந்திடும்
போகும்நீர்கட்டிப் பொசிந்துளித்தேவிழும். (79)

### சிக்குநீர்மேகம் கல்லடைப்பு மேகம்

விழுகுஞ்சிலநேரம் விடுபட்டுநீரோடும்
ஒழுகியவாயுவு மொதுங்கினல்நோகாது
வழுகியமந்தத்தால் வாயுவந்தேபுகில்
கழுகிமுதிர்ந்திடும் கல்லடைப்பாகுமே. (80)

### மேகத்தா லுடல் நிறம்

ஆகியவாதமும் வாயுவும்கூடிடில்
தாகியவெள்ளை தடையற்றுமெத்தவாய்ப்
போகியமேனி பொருமிக்கறுப்பேறும்
வாகியதாது வழங்காதுநஷ்டமே. (81)

### வெளிக்காணுது எலும்புருக்கு மேகம்

வழங்கியஐயமும் வாயுவும்கூடிடில்
பிழங்கிப்பசியாது பிறவெள்ளை காணுது
தழங்கியிளைத்துத் தானென்புபோலாவான்
இழங்கும்புகைந்தே யிருமிடும்மேகமே. (82)

### நீரிழிவு மதுமேகம்

இருமியபித்தமும் வாதமும்கூடிடில்
மருவச்சலமேகம் வாரிதிபோலோடும்
உருவமும்வேறுகு முண்டவுடற்காயும்
உருகியுமூளையுறிஞ்சி யினிக்குமே. (83)

### ஐயமது மேக குணம்

இனிக்கின்றவாதத் திடைச்சேரிலையந்தான்
பனிக்கின்றகள்ளுப் பதனிபோல்நீரோடும்
கனிக்கின்றமேனி கரைந்துவெளுப்பேறும்
தனிக்குமதுமேகம் தப்பாமலையமே. (84)

### இரத்தமேகம்

ஐபமும்பித்தமு மணைந்திடும்காலத்தில்
கொய்யுமிரத்தம் கொப்புளிக்குந்தண்டில்
மையுறும்கண்ணுட்கு மகத்தாம்பெரும்பாடாம்
வையுறும்மேகம் வரிசைமுறைகேளே. (85)

### பரம்பரை மேகம்

முறைகேட்கிலொன்பதும் முயற்சியால்வந்தது
துறைகேட்கில்கர்ப்பத்தில் துவக்கியமேகங்கள்
நறைபூத்தகொங்கையாள் நாயகன்மோகத்தால்
மறைபொற்றும்கர்ப்பத்தில் வளர்ந்ததுமேகமே (86)

## ஐவகை மேகம்

வளர்ந்ததுகர்ப்பத்தில் வகுத்தமுறையஞ்சு
உளந்தியவுந்தியி லுற்பத்தியாமேகம்
அளுந்திப்படும்வெள்ளை யாகாச்சுரமேகம்
தளர்ந்திய அஸ்த்தியைத் தணலாயுருக்குமே. (87)

தணற்காயும்மேகம் தண்ணீர்ப்பகைமேகம்
உணக்கால்முழுக்கற்று லுருகுஞ்சிலமேகம்
பிணக்காற்பசிகெட்டாற் பெற்றபெருமேகம்
வணக்காற்சையோகத்தால் வரும்கடுமேகமே. (88)

கடும்பசிதோன்றிடிற் காணுஞ்சிலமேகம்
அடுவுற்றபாஷாணத் தாலாஞ்சிலமேகம்
அடுவுற்றிவையேழு மஞ்சும்மூன்றென்பதும்
எடுவுற்றிருபத்தொன் றேற்றினர்மேகமே. (89)

## குன்மம் வருவிதம்

ஏற்றியகுன்ம மெழுந்தவிதங்கேளு
தோற்றியபித்தமும் வாயுவும்தொந்திக்கில்
சேற்றியவன்னஞ் செரிக்கில்வலிப்பேறும்
மாற்றியநீரூறி வாந்தியாம்பாருமே. (90)

## வாத குன்மம்

பாருமேவாதமும் வாயுவும்கூடிடில்
ஒருமேகும்பியி லுமன்றுமிகநோகும்
கோருமேகுத்தும் குடலைமுறுக்கிடும்
வாருமேவாதத்தில் வழங்கியகுன்மமே. (91)

## ஐய குன்மம்

வழங்கியஐயமும் வாயுவும்கூடிடில்
தழங்கிய அன்னத்தைச் சந்திக்கவொட்டாது
புழங்கிய அன்னம் புளிப்புக்கொடுத்தேறி
உழங்கிமுறுக்கி யுடலும்வலிக்குமே. (92)

### மேக குன்மம்

வலிக்கின்றமேகமும் வாயுவும்கூடிடில்
பலிக்கிமலசலம் பதையாமற்கட்டிடும்
இலிக்கியிடப்புறம் இயல்பாம்வலப்புறம்
வலிக்கும்முறுக்கும் வருஞ்சூலைகுன்மமே. (93)

குன்மமிவைநாலிற் கூறினரெண்விதம்
வண்மையாம்நோய்க்குள் மகாகோய்காண்பொல்லாது
கன்மமேசெய்த கசடர்க்கிதுவெய்தும்
நன்மையாந்தர்மஞ்செய் நாட்டோர்க்குவாராதே. (94)

### சூலையின் வகை

நாட்டியபித்தமாஞ் சூலைமுறைகேளு
மாட்டிய அன்னம் ருசிகெட்டுவாந்தியாம்
ஆட்டியகைகா லதன்சந்துபின் தண்டு
நீட்டிவலித்து நிலையாயெரிக்குமே. (95)

### வாத சூலை

நிலையானவாதத்தில் நின்றிடுஞ்சூலைதான்
குலையோடுகைகால் குழைச்செல்லாம்புண்போலக்
கலையாய்வலித்துக் கனத்திடும்கீழ்வயிறு
தலையோடுமேனி தாணினைத்தாடுமே. (96)

### ஐய சூலை

இளைத்திடும்மேனி யிருமிவறண்டிடும்
குளைத்திடும்கைகால் குத்திமிகநோகும்
தளைத்திடும்மார்பிற் சளிமிகத்தங்கிடும்
அளைத்திடுமையத்தா லாகின்றசூலையே. (97)

### வாத பித்த சூலை

ஆகாதவாதமும் பித்தமுஞ்சூலையாய்
வாகானகைகால் வலியாய்க்கரடேறும்
தாகானமேனி தனில்வெடிப்புண்டாகும்
போகாமல்நின்று புணர்ச்சியாய்க்கொல்லுமே. (98)

## ஐயபித்த சூலை

சொல்லியஐயமும் பித்தமும்கூடிடில்
மல்லியெலும்பில் வளமாய்த்துளைத்துநோம்
அல்லிச்சுரம்காயு மதிகவெப்பங்காணும்
எல்லியிருமிடு மிதுகாணுஞ்சூலையே. (99)

## ஐயவாத சூலை

காணுமேஐயத்திற் கனவாதசூலைகேள்
பூணுங்கபாலம் புடைத்துவெடித்திடும்
ஆணிமூளையாம் அடங்காக்குளிர்சுரம்
பேணியெலும்பெலாம் பெலன்கெட்டுமாறுமே. (100)

ஆறுவகையி லறுமூன்று பேர்சொல்வார்
வேறும்இதையல்லால் வெவ்வேறுமொன்றில்லை
கூறுமிதனுமம் கோடிக்குமேற்சொல்வார்
பேறுமறுசூலைப்பேர் சொன்னார்நந்தியே. (101)

## மலடு அறுவகை

நந்தியுரைத்தது நலமானகர்ப்பத்தில்
அந்தியநோய்தா னறுவகையாகுங்கேள்
புந்தியில்வாயுவும் தேயுவும்கூடிடில்
மந்திமலடாவாள் மரணம்வரையெண்ணே. (102)

## புழுவால் மலடு

வரையானகர்ப்பத்தில் மலட்டுப்புழுப்புகில்
விரையானவிந்துவை விரைந்ததுவுண்டிடும்
கரையாமலடியாம் காணதைப்போக்கிடில்
துரையானபிள்ளை சுகமாய்ச்செனிக்குமே. (103)

## சீழ் மலடு

செனிக்கின்றபிள்ளை திறமானபையினில்
கனிக்கின்றசீழ்நீர் கலந்துள்ளேசிக்கிடில்
பனிக்கின்றரைகால் பாவியேகுத்திடும்
தனிக்கும்பசிபோகும் தான்வயிறுபாரிப்பே. (104)

## வாய்வு மலடு

பாரியவாய்வு பரிந்துகுழிப்புகில்
தாரிக்கழிந்து சதாநித்தம்கூப்பிடும்
வாரியுடம்பெலாம் வலிக்குமிடைநோகும்
ஆருமறிய அரைந்தவர்சித்தரே. (105)

## இரத்த மலடு

சித்தானகர்ப்பத்திற் சேருமிரத்தந்தான்
மத்தாயுருண்டு வாயுப்போலோடிடும்
உற்றபசிபோகு முழன்றேபிரைந்திடும்
வற்றுக்கழிச்சலாம் வன்சூதவாயுவே. (106)

## சதை மலடு

சூஃானமாமிசஞ் சுழித்திடிற்கர்ப்பத்தில்
வாதானமேகத்தால் வழங்கிச்செனிப்பிக்கும்
போதாமுடம்பெலாம் புண்போல்மிகநோகும்
நீதாமயக்கமாய் நிர்ச்சீவனுக்குமே. (107)

ஆகின்றநோய்க ளறுவிதம்கர்ப்பத்தில்
பாகொன்றிநின்றூற் பலியாதுகர்ப்பந்தான்
வாகின்றதைப்போக்கில் மலடிபெறும்பிள்ளை
ஆகின்றநோய்க்கெலா மறைந்தமுறைபாரே. (108)

## கருப்பச் சன்னி

அறைந்திடுஞ்சன்னிக ளாகாதுகர்ப்பத்தில்
இறைந்திடுஞ்சீமுட னிற்புகும்வாயுவால்
விரைந்துவியர்க்கும் மெய்யில்மயக்கமாம்
துறைந்திடும்பற்கிட்டுஞ் சோம்பிக்கும்பாருமே. (109)

பாருமேபெண்தான் பச்சுடம்பாங்காலம்
தாருமனுபோகம் தனிக்காடியுண்ணுதல்
ஆருக்குமாப்பண்ட மாகாபலாச்சுளை
கோருமேகொண்டிடிற் கூடிடுஞ்சன்னியே. (110)

கொண்டமலடிக்கும் கூடிடுஞ்சன்னிதான்
மண்டியிருக்கையில் மாத்தின்பாள்மோருண்பாள்
தண்டியணைவாள் தனிச்சூதக்காய்தின்பாள்
ஒண்டியபெண்களுக் கோரெட்டுஞ்சன்னியே. (111)

ஓரெட்டுச்சன்னி யுழன்றதுபெண்ணுக்கும்
வாரெட்டு ஆணுக்கும் மகத்தாஞ்சுகசன்னி
நேரிட்டுப்பார்க்கில் நிகழ்ந்ததுவெவ்வேறு
பாரெட்டுமெச்சப் பகர்ந்தமுறைபாரே. (112)

## கண்ணோய் வருங் காரணம்

பாரேபொடிச்சுடல் பருவெய்யல்மேற்படல்
வாரேறுகொங்கையாள் மாயைமிகச்செய்யல்
காரேமுழுக்கறல் கண்ணுலனல்பார்த்தல்
சீரேறுபாஷாணம் தின்றதாற்கண்ணோயே. (113)

கண்ணோய்வருகின்ற காரணமின்னுங்கேள்
பண்ணுனமேகத்தாற் பருவெட்டைவாயுவால்
தண்ணும்மலக்கட்டால் தண்ணீரின்கட்டினல்
புண்ணுமிரணத்திற் போடுங்காரத்தாலே. (114)

காரச்சுறுக்கால் கடுரசத்தூமத்தால்
நேரொத்தசாரம் நிறைமூக்கின்வாசத்தால்
பாரொத்தபேதியால் பலபலதண்ணீரால்
சீரொத்தகண்ணிற் சிறக்கும்வியாதியே. (115)

## கண்ணோய் தீருமருந்து

இந்துப்புத்திப்பிலி யியல்பீதரோகணி
நந்திப்பூச்சாற்றில் நயந்து அரைத்திட
அந்தகன்கண்ணுக் கருந்ததிதோன்றிடும்
நந்திக்குநாதன் நயந்துமுரைத்ததே. (116)

### குட்டநோய் பதினெட்டின் விபரம்

வியாதியுண்மூவாறு விளங்கியகுட்டங்கேள்
சுயாதிககிரந்தி சுழல்மேகத்தாலாறும்
பயாதிய மண்ணுணிப் பல்வண்டினுலெட்டும்
நியாதிப்புழுநாலாய் நின்றிடுங்குட்டமே. (117)

### சுரம்-தோஷம்-சன்னி-வாயு கர்ப்பசூலை தீர

உரைத்தசுரம்போ மூறவானதோஷம்போம்
விரைத்திடுசன்னிபோம் மேலானவாயுபோம்
பரத்தியகர்ப்பத்திற் பாய்கின்றசூலைபோம்
குரைத்தநற்சூதக் குருகூட்டிப்பார்த்திடே. (118)

### மேகநோயிருபத்தொன்றும் தீர

பார்த்திடும்மேகம் பகரிருபத்தொன்றும்
போற்றிடுமப்பிரகப் பொலிவானசெந்தூரம்
சேர்த்திடுசீந்திற் செவ்வையாஞ்சர்க்கரை
மாற்றிடுவெண்ணெயில் மாமேகம்போகுமே. (119)

### குன்மம் குட்டம் கிராணி மூலங்களுக்கு

போகுமேகுன்மம் புகட்டத்தனியுப்பு
போகுமேகுட்டம் புகட்டச்செயகெந்தி
போகுமேகிராணி புகட்டநற்பூநாகம்
போகுமேமூலம் புகழ்சுத்தச்செம்புக்கே. (120)

சங்கைகேள்நோய்தான் தனித்தநாலாயிரம்
சங்கைகேள்நானூற்று நாற்பத்தெட்டென்பார்க்க
சங்கைகேளியாவும் தன்னுடவிற்கண்டால்
சங்கைகேளெல்லாம் தவிடுபொடியாமே. (121)

### சகல நோய்களும் தீரக் குருச்செந்தூரம்

பொடியாநோய்போகப் புகன்றிட்டாரென்னந்தி
மடிவானசூதம் மகத்தானதங்கமும்
பிடிவானகெந்தியின் பேரானசத்துங்
குடியாய்ச்செந்தூரித்துக் கூட்டியேதின்றிடே. (122

தின்றிடநோயெல்லாம் திசைகெட்டேயோடிடும்
பன்றிடவாயுவும் பக்கத்திற்சேராது
தன்றிடலோகர்க்குத் தானுகாதிம்முறை
மன்றிடச்சித்தர்க்காய் மாவியாதிபோகவே. (123)

வியாதிகள்போக வெகுநாட்சடமுறப்
பயாதித்திரைநரை பாங்காய்த்தவிர்ந்திடக்
கயாதிக்கவனம் கலந்தெங்குஞ்சுற்றிட
அயாதியஞான மஞ்சாகுஞ்சித்தியே. (124)

அஞ்சியுளத்தி லழியாமல்காயந்தான்
மிஞ்சியேகற்பம் விளம்பினேன்கண்டதைத்
தஞ்சமென்றெண்ணித்தான் தின்னவல்லோர்க்குக்
கஞ்சன்மறலிகலங்காது வாழ்வரே. (125)

வாழ்வதொன்றல்ல மகாசித்தியெட்டுமாம்
கேழ்வதென்றெண்ணிக் கொடுக்காதேமாண்பரே
தாழ்வதொன்றில்லைச் சதாகோடிமார்க்கமாம்
ஆழ்வதேவேதை யதுகாணும்கற்பமே. .(126)

கற்பமேதென்று கசடரேயெண்ணுதே
மற்பமுமல்ல வகண்டமகாசித்தி
சொற்பமுமல்ல தொடுமு னவலோகம்
மற்படும்தங்க மாற்றுப்பதினுறே. (127)

பதினுறுமாற்றுப்போல் பாலனுமுன்தேகம்
விதிநாலுலகையோன் மெய்யெழுத்தைப்பொய்யா
மதிநாறுமீசன் வகுத்தமுறைப்பாடு
கெதிநாறவுண்டு கிட்டாய்சமாதியே. (128)

சமாதிக்குமுன்செய்யுஞ் சங்கைவகைகே
ளமாதிதவம்பிகை யாலேமலம்போம்
புமாதிக்கரிசாலை போக்குவழலையை
தமாதித்தகும்பகம் தம்பிராணுயமே. (129)

ஆமேயிதுமுன் னடைவாகத்தீர்ந்தபின்
போமேயுடற்பூரம் புகட்டியதீபமாய்
ஒமேபரத்தி லுறவாய்மனஞ்சேரும்
தாமேசிவமாம் தனிச்சீவனில்லையே. (130)

## யோகம்

இல்லையிதத்தே யிறுக்கியேபாராதே
மல்லலயத்தில் மதித்துமேமாயாதே
தில்லையேமுத்தினைச் சேர்த்திடுமாயோகம்
வல்லையார்சாவா வழிமார்க்கமூக்கெண்ணே. (131)

மூக்குநுனியிலே மூட்டுமனத்தைநீ
மூக்கினிடையே முழங்கும்சபைதான்
மூக்கினிடைவிட்டு மூன்னேடிப்போகாது
மூக்கினெளியோடி முட்டும்பிர்மாண்டமே. (132)

பிர்மாண்டமுட்டிப் பேசுமேமூன்னின்று
கர்மாண்டகாண்டம் கடுகுபொடியாச்சு
தர்மாண்டமோட்சம் தனியாம்பரத்துள்ளே
நிர்மாண்டசித்தாய் நிலைத்திடுமூலியே. (133)

## நோய் வரலாறு

முற்றுப் பெற்றது.

---

## மூலிகைக்கற்பம்

மூலிகைக்கற்ப முயன்றதறுபதும்
பாலியுபரசம் பாங்காயறுபதும்
வாலியசூதம் தங்கமிரண்டும்
ஒலியொருநூற் றிருபத்திரண்டே. (134)

ஒன்ருனகற்பத்தை யுண்ணுதேமாண்பர்கள்
கண்ணுனவேதைக்குக் கலங்கியழுவார்கள்
பண்ணுனகற்பம் பதிந்திடுமேனியில்
தண்ணுய்நவலோகஞ் சாரப்பசும்பொன்னே. (135)

பொன்தான்பிறந்தது புகழானகற்பத்தில்
பொன்தான்பிறந்தது போராம்துரிசினில்
பொன்தான்பிறந்தது புகழானசூதத்தில்
பொன்தானுபரசப் போக்கில்பிறந்ததே. (136)

### கற்பமுண்ணும்போதுண்டாமவத்தை

பிறந்திடுங்கற்பந்தான் பேரூகத்தின்கையில்
கறந்திடும்வாமமும் கடுமலமேபோக்கும்
முறந்துவழலையு முன்பித்தமு நீக்கித்
திறந்துபுளியுப்பைத் தின்றிடாத்தியானியே. (137)

### கற்பத்துக் கனுபானம்

ஆனியாடிக்கு ளத்திலங்குந்திரு
மூனிவேரறுக் கன்னியுமுப்பதாம்
கானியவைப்பசி கார்த்திகைசர்க்கரை
மேனியாங்கடுக் கனுபானஞ்சொல்வதே. (138)

சொல்லுமேமார்கழி தையுமேதோன்றிடும்
மல்லுமேமாசியும் பங்குனிதிப்பிலி
மெல்லுமேசித்திரை மேலாம்வைகாசியும்
நல்லதேன்கடுக் கனுபானமாகுமே. (139)

அனுபானத்தோடே யந்தந்தமாதத்தில்
கனுவாகக்கொண்டிடும் காணரைமண்டிலம்
பனுவாய்மலமறும் பாங்காய்வழலைபோம்
இனிப்பாரிதைவிட்டு எண்ணுங்குமரியே. (140)

### குமரிக் கற்பம்

குமரியுங்கள்ளிக்காய் கூரூகக்கூட்டியே
அமுரியுடன்கொள்ள அண்டமலமறும்
உமுரியாம்பிஞ்சு உள்ளேவிசிறிடும்
அமுரியாங்காய மழியாதுதானுமே. (141)

தானுமிக்கற்பம் தனியொருமண்டிலம்
மானுமலமு மளவற்றவாமமும்
ஆனுதிமிந்து அறுதிப்படும்தேகம்
தானுமிதைத்தாண்டித் தனியாமொருநூறே. (142)

## மிளகு கற்பம்

நூறுமிளகு நூகருமமூரியில்
வேறுமருந்தென்ன விக்காயசித்திக்குத்
தேறியிதனைச் செலுத்தவல்லாருக்கு
மாறிமயிரு மறுமயிராகுமே. (143)

ஆகுமிக்கற்ப மடைவாகமண்டிலம்
வாகுடன்தின்று வளமாகத்தீர்ந்தபின்
பாகும்பெறுக்கும் பலகற்பம்தானேக்கும்
காதங்கறுத்த கரிசாலைதின்றிடே. (144)

## கருங்கரிசாலை

தின்றகரிசாலை தேகந்திரைபோக்கும்
தின்றகரிசாலை சிறந்தநரைபோக்கும்
தின்றகரிசாலை தேகஞ்சிறுபிள்ளை
தின்றகரிசாலை சிதையாதிவ்வாக்கையே. (145)

## பொற்றலைவல்லாரை

ஆக்கையிரண்டுக்கு மமுதமாம்பொற்றலை
வாக்குக்குரிய வல்லாரையோடைந்தும்
பாக்களவாகிலும் பாலிற்குழைத்துண்ண
ஆக்கையழியாது ஆயிரத்தாண்டாமே. (146)

ஆண்டாயிரந்தான் அளந்துமேகொண்டாலுந்
தீண்டாதேபெண்ணைத் தேகங்கொடுபோகும்
பூண்டவிதஞ்சும் பொலியக்கறுப்பாகில்
பூண்டியேகொள்ள வுறுதியாஞ்சங்கையேன். (147)

## பஞ்சமூலிகைக் கற்பம்

சங்கேலம்பத்திரி தக்கோலஞ்சாதிக்காய்
செங்கோலவித்துடன் சீர்வன்னிப்பேர்கொண்ட
மூன்கோலவேருடன் மூளக்கோலநெய்கலந்
தைங்கோலம்கொண்டவர் தன்கோலங்கொண்டாரே. ()

## சத்துச் செந்தூரம்

கொண்டபினேழாந் தரங்கற்பமேகேளும்
தண்டியதங்கம் தனிச்சூதமப்ரேகம்
ஒண்டியுருக்கி யுணர்வாய்ச்செந்தூரித்துத்
தண்டும்பணவெடை தான்தினம்தின்னுமே. (149)

தின்னவேமேனி சிறுகதிர்போலாகு
மன்னியகாயந்தான் வாங்கும்கெவனமாம்
உன்னிடில்மேலே யொளிக்குமனேன்மணி
பன்னியலாவயிற் பார்க்கலாம்பாருமே. (150)

## வேறு செந்தூரம்

பாருமேமற்றுமோர் பாங்கானகற்பத்தை
தாருமேகந்தகச் சத்தோடுதங்கத்தைச்
சேருமேசூதஞ் சிறக்கவுருக்கிட்டு
ஏருமேகூட்டி யியல்பாச்செந்தூரியே. (151)

செந்தூரந்தன்னையே தின்னப்பணவிடை
கந்தூருமேனி களங்கத்துப்பொன்போலாம்
எந்தூரும்போகலா மெங்குமிருக்கலாம்
கெந்தூரக்கெவனங் கேட்டிடாய்நீலமே. (152)

நீலஞ்சேரதில் நேரிடைகெந்தகம்
ஏலங்காலுடன் இரதமுமவ்விடை
கோலநீலியின்சாற்றில் குழைத்துண்ணப்
பாலனுமாவார் பார்நந்தியாணையே. (153)

ஆணமலசல மடைவானபாண்டத்தில்
பூணவேவிட்டுப் பொலிவாகமண்டிலம்
காணக்கரைத்துக் கலந்துற்றசூதத்தை
பூணவேகாத்தில் உறவாயுருக்கிடே. (154)

உருக்கியெடுத்து யுறவிடுசாரணை
செருக்கியபாலுடன் செய்வாய்கனபுடம்
பெருக்குங்கவனந்தான் பேரண்டஞ்சுற்றிடும்
வருக்கியசித்தரில் வாசிப்பார்பாருமே. (155)

## பத்தியம்

பாருமேகற்பம் பலபலவேதென்னில்
ஆருமேகொல்ல வசையாதுகற்றேகம்
வாருமேனென்பார் மகத்தானசித்தர்கள்
காருமேபத்தியம் காட்டினார்பாலென்றே (156)

பாலுடன்வெல்லம் பயறுமரிசிநெய்
போலுகைத்தின்பன பொற்கனிதேனுடன்
மேலப்பணியார மிளகுபொன்னுங்காணி
சீல்பெரும்யோகிகள் சித்தர்கள்பூசையே. (157)

புளிங்கறிகைப்புப் புலாலாட்டிறைச்சியும்
களிம்புசுண்ணும்பு கடுகுள்ளிக்காரெண்ணெய்
யளிம்புலவண மாகாதிவையொன்று
மூளம்பெறுசித்திக்கும் யோகிக்குமொவ்வாதே. (158)

யோகிகணேரிழை யுறவாடல்நீராடல்
பாகியநெய்யாம் பலபலசித்தர்க்குத்
தாகித்ததாகம் தனிப்பாலும்வெந்நீரு
மாகிமுழுக வகுத்தவழகென்னே. (159)

## பஞ்சகற்பம்

அழகுநுதலி யதிசயமேகேளாய்
களவுகாயங்கலந்தவுந் நீரிலே
மிளகுமஞ்சள்கடு நெல்லியும்வேம்பிடில்
இளகுங்காய மிறுகுங்கபாலமே. (160)

## கபசோதனையின் பலன்

கபாலமிறுகுங் கண்ணுந்துலக்கமாம்
அபாலமிந்தனி அதுவண்டுபோலாகும்
விபாலத்திசைவாய்வு வேதனைசெய்யாது
இபாலத்திலுள்ளே யெளிதாகமத்தியே. (161)

மத்தித்தசித்தர்கள் மாள்வரோமாளாரே
உத்தகருவை யுரைத்திட்டாரென்னந்தி
பத்தித்தபூரணம் பார்த்தவர்மாளார்காண்
மூத்தித்தகற்ப முன் னுண்டார்கேட்டிடே. (162)

## மூலிகை கருப்பாக

கேட்டிடுமஞ்சள் கெடியானமூலிகை
நாட்டிற்கரிசாலை நலமாய்க்கருப்பேற
ஆட்டுங்குழிவெட்டி யதிலேநன் மண்ணிட்டுப்
பூட்டிடுசெங்கொட்டை புகழாகவெட்டியே. (163)

வெட்டிப்பரப்பி மேலேமூன்மண்போட்டு
ஒட்டிவிரையிட் டுறவாருநல்லநீர்
வட்டிமுதலத்தான் வளமாமரைவாசி
கட்டிவிரையைக் களர்மண்ணிற்கொட்டையே. (164)

கொட்டைதனைப்போட்டுக் கொட்டிப்பரப்பிட்டு
சட்டையாமூன்விரை தானேதனியிட்டு
அட்டியநீர்விட் டடைவாயருத்துநீ
இட்டமாய்மூன்ருந்தர மிப்படிப்பண்ணே. (165)

மூணுந்தரத்தில் முழுக்கறுப்பாமேலாம்
ஆணுனசித்தர்க ளங்கங்குசெய்வது
வேணசெடிகள் வெளுப்புக்கறுப்பாகும்
ஊணவேசெய்தார் உத்தமர்தான்கேளே. (166)

## நூல் தொகை

கேளுசதாசிவன் கெடியேமூலட்சந்தான்
நாளுமயேச்சுரன் நன்மூன் றுலட்சந்தான்
ஊழியவீசனு மயன் றிருலட்சந்தான்
வாழியான்கண்டது மைம்பதாயிரமென்னே. (167)

என்னப்பிரமன்ரு னெழுமுப்பத்தாயிரம்
பன்னமுனிவர் பகர்ந்ததிலாயிரம்
மன்னியசித்தர்கள் மற்றுள்ளோர்கொண்டார்கள்
தன்னிகர்மூலன் சாவுபொய்யானதே. (168)

பொய்யாச்சுசாவென்றார் போனார்பிரமன்மால்
மெய்யாயடைந்தார்கள் விளங்கியமூவரும்
ஐயாவிதுவென்ன ஆச்சரியஞ்சொல்லாய்
மையானகண்ணிகள் மாயத்தால்மாண்டதே. (169)

## ஆருதாரம்

மாண்டதினாலோ மாத்துண்டோவென்னந்தி
பூண்டதிவர்கள் புகழ்வாழ்ந்ததெவ்விடம்
வாண்டதுமேரு வடியிற்கணேசன்கேள்
தாண்டவதின்மேலே தான்பிரமராதியே. (170)

பிரமாதிமேலே பிறந்தமால்பட்டினம்
அறமாதிமேலே யரனுடபட்டினம்
நிறமாயதின்மேலே நின்றமயேச்சுரன்
தறமாயதின்மேல் சதாசிவன்வாழ்ந்ததே. (171)

## அண்டபிண்டவுற்பனம்

வாழ்ந்தவிதஞ்சொல்வேன் வாசலிற்சிற்பரி
ஆழ்ந்தவதின்மே லனுகும்பராபரம்
வீழ்ந்தவசபை விடுநாளோடெங்குமாய்ச்
சூழ்ந்தவைகுண்டந் துலையாப்பிரமமே. (172)

பிரமாமுதலாய்ப் பிறந்ததுமிவ்வகை
மரமாண்டபிண்டத்தி லப்படியேகண்டேன்
தரமாண்டலோகத்தோர் தாக்கியுநோக்கியும்
உரமாகக்காணு துழல்வதென்னந்தியே. (173)

நந்தியைநோக்கார் நடுவணைநோக்குவார்
பந்தியைநோக்கிடார் பார்ப்பாரசபையை
அந்தியையேறையி லாகாக்குரங்குதான்
வந்திடவேகனம் வாசனைபூணுமே. (174)

பூணிடில்வாசம் பொறியில்மனமோடி
யூணிடிலட்சிய முழன்றுசுழன்றிடும்
கோணிக்குரங்காப குறிநாறுக்கெய்யாது
பேணிப்பிடித்துப் பிதற்றுவார்பேயரே. (175)

பிதத்தாமல்நோக்கிற் பிரமவழிகாணும்
மதத்தமதுவுண்டு மனதெண்ணப்பூரணம்
அதைத்தானேயான்காணு வதுவென்னையுட்கொள்ள
எதிர்த்தாலேயாகு மென்னீசனந்தியே. (176)

ஈசனைக்காண வெளிதல்லவோங்கார
வாசலைத்தாண்டி யகண்டமயங்காண
வாசனவாசல் மனோன்மணிபேசிடும்
யோசனைகூதமு முயர்ஞானமொக்குமே. (177)

ஒக்குமேகூதமு மொப்பற்றஞானமுஞ்
சிக்குமேபூரணந் தெவிட்டாதேகாணுமோ
மக்குமோவாசனை மனக்குரங்கேகுமோ
தக்குமுபதேசஞ் சாத்திடாயென்னந்தி. (178)

சாற்றுங்குளிகையைத் தான்வாயிலேவைத்து
ஏற்றியேபா ரேழுசபைகாணும்
போற்றுமனோன்மணி புகழுங்கடந்தபின்
தீற்றியபூரணம் தெளிவாகக்காணுமே. (179)

## உருவசித்தி

நிர்மலமாகும் நீண்டவுடல்கோணார்
நிர்மலமாகுமே நின்னுடல்பூரணம்
நின்மலமாகுமே நின்சாய்கையேபொய்யாம்
நிர்மலமாகவே நின்றிடிற்காணுமே. (180)

## உபதேசம்

காணும்வழியேது காரணுயென்னந்தி
பூணும்விளக்கி லொருதீபங்கீழ்நோக்கி
லாணிவிளக்கி லொருதீபங்கீழ்நோக்கிப்
பூணியேதீபம் பொரிந்தங்குபத்துமே. (181)

பத்தியதீபம்போல் பராபரங்கீழ்நோக்கி
எத்தியெடுக்கு மிதுகாண்மாகாசித்தி
அத்திக்குளிகையு மப்படியேகாணு
முத்தியுமாமேதான் முன்னின்றுகாணுமே. (182)

## அருவசித்தி

காணுமேதேகந்தான் கத்திநடுவோடும்
பூணுமேதேகம் பிடித்தவிடம்பொய்யாம்
கோணுமோமேனி கொழுந்தாகுஞ்சோதிபோல்
ஆணுமேகாளு மையாமறையுமே. (183)

மறையும்பூரணம் வளர்ந்தமுடியேது
மறையும்பூரணம் வாழாதடியேது
மறையும்பூரணம் வளர்ந்தபனிரெண்டில்
மறையும்பூரணம் வளமாகநாலெட்டே. (184)

நாலேதுயெட்டேது நாட்டிடாயென்னந்தி
காலோடுமூலங் கலந்தோடிமையத்தில்
பாலோடுமுட்டிப் பறிந்தபனிரெண்டும்
நாலோடுமெட்டுந்தான் புக்கிற்றுபாருமே. (185)

பாரிதுயெட்டும் பறிபட்டதுநாலும்
ஆருமறியார்க ளண்டிடும்பூரணம்
வேருமுதலும் விளக்கினேன்கேள்மூலன்
சேருமிதனில் சேர்ந்தவர்சித்தரே. (186)

சித்தர்க்குநாலே தெவிட்டாதபூரணம்
மத்தித்தவெட்டின் வகைசொல்லாயெனந்தி
ஒத்தித்தொருவிர லுயர்ந்தபரமாகு
மத்திரண்டாந்தான மகத்தாஞ்சிவமென்னே. (187)

மகத்தானமூவிரல் மாயாகாசத்திற்
பகத்தானநாலும் பரிவானநாதங்கள்
அகத்தானமைவிர லாதிமகாவிந்து
சகத்தானமாறுஞ் சதாசிவம்பாருமே. (188)

மூவிரல்பார்க்கில் மயேச்சுரம்வேரறும்
மேருதட்டாம லுயர்ந்திடும்ருத்திரன்
சேருமிதெட்டால் சிவனங்கேசஞ்சாரம்
ஆருமறியாரறிந்து கொளுண்மையே. (189)

## பஞ்சபூத வொடுக்கம்

உண்மைதானிவை யொடுங்கும் வகைகேள்
வண்மைப்பிரமன்ருன் மாலொடுசேருவான்
தண்மையாய்மாலுங் தனிருத்திரன்சேரும்
மண்மயருத்திர னுக்குமயேசனே. (190)

மயேசுரன்சென்னியில் வாழுஞ்சதாசிவம்
பயேசுரவிந்துவிற் பாய்ந்துமொடுங்கிடும்
அயேசுரவிந்து வடங்குமேநாதத்தில்
தயேசுரநாதத்தைத் தான்கொள்ளுஞ்சத்தியே. (191)

சத்தியொடுக்குந் தனித்தசிவத்துள்ளே
ஒத்திச்சிவந்தா னுயர்ந்தவராட்டினில்
நத்திவராட்டியை நடத்துவாள்சிற்பரி
கொத்துடன்சிற்பரை கூடியேநிற்குமே. (192)

நிற்குமப்பூரணம் நீண்டமுகசாலே
தக்குந்தாள்வாசல் தனிக்குமனோன்மனி
ஒக்குநெருப்பாறு மோடேமயிர்ப்பாலம்
சிக்குமோசிக்காதோ திறந்துநீபார்த்திடே. (193)

பார்த்திடப்பார்த்திடப் பாழாகும்பேய்மனம்
ஏர்த்திடயேர்த்திட யெழுந்திடும்வாசனே
கோர்த்திடக்கோர்த்திடக் குரங்குகுலேந்தோடும்
சேர்த்திடமார்க்கந் தெளிவிப்பாய்நந்தியே. (194)

தெளிந்தாயேமைந்தாநீ சேரவேயொவ்வொன்ருய்
மழிந்தேகடந்தே யகண்டத்தில்புக்கினல்
கழிந்தாயிரத்தெட்டுங் கடுகுபொடியாகும்
ஒழிந்தவராட்டிய னெக்கலுமாண்டதே. (195)

மாண்டவருன் னுள்ளே வந்தவழிசொல்லாய்
ஏண்டியபத்தர்க ளெல்லாரும்போனரே
ஆண்டனேமூல மறிவிப்பாயென்னந்தி
ஊண்டனேயுற்பன முறைத்திடாய்போதமே. (196)

## உபதேசம்

போதமேயென்று புலம்பினமாணாக்கன்
மாதாமனோன்மணி வந்தாளவ்வாசலில்
ஓதநினைத்தா ளுண்டானாளீசனை
காதையவீசனுக் கச்சததியானதே. (197)

சத்தியில்நாதம் தனிநாதம்விந்துவாய்
ஒத்திச்சதாசிவம் ஊட்டிமயேச்சுரன்
கொத்தியருத்திரன் குலாவியமால்கஞ்சன்
பத்திமுறைகேள் பலபலசீவனே. (198)

இருக்கின்றசிவன்க ளெல்லாத்திற்பூரணம்
மருக்கியிருக்கு மதைக்காணவில்லோர்கள்
தெருக்கியேதிண்டாடுந் தோர்விந்துநாதந்தான்
சொருக்கியேவைத்திடஞ் சுருதிமுடிந்ததே. (199)

முடிந்தமுடிவேது முற்றும்படியேது
கடிந்தகதலிப்பூ கண்டாங்கிதயத்தே
படிந்தவிதழ்தான் பதினாறய்நின்றது
அடிந்தநடுவே யறுகோணம்பார்த்திடே (200)

பார்த்தாயோமூலம் பரத்தினடியிது
ஏத்தாயோடன்ன மெடுத்தமலச்சடம்
கூத்தானைக்கூப்பிடுங் கொட்டாவிசோம்பெண்ணல்
காத்தாங்கடிநிற்குங் கண்டாங்கதைப்பாரே. (201)

அங்கென்றுவோட்டி லடிவிட்டசையாது
சிங்கென்றுகூறச் செலுமெட்டுமுன் னுள்ளே
வங்கென்றுநாலும் மனத்தின்முடியாகும்
நங்கென்றுநாட்டிய நாட்டமதுபாழே. (202)

## அண்ட நிலை

பாழென்றுசொன்னீர் பகர்ந்திடுமப்பாழை
மாழென்றொருவிரல் மலங்காவெளிபாழாந்
தாழென்றிருவிரல் தனியொளியேபாழாம்
வேழொன்றுமூவிரல் வெளியாமொழிப்பாழே. (203)

பாழ்மூன் றுந்தாண்டிற் பராபரபூரணம்
நாள்மூன் றுகோடி நாடினுமெட்டாது
தாள்மூன் றுங் கண்டாற்சகலமும்பூரணம்
கேள்மூன் றினாலே கெடியண்டமானதே. (204)

அண்டந்தானிம்மட்டோ வப்பாலுமுண்டோதான்
பண்டுமுதற்பாழ் படர்ந்துதீயாச்சென்று
தண்டும்பணருந் தனிக்கொம்புங்காய்பழம்
ஒண்டும்விரையொன்றி லோரண்டநின்றதே. (205)

நின்றாயிரத்தெட்டு நேரொருகாயாச்சு
பண்டானகொம்பும் பணருமகிற்பூவும்
கண்டாருரைப்பர்கண் காணவுங்கிட்டாது
பண்டானவத்தி பரத்தினடிகண்ணே. (206)

## யோகம்

கண்பார்க்கக்கிட்டாது காணவரிதென் றீர்
நண்பாகப்பார்க்கவே மார்க்கமுஞ்சொல்நந்தி
வண் பட்டகண்ரெண்டும் வைத்துமுனைமூக்கில்
தெண்பட்டநாளுஞ் சிதையாமல்சேர்த்திடே. (207)

சிதைக்குமேநாலொன்றாய்ச் சேரவெறும்பாழாம்
பதைக்குமனோன்மணி பட்டப்பகலாவாள்
உதிக்கும்ரவிகோடி யொப்பல்லவொப்பல்ல
கதிக்கின்றபூரணங் கரையில்லைபார்த்திடே. (208)

கரையற்றுநின்ற கலிங்கநற்பூரம்
உரையற்றுநின்ற தொளியாமகாபோதம்
சிரையற்றுநின்ற சிறுபிள்ளைகாட்டிடில்
வரையற்றுநிர்க்குணம் வாக்கற்றமோனமே. (209)

மோனமறிந்து முழுதுந்தனையொட்டில்
கானமிருந்தேன் கடுவூரிடைவாழ்ந்தேன்
தானமேன் தவமேன் சாவேன்பிழைத்தலேன்
வானமேனண்டமேன் வாரிதிபொய்யென்பார். (210)

பொய்யாமோவையா புகலுறக்கண்டது
மையானசங்கத்தால் வார்த்தையால்பொய்யென்பார்
கையாரக்கண்டதுங் காணுதேபோய்விட
வையாசமாதி யடைந்தார்க்குக்காணுதே. (211)

காணுதேபோய்விடில் காணுமடனந்தான்
வூணுதேவூனிட வோங்குந்தொனிபத்துந்
தோணுதேதோணுஞ் சுருதிமுடிந்திடங்
கோணுதேதம்முட் குறிப்பதுபோதமே. (212)

போதமேநோக்கவும் புக்கவெளிதோதான்
நீதமாய்மெள்ள நிலையுற்றுநீபாராய்
காதமுமல்லகாண் கண்ணுக்கடுக்ககாண்
சாதம்முறையோடே தப்பாமற்பார்த்திடே. (213)

தப்பாமற்பார்க்கவுந் தானஞ்சொல்வானந்தி
ஒப்பாகவுஞ்செய லூடியொளியாகும்
முப்பாழுந்தாண்டி முடியமட்டுந்தோன்று
மப்பாவுனக்குமேல் ஆதியொன்றில்லையே. (214)

இல்லையென்றுயெல்லை யெங்கும்பராபரம்
இல்லையென்றுயெல்லை யிருக்குங்குருவருள்
இல்லையென்றுயெல்லை யேகமென்பார்காணுர்
இல்லையென்றுயெல்லை யெனக்கெல்லைசொன்னதே. ( )

சொன்னவழிகேளுஞ் சூக்கவராட்டியன்
வன்னியகண்டத்தின் வைத்தான்மலரடி
பன்னியவெட்டுள் பரந்தமுடிபார்த்தான்
தன்னையேயான்சொன்னேன் சாதிக்கவல்லோர்க்கே.( )

வல்லோர்கள்பார்ப்பார் வராட்டியன்தானுக
எல்லோர்க்குமெய்த வெளிதாச்சோமெய்ஞ்ஞானம்
பல்லோர்பரமாகப் பார்ப்பார்வராட்டியை
சொல்லார்மயிர்ப்பாலஞ் சூக்கங்கனல்தாண்டே. (217)

தாண்டிடில்வாசனை தவிடுபொடியாச்சு
ஆண்டிடில்மற்கட்டு மழன்றங்கிறுந்தது
தூண்டிடிற்சிற்பரை சுடர்கோடிபானுபோற்
காண்டிடுமாணுக்கா கடத்துவெளிபாரே. (218)

வெளிக்குமழிவில்லை மென்மேல்முடிவில்லை
ஒளிக்குமுடிவில்லை யூணவடியில்லை
தெளிக்கும்விழியதில் சேர்ந்தவுன்மனம்
வளிக்கும்வராட்டி மனமும்வெறும்பொய்யே. (219)

மனந்தானேவிந்த மகத்துவமானது
மனந்தானேவிந்த வழிதாண்டிக்கூடிற்று
மனந்தானே பாசத்தில் மருவியலைந்தது
மனந்தானே நீதான் மாறுதபோதமே. (220)

மாறுக்கருணைக்குள் வாழ்ந்தாரேசித்தர்கள்
மாறுக்கருணையை வாவென்றழைத்தீரே
மாறுக்கருணை தான் வாய்க்கவெளிதாமோ
மாறுதுவிட்டகுறையாலும்வாச்சுதே. (221)

வாய்ச்சபெரியோர் மவுனமடைவார்கள்
வாய்ச்சபெரியோர் மகாசித்தராவார்கள்
வாய்ச்சபெரியோர்க்கு மற்றுந்துறவில்லை
வாய்ச்சபெரியோர் மகத்தானபிர்மமே. (222)

பிர்மவிசாரத்தைப் பேசிடும்வேதாந்தம்
பிர்மவிசாரத்தைப் பேசுமறுநூல்கள்
பிர்மவிசாரத்தைப் பேசும்பதினெட்டு
பிர்மவிசாரத்தின் பேரறியார்களே. (223)

## சரக்குகளும் தேவர்களும்

அறியார்சமயத்து ளாறுறுபேர்களும்
அறியார்கள்மாயத் தழுந்தியபேர்களும்
அறியார்களாங்காரத் தவ்வேர்பிடுங்காதார்
அறியாரறியா ரறிவுள்ளோர்காண்பரே. (224)

பரிசிக்குஞ்சூதம் பரத்துக்குநேராகும்
துரிசிக்குமொக்குந் துலையாமனேன்மணி
வரிசித்தசாரம் வராட்டிக்குநேரொக்கும்
தரிசித்தசத்திக்குந் தானெக்குந்தாரமே. (225)

தன்னனசூதமுந் தாரகிமிளையும்
பொன்னனவிந்து பொறியுப்புநேராகும்
பன்னச்சதாசிவன் பண்பொக்குங்கர்ப்பூரம்
மன்னுமயேச்சுரன் வாழ்சவுக்காரமே. (226)

## நாகத்தின் பேதம்

வாழ்கின்றருத்திரன் றானெக்கும்பொன்னுமே
வேழ்கின்றமாலின் விழியொக்கும்வெண்ணாகம்
மாழ்கின்றகஞ்சன் மயநாகந்தன்னிறந்
தாழ்கின்றவிந்திரன் றான்கருநாகமே. (227)

## நாகம் வேதை

கருவாஞ்சரக்குக் கலந்தவறுசுவை
மருவானதேவர் மகாவிந்துகாணிது
உருவாகக்கட்டியே யோட்டினல்வேதைகாண்
திருவார்பெறுவார் சின்னமுமில்லையே. (228)

சின்னமெடுத்திட்டார் சித்தர்கள்நாதாக்கள்
கன்னமேவாதியைக் காணுமற்றூசித்தால்
பன்னரவிகோடி படுவார்நரகத்தில்
தின்னவறுமையால் திசைத்தேங்கிநிற்பரே. (229)

சிற்குநரகமும் நிலையானசொர்க்கமும்
ஒக்கவேசொல்லி யுரைத்திட்டாரென்னந்தி
தக்கமலத்திலே தாழுங்கிருமிகள்
மக்கள்நரகந்தான் மைந்தனேகண்டிடே. (230)

## கோபமே பாவம்

மைந்தனேகோபம் வளர்ந்தமுறையாலே
பந்தனச்சென்மம் பலபலவாய்விடும்
செந்தனச்சென்மஞ் செனிப்பதெல்லாம்பாபம்
கந்தனக்கோபங் கடும்பாவங்கண்டிடே. (231)

## நரக சொர்க்கம்

கண்டேனேசொர்க்கத்தைக் காணும்வழியேது
நன்றானமானிடர் நரகஞ்செனித்திட்டுப்
பண்டேகுரையால் பராபரலோக்கினல்
உண்டேதான்சொர்க்க மூரைத்தமுறைபாடே. (232)

முறைபாடுகேட்டேன் முன்னேமெய்ஞானத்தை
முறைபாடுகேட்டேன் முனிந்திட்டவாதத்தை
முறைபாடுகேட்டேன் மூவந்துசந்தோஷித்தேன்
முறைபாடிம்மட்டோ முனிவர்க்குவைத்ததே. (233)

வைத்துக்குளிகையு மகத்தானஞானமும்
ஒத்தேயுரைத்தீ ருவக்கும்பயன்சொன்னீர்
மெத்தக்குளிகைதான் வெவ்வேறேசூட்சமோ
உத்தபடிதா னுரைத்திடாய்நந்தியே. (234)

## குளிகை எட்டின் பெயர்

உரைத்தபடிகே ளுறுதியாமென்மைந்தா
தரைத்தசொரூபக் குளிகைமுதற்றரம்
விரைத்தவிரண்டாம் விளங்கியசூட்சங்காண்
கரத்தில்மூன்றுந்தரங் கமலினிபார்த்திடே. (235)

பார்த்திடுநாலாந் தரமட்டமாசித்தி
கார்த்திடுமஞ்சாகுங் காணக்கமலினி
பேற்றிடுமோறுந் தரங்காணும்யோகினி
ஏற்றிடுமேழாந் தரங்காண்விண்ணேகியே. (236)

வேகிப்பரிச மிதினொடுமெட்டாச்சு
வாகித்துயான்சொல் வழியெல்லாநீபாரு
போகத்துமேழினற் பொன்னுங்கவனமாஞ்
சோகத்துநின்ற சொரூபமுரைகேளே. (237)

## குளிகையின் அனுபவம்

முறையாங்குளிகையை முகிழ்ந்தங்குவாயிட்டு
மறையாதபூரண மகத்துவம்நீபாரு
நிறைவானதுபோல நின்றிடுமுன்தேகம்
கறையானகண்டிப்புங் காணுதுகாணுதே. (238)

காணுதுபூரணங் கவளித்தயோகிக்குக்
காணுதுவிந்தக் கடிதாங்குளிகைக்குக்
காணுதுசாய்கையுங் கண்டமகன்றபேர்
காணுதுநின்மலங் கற்பூரதீபமே. (239)

தீபத்தைப்போலே சிறந்துவெளியாகும்
மாவொத்தபூரணம் வாவாவென்றீர்த்திடும்
பாவொத்தவாசனை யும்பலதுன்பமும்
ஆவத்தும்போக்கு மழியாதுகாயமே. (240)

காயமழியாது கவனம்போமாயிரம்
மாயமுமில்லை மகிழ்ந்துமவ்வண்டத்தில்
ஓயவேசித்தர் உறவாடல்மெத்துண்டு
பாயவேமார்க்கம் பரிவாகவைத்ததே. (241)

வைத்ததுகேட்டு மகத்துவங்கைக்கொண்டேன்
உத்ததுசொன்னீ ருவட்டாவுபதேசங்
கைத்தலமேந்துங் கருநெல்லிக்காயென
எத்தன்மைநாயே னெனையாண்டபோதமே. (242)

ஆண்டபராபர மருளுந்தொழிற்கெல்லாம்
பூண்டகணேசன் புகலுங்குருவீசன்
நீண்டவென்னந்தி நிகரில்வயிரவன்
காண்டிவையைந்துங் களங்கற்றுப்பூசியே. (243)

## பூசையின் பலன்

பூசிக்கப்பூசிக்கப் பொன்றாக்குருவாகும்
பூசிக்கப்பூசிக்கப் போகும்வெகுவேதை
பூசிக்கப்பூசிக்கப் பொன்மலையேயாகும்
பூசிக்கப்பூசிக்கப் பூண்பாய்மெய்ஞ்ஞானமே. (244)

மெய்யாஞ்சொருபக் குளிகையோடெட்டையும்
மையான நூலிலும் பாடினோம்பாருங்கள்
கையாரக்கண்டு கலங்கற்றுக்காண்பார்கள்
மையானமூடர்க்கு வாதம்பலியாதே. (245)

## அபக்குவர்

பலியாதுவாதம் பசுவாஞ்சடருக்குப்
பலியாதுவாதம் பலரையேதூஷிக்கில்
பலியாதுவாதந்தான் பாவமாங்கோபிக்குப்
பலியாதுவாதம் பரம்பார்க்காமூடர்க்கே. (246)

மூடருக்கெய்தாது முத்தியும்பத்தியும்
வீடிலென்காடிலென் விட்டகுறையாலே
தாடரவாதந் தனித்தனியேவந்துங்
கூடுறுஞானங் குலாவியசித்தியே. (247)

## நன் மார்க்கம்

சித்தியைக்கண்டால் சிவன்றானவன்றானும்
பத்தியஞானமும் பட்டப்பகலாகும்
சத்தியங்காயந் தவறாதொருநாளும்
புத்தியையுன்னியே பூரணம்பார்த்திடே. (248)

பார்த்திடப் பார்த்திடப் பாழிற்படர்ந்ததிக்
கோர்த்திடவண்ணமுங் கோப்பும்வெளியாச்சு
சேர்த்திடத்தாயைத் திரும்பியேயான்பார்க்க
மாத்தியமாச்சு மாயைவெளியாச்சே. (249)

வெளியாமுப்பாழில் வேறென்றீராறென்றீர்
ஒளியாமதுவென்று முரைக்கவரிதென்றீர்
நளிவானசித்து நயந்தமாகாசித்துந்
தெளிவாஞ்சிதாகாசஞ் சேர்ந்தவெளிமூன்றே. (250)

முணின்முடியின் மூகிழ்ந்தமனேன்மணி
பேணிவயிற்றினிற் பேரண்டமாச்சென்ருள்
வாணியாள்வார்த்தை மகாகோடியாச்சென்றும்
ஊணிஉணர்ந்தாலே யொக்கவெறும்பொய்யே. (251)

## கன்னிப்பெலன்

பொய்யாச்சுதேயென்ருல் போச்சுதுபொய்யாக
மெய்யாச்சுதேயென்ருல் விரவிச்சு அண்டங்கள்
கையாச்சரியாமோ கன்னிப்பெலந்தானே
பையாச்சுபூரணம் பாரீர்விலாசமே. (252)

## அருளொளி

விலாசத்தினுலே விரிந்துயிர்களும்
விலாசத்தினுலே வெவ்வேறுதாபரம்
விலாசத்தினுலே விரிந்துமனமாச்சு
விலாசத்தையுன்னி விரைந்தேறமுத்தியே. (253)

## சோதனை

விரைந்தகுளிகைக்கும் வேதைக்குஞ்சித்திக்கும்
அரைந்தகுருவுக்கு மமர்ந்தகளங்குக்கும்
பரந்திடுஞ்செம்பு பகர்ந்தயநாகமும்
தரந்தயக்கன்மசந் தான்போக்குஞ்சத்துக்கே. (254)

## சத்துக்கள் சோதிக்க

சத்துவகைக்குந் தனித்தனிச்செம்புக்கும்
பத்தியாங்கல்மசம் பாங்காகத்தீர்ந்திட
ஒத்துவுருகையி லூட்டமுறைகேளு
சுத்தியுமஞ்சுவிதம் பாருசொன்னேமே. (255)

சொன்னவுலகினிற் சூட்டுவிசைநாலு
பன்னவேகாரமும் பாச்சதில்மூன் றிடை
மன்னயவீர மதிலோரிடைகூட்ட
வன்னப்பொடித்து வளமாகத்தூவிடே. (256)

வேறு

தூவவேயின்னஞ் சூட்டமுறைகேளு
காவியிடைநாலு கட்டுப்புத்தான்மூன் று
ஓவியக்கார முருப்போடுரெண்டெடை
தாவியலிங்கந் தானேரிடைப்பூவே. (257)

வேறு

பூநீறுநாலெடை பொரிக்காரமூன்றெடை
வானேரிணங்கன் வளமாயிரண்டெடை
பானேருவீரம் பரிவாகவோரெடை
ஆனீர்ப்பொடித்து மடைவாகத்தூவிடே. (258)

வேறு

அடவானசெங்கல் லதுகாணுநாலெடை
படவானகாரம் பகர்ந்தவெடைமூன் று
தடவானதாரமுந் தானேரெடைரெண்டு
நடவானலிங்கமும் நாடோரெடைசாம்பே. (259)

வேறு

சாம்பலெடைநாலு தனியுப்புமூன்றெடை
வாம்பாகக்கார்முகில் மாட்டாயிரண்டெடை
காம்பக்கடல்நுரை காட்டேரிடையதில்
நேம்பவரைத்து நிரையப்பொடிதூவே. (260)

பொடியானதஞ்சும் புகழ்பெற்றசோதனை
முடியாகக்கன்மசம் மோசனமாய்ப்போகும்
மடியாதிவ்வொன் றும் மாற்றிடுந்தோடத்தை
ஒடியாதிவ்வண்ணம் உறப்போட்டுச்சோதியே. (261)

சோதிக்கச்சத்தெல்லாஞ் சோதிமயமாகும்
சோதிக்கச்செம்பெல்லாஞ் சோதியருணனும்
சோதிக்கயங்காந்தந் துறைக்கெல்லாநன்மையாம்
சோதிக்கறியாட்டால் சூதத்தைக்கொல்லாதே. (262)

### களிம்பு நீங்காதசத்துக்கள் பயனில்லையெனல்

கொல்லாதுசூதத்தைக் கூடாதுவொன்றிலும்
வெல்லாதுவுப்புக்கு வேடையுங்காணாது
வல்லாதுகாயம் மகாசித்தியாகாது
பொல்லாதகல்மசம் போக்கித்துறைபாரே. (263)

பாரென்றுமீசன் பராசத்திக்கேசொன்னார்
ஏரென்றுவஞ்சுமே லட்சந்தமிழினில்
வாரென்றூர்வண்ணத்தயிலத்திற் செம்பெல்லாந்
தாரொன்றுசத்தால் தனிச்சூதங்கட்டுமே. (264)

கட்டும்விதங்கேளு கண்டுபலஞ்செம்பு
மட்டியசோதனைவாய்க்காட்டா லெல்லாம்பொய்
மட்டியமாண்பரெ மயங்கியலையாதே
ஒட்டியேசோதிக்க மொருகோடிவேதையே. (265)

கோடியென்றேசொன்னேன் கூறவொருகோடி
ஆடுங்குளிகைதான் ஐந்நூற்றியைம்பது
தேடித்திரிந்து திகையாதேமாந்தரே
பாடினேனெண்ணாயிரத்தினிற் பார்த்திடே. (266)

### நூற் கோவை

பார்த்திடுமெட்டால் பகிர்ந்ததுவைந்நூறு
கோர்த்திடுமஞ்சால் குலாவியமூந்நூறு
சேர்த்திடுமூன்றால் திரண்டதொருநூறு
வார்த்திடுவாயிர மைந்ததுமைம்பதே. (267)

அன்பதுமாத்திர மாயிரத்தெட்டொக்கும்
அன்பதுமாத்திர மகண்டம்விலாசிக்கும்
அன்பதுமாத்திர மதீதப்பொருள்காட்டும்
அன்பதுமாத்திர மறிந்தவர்சித்தரே. (268)

## உருவசித்தி பெற்றார் வயது

சித்தர்வயதென்ன திரட்டியவாயிரம்
பத்தர்சிவயோகி பார்த்துப்பிழையுங்கள்
கொத்தாமசபையைக் கூடில்முடிகாட்டும்
வத்தாதபூரணம் வத்தாமதுபாரே. (269)

பாரென்றார்நந்தி பரந்தவசபையை
வாரென்றீர்மூலத்தில் மானந்திவீட்டுக்குள்
தாரொன்றினாலும் தனிக்கண்டத்தேகூட்டி
நேரெண்டியாச்சு நிறைந்தகதிராச்சே. (270)

கதிரேதுவென்றீர் கலங்காமுனைமூக்கில்
சதிரானயோகிக்குந் தன்னிடத்தேதோணும்
அதிரானஞானிக் கதுகாண்பராபரம்
எதிரேகிலோகத் திசைந்தமுறைகேளே. (271)

## கலைச்செலவு

முறையாம்புவியில் முழங்கியசீவர்கள்
நிறையானநித்திரை நெடுவீதியோட்டத்தால்
குறையாச்சையோகத்தால் கொட்டாவியேக்கத்தால்
வறையானமுப்பத் தறுபத்துமோடுமே. (272)

ஓடும்புரியட்ட மொவ்வொன்றாய்க்குன்றியே
நாடும்பரத்தில் நமனுக்கிரையாவார்
நீடும்பரமும் நிறைந்துள்ளேவாங்கிடில்
ஆடுந்திருநட்ட மம்பலங்காணுமே. (273)

காணுங்குறிப்புக் கடுமேலோகீழதோ
நாணுஞ்சபையடிப் பூதமேரண்டமோ
ஊணுமேயாறு மூடேசுழியோடப்
பூணுங்கபாலம் புகுங்குருபாதமே. (274)

## சமாதி நிலை

குருமண்டிலத்திற் கூறாயிரத்தெட்டுக்
கருமண்டலமுட்டிக் கவிந்தேபுருமையம்
மறுமண்டலக்கதி ரண்டமும்பிண்டமுந்
தருமண்டலத்தொடு தானென்றாய்நிற்குமே. (275)

நிற்குமேயொன்றென் றீர்நேர்பார்க்கில்ரெண்டாச்சு
தக்குமோநாதந் தனித்தமகாசத்தி
மக்குமோயீசன் மகத்தானவிந்துதான்
ஒக்குமோநேர்ந்து மொன்றூமதனலே. (276)

காலேமுடிவென் றீர் நாலிரண்டெட்டாச்சு
காலேகாண்சூட்சங் கலந்தபுரியட்டங்
கோலேகுறியேகக் கூறுவார்சித்தர்கள்
மேலேதுமில்லை விரித்தநூல்பொய்யென்றே. (277)

பொய்யென் றீர்நூலைப் புகன்றமூறையேது
கையென் றயோகங் கடந்துகபாலத்தே
மெய்யென் றுவிண்டு விரைந்துபுகைந்தோடித்
தொய்யென் றுவாதஞ் சொல்லாச்சுதுபாரே. (278)

## தீர்க்கதரிசனம் (முற்றுணர்வு)

சொல்லானமார்க்கந்தான் சொன்னதுயோகிக்கு
வல்லாஞ்சபைமறித் தேமுகடேத்திடக்
கல்லாங்கபாலங் கடுந்தணலேமூண்டு
எல்லாத்தெரிசன மேறவுங்காணுமே. (279)

## யோகக்காக்ஷி

காணுமேயென் றீர் கண்மூக்குவேரூச்சு
பூணுமேயோடிப் பூண்டமனத்தோடே
ஊணுமேயங்கே யுறும்பாழிற்பூரணம்
தோணுமேயப்பா சுடர்க்கோடிதீபமே. (280)

தீபச்சுடரேதான் திக்கொல்லாங்காண்பது
தீபச்சுடரேதான் சேர்க்குஞ்சபையினில்
தீபச்சுடரேதான் தெவிட்டாமூனைநாசி
தீபச்சுடரேதான் சிறந்ததுநாலுமே. (281)

சிறந்தவிதம்ரெண்டிற் செய்வதெதுநன்று
உறைந்திடும்யோகத்தி லூடியேமுட்டினல்
கறந்தகபாலங் கடந்தெப்பொருள்காணும்
நிறைந்தேநெடுமூப்பு நின்றதுஞானமே. (282)

ஞானந்தானல்லவோ நாலாம்பதவெளி
வானந்தானல்லவோ வடிவந்தயோகத்தில்
பானந்தானல்லவோ பாலத்தில்நல்லூறல்
கானந்தான்முப்பாழ் கடந்ததுபார்த்திடே. (283)

பார்த்திடப்பார்த்திடப் பாழும்வெளியாச்சு
ஏர்த்திடவேர்த்திட யெல்லாம்வெறும்பொய்காண்
தோர்த்திடுமண்டலஞ் சுத்தமனேன்மணி
பூர்த்திடும்பூவதும் பொய்யாச்சுநந்தியே. (284)

பொய்யாச்சுதையா புகுந்தபின்பூரணம்
வெய்யாச்சியாக வெருண்டவகைகாணேன்
சிய்யாச்சுமேனி சிறந்தநிராதரம்
தையாச்சுநித்தந் தனியோசைக்கூட்டமே. (285)

ஓசைத்திசைநாத முண்டென்பாரெல்லாரும்
ஆசைக்காண்பாச மடங்காதவாசனை
கோசச்சினத்தொடு கோதாமூனையும்போய்
மாசற்றபூரண மடியிலடைந்தோர்க்கே. (286)

அடைந்தபின்முப்பா முடைவாகத்தோன்றிற்று
முடைந்திடுஞானச் சரிதைமுதற்பாழாய்க்
கிடைந்திடுஞானக் கிரியையோகம்பாழாய்
விடைந்திடுஞான வெளியொளிப்பாழாச்சே. (287)

பாழானமூன்றில் பதித்திடும்யோகந்தான்
நீழாய்மனத்தாலே நின்றதுவெவ்வேறு
கோழாய்ப் பிடரிக் குழிமில்மனமோடித்
தாழாமைநோக்கிடிற் றூயங்கேகாண்பளே. (288)

காண்பளேதாய்தான் கவிந்தவிடமெல்லாம்
பூண்பாய்மனந்தான் புகழ்ந்தமனேன்மணி
ஏண்பாழ்வெளியெல்லா மெட்டாதபூரணம்
நான்பார்த்துக்கண்டு நலமுற்றேன்நந்தியே. (289)

நந்திகொடுத்தது நல்லமதியொன்று
அந்தித்துவாங்க வகண்டவெளிகாட்டும்
வந்தித்துவாங்கிட வாசிவாவென்றோடும்
பந்தித்துக்கட்டாய் பரத்தினடியிதே. (290)

அடியிலேகட்டி யகண்டத்தைநீபாரு
முடியில்மனோன்மணி முன்னின்றுபேசுவாள்
பிடியில்மனந்தானே பேராச்சவளாக
நெடியவெழுத்தாக நின்றதும்பார்த்திடே. (291)

பார்த்திடுநீதான் பகுந்திவ்வளியோட்டி
ஏத்திடுமேலே யிருக்கும்வகாரந்தான்
சேர்த்திடுரெண்டையும் தேசிமகாவாசி
காத்திடும்பாரும் கருதுமுனைநீயே. (292)

முனையில்மனமோட்டி மூட்டிவிழிரெண்டும்
நினைவிலேநோக்கிட நின்மலங்கண்டிடும்
கனவிலேகண்டதுங் கண்ணாரக்கண்டதும்
சுனையிலேமூழ்கும் துறைபோலுமானதே. (293)

துறையாமனமொன்றித் துலங்குமனோன்மணி
நிறையாமனதுக்கு நிலையாப்பிறப்பேது
கறைவாசனையாங் கருவிக்குத்தோல்மூடி
மறையாப்பிறப்பாச்சு மைந்தனேகண்டிடே. (294)

கண்டபிறப்பின் கருவையறுத்திட
ஒண்டியுபதேச முரைத்திடாயென்னந்தி
தண்டியசித்தம் தனித்தபொறியஞ்சும்
அண்டாதடக்கி யகண்டத்தைப்பார்த்திடே. (295)

கண்டத்தைப்பார்த்தால் கழலும்பிறவிதான்
கண்டத்தைப்பார்த்தால் கனகமாமுன்றேகம்
கண்டத்தைப்பார்த்தால் கருகெட்டுஞ்சித்தியாம்
கண்டத்தைப்பாக்கி லகண்டமுநீயாமே. (296)

நீயாமகண்டம் நிகரில்லைபின்னென்றும்
மாயாத்திசைக ளடங்கியதூன்னுள்ளே
ஓயாதபூரணத் தாடலாமாடலாம்
பாயிரத்தண்டம் பாயுமுறைகேளே. (297)

பாயுஞ்சொரூபக் குளிகைவைப்பாய்வாயில்
காயுங்கமலினி கட்டிடுவுந்தியில்
வாயுவைப்போ லட்டமாசித்திகைப்பிடி
தேயுவைப்போலச் சிறக்கநுழைந்திடே. (298)

## கெவனம்

நுழைந்திட்டேனும் நோக்கினேன்பேரண்டம்
கிளைந்திட்டவண்டங் கெடியாயிரங்கண்டேன்
இழைந்திட்டபுவன மிருநூற்றிருபதும்
அழைந்திட்டேனெல்லா மளாவித்திரிந்தேனே. (299)

திரிந்தேசந்தோஷித்துத் தேகத்தைநோக்கினேன்
புரிந்தேபதமும் புவனமுமண்டமும்
தெரிந்தேமயக்கற்றுச் சிந்தைதெளிவுற்றேன்
பரிந்தேன்குளிகையின் பாக்கியமெய்யாச்சே. (300)

மெய்யாச்சுதாத்தான் வெளியிலேபூத்தது
பொய்யாச்சுஞானம் புகட்டியேநோக்கிட
கையாச்சுபிண்டத்தை நத்தாதருளொடுந்
தையாச்சுகண்டாற் சகலமுங்காணுதே. (301)

## கற்பம்தின்ன வயது

காணுதசித்தர்க்குக் காயம்வலுநிற்க
ஏணுகத்தின்ன விசைந்தமுறைகேளு
ஈணுவயது இருபதில்மண்டலம்
பூணுவறுபதில் போல்ரெட்டிதின்றிடே. (302)

திண்ணிடுதொண்ணூறில் சேர்மூன்றுமண்டலம்
பண்ணிடுநூறண்டில் பலியாதுகற்பம்தான்
மண்ணிடைமாண்ப ரேவரும்மறிக்காமல்
எண்ணிடுமேனி யிளந்தைப்பருவமே. (303)

பருவமாய்வாழ்ந்தாற் பலனேதென் றுன்னுதே
அருவமாய்வாழ வகண்டமகாயோகஞ்
சொருபமும்வாய்க்குஞ் சுகசித்தியாடலாம்
நிருபமுப்பாழும் நிலையும்வெளியாமே. (304)

## நூல் மகிமை

வெளியானகாலத்தில் மேருவைச்சுற்றலாம்
வெளியானகாலம் விளங்கிடுமண்டங்கள்
வெளியானகாலத்தில் மேலெட்டுஞ்சித்திக்கும்
வெளியானஞானம் வெளியில்வெளியாமே (305)

ஆமேயிக்கற்ப மறிந்தவர்கொள்ளுவார்
காமேவிகாரத்தாற் கசப்பென்பார்காட்டாதே
தாமேபுளிப்பினைத் தள்ளாட்டாற்பொய்யாகும்
நாமேயிங்குண்டது நாட்டோர்க்குஞ்சொன்னேனே.(306)

சொன்னேன்முன்வாதஞ் சுகமாங்குளிகைகள்
சொன்னேன்வசியம் துறைதோறுங்கற்பங்கள்
சொன்னேன்மாயோகம் துரியமாமெய்ஞ்ஞானம்
சொன்னேனறிந்த சுகயோகஞ்சித்தர்க்கே. (307)

சித்தர்க்கிதைவிட்டால் தேசத்துநூலெல்லாம்
ஒத்துக்கிடையாது உரையும்தெரியாது
கொத்துப்படவொன்றாய்க் கோவையுங்கிட்டாது
வத்துநீகண்டு வலையத்திதைப்பாரே. (308)

பாரேயிந்நூல்தான் பட்டப்பகலொக்கும்
சேரேபலநூலைச் சேரிருட்டறை
யாரேனும்பாருங்க ளந்தாதிதப்பாமல்
சீரேதுங்கோணுது சேரவுஞ்சித்துயே. (309)

## அருதி கூறல்

சித்தியுமாகும் தேகமழியாது
முத்தியுமாகுமே மூலனுரைத்தது
மத்தியபூரண மாசற்றுக்கண்டிடுஞ்
சத்தியஞ்சொன்னேன் தப்பாதுதப்பாதே. (310)

## பஞ்சப் போறிவித்தை

தப்பாதுலகுதான் சாகின்றகூத்தாச்சு
ஒப்பாப்பெறினு முயர்ந்தமகாமேருங்
கொப்பானமாயக் கொடியினிறையாச்சு
வப்பானமந்தா னறியாமல்கெட்டதே. (311)

கெட்டதினுலோகங் கேள்விமுயன்றது
பட்டதுமீன்ருன் பகுந்திரைக்காசித்து
நட்டிதுவண்டு நற்றீபம்பூவென்று
மட்டிதுமான்தான் மணியோசைக்குள்ளதே. (312)

உள்ளானநெய்க்காக வொட்டியெறும்பூர்ந்துந்
தள்ளாதேபுக்கித் தலைசுற்றிமாண்டது
கொள்ளப்பரிசங் கொலைக்கரிபட்டது
விள்ளாதேயைந்தும் மீளாப்பொறியிதே. (313)

பொறியாலேகேட்டார்கள் பூமியிலுள்ளோர்கள்
மறியார்மனத்துக்கு வந்துமகாமாயை
நெறியாகமில்லாமல் நினைவையறியாமால்
சிறியாருடுத்தின சிற்ருடையானதே. (314)

## ஊத்தினக் குளிகை

சிற்ருடைகட்டுஞ் சிறுபெண்ணுள்வாதந்தான்
மூத்தாரப்பெண்ணருள் மூதண்டமாத்திரை
வித்தாரப்பொன்னும் விளையுஞ்சயத்தம்பம்
கற்றேயறிந்து கடந்ததுபார்த்திடே. (315)

பார்த்திடுமூத்துக்குப் பக்குவந்தப்பினல்
ஏர்த்திடநீருகு மில்லாட்டால்சிட்டமாம்
கோர்த்திட்டவாட்டுக் குழறினல்வெற்ருகும்
மார்த்திடஞ்சொன்னேன் வளமாய்க்கடந்திடே. 316)

கடந்திட்டால்காமநீர் காணுதுபொய்வாத
மிடந்திட்டால்சாரணை யெடுக்காதுமாத்திரை
புடந்திட்டம்தப்பினல் பொய்யாகும்கட்டெல்லாம்
தடந்திட்டரைப்பேரில் சண்டிக்குஞ்செய்திடே. (317)

## துருசு குரு

செய்ததுரிசி சிறந்தகுருவாகும்
பைதவமேவப் பசுமையுமெத்தானல்
கைதவறென்னக் கலங்காதேமாண்பரே
வைதவக்காமநீர் வளமாகவார்த்திடே. (318)

வார்த்துவெயிலில் வளமாய்த்தினம்பத்துக்
கோர்த்துக்கிளறிக் கொடியரவிமுகம்
ஏர்த்தியெடுத்திடு எல்லாக்குருவுக்குஞ்
சாத்தியநூல்முறை தப்பாதுநந்தியே. (319)

தப்பாதுசெந்தூரஞ் சமைக்கும்பதம்தப்பில்
ஒப்பாகமுன்போலே யூட்டியெடுத்திடு
மெய்ப்பாகஞானம் விளங்குஞ்சிவசத்தி
நட்பாகப்பூசை நன்றாகச்செய்திடே. (320)

## வாதமும் நற்புத்தியும்

செய்திடில்வாதம் திடுமுடுபண்ணுதே
செய்திடில்வாதத்திற் சேர்த்திட்டலையாதே
செய்திடுவாதம் திறமாகப்பண்ணிவா
செய்திடுவாதநூல் சோரவுஞ்சித்தியே. (321)

சேருமினங்கண்டு சேர்த்துநீசெந்தூரி
சேருமினத்திற் சிறக்கக்குருபண்ணு
சேருமினத்தோடு சிறக்கக்களங்காகும்
சேருமினந்தப்பிற் சேரவெறும்பொய்யே. (322)

பொய்யாகாதென்னூல் பேசக்கோடேபார்த்திடு
கையாரவேசெய்து கண்டுகளித்தேனன்
மையார்ந்தகண்ணிக்கு மாவீசன்சொன்னது
ஐயாமுதனூல் அரையும்பொருளிதே. (323)

பொருளேமூலட்சம் போக்கேர்டுநான்பார்த்து
அருளாலேநந்தி யடங்கிற்றெண்ணாயிரம்
மருளாதேநின்று வழியோடிதைப்பாரு
இருளே தொளியேது ஏகமுமொன்றாமே. (324)

## மெய்ந்நெறி

ஒண்ணாகக்கண்டிடு வுத்தமஞானத்தைப்
பண்ணும்பொறிகள் பதையாமல்வென்றிடு
கண்ணானகற்பத்தால் காயஞ்செயமபண்ணு
அண்ணாந்தலையாதே அடங்கலுஞ்சித்தியே. (325)

## அபக்குவர்

சித்தியேகாணச் செய்யார்முறைகேளு
பத்தியைக்கோபிப்பார் பரதூஷணமூடர்
மத்திமபுந்தி மருளன்மகாமோகி
எத்தியபொய்யோ னிடும்பர்க்குமாகாதே. (326)

ஆகாக்கொலைய னழும்பன்வெகுகோளன்
பாகாய்ப்பலபெண்ணைப் பார்த்தேங்கிப்பின்செல்வோன்
வாகானதர்ம வறைதப்புமாபாவி
சோகாவிகாரத்தன் சோம்பர்க்குங்காணாதே. (327)

காணாதமூத்தோர் கருதிடுதந்தைதாய்
கோணாதவைவோன் கொடுஞ்சினன்தூடணன்
வீணாப்பிறரை வெறுக்கும்வெகுதுட்டன்
பூணாக்குருதுட்டன் புல்லர்க்கும்பொய்யாமே. (328)

ஆமேகலப்பன் அடங்காதகாமத்தன்
தூமைத்துடக்கன் சுசியில்லாச்சண்டாளன்
சேமேசிவவேடந் தெரிசிக்கில்தூஷிப்போன்
வாமேவுசொல்லர்க்கும் வாதநூல்பொய்யாமே. (329)

நூலானநன்னூல் நுழைந்தவர்பார்த்தாலும்
காலாணிமாற்றுக் கனகம்பிறவாதே
சேலானசெந்தூரஞ் சேர்ந்தும்பழுக்காது
சூலாசைபோலச் சுழலுவார்துரோகியே. (330)

துரோகிக்குவாதநூல் சொல்லநரகெய்தும்
துரோகிக்குஞானநூல் சொல்லிடிற்ரூடமாம்
துரோகிக்குக்கற்பத்தைச் சூட்டவெகுபாவம்
துரோகிக்குக்கண்காணாத் தூரத்தேபோய்விடே. (331)

## பக்குவர்

தூரத்தேபோவென்றூற் சொல்லுவதாருக்கு
பேரொத்தவேதாந்தி பிறவிக்குளகைங்தோர்
வாரொத்தபூச்சக்ர மகத்தாஞ்சிவயோகி
நேரொத்ததர்ம நிலைத்தோரைப்பார்த்திடே. (332)

பார்த்திடுஞ்சாந்தன் பரதாரமிச்சியான்
கார்த்திடும்வாசியைக் கண்டுகளிப்புற்றேன்
ஏத்திடும்யோகத் திருக்கவிரும்பினேன்
சேர்த்துக்கயிலாசச் சீர்மையைச்செப்பிடே. (333)

செப்பிடில்பத்தி சிறக்கவேசோதிக்கில்
ஒப்பிக்குருமுன்னே உபசாரம்செய்பவன்
தப்பிலாமார்க்கன் தவத்தரைநேசிப்போன்
அப்பினிலுப்புப்போ லமர்ந்தவிதம்பாரே. (334)

## சம்பிரதாயம்

அமர்ந்தால்பிழைப்பா னல்லாட்டாற்பேயாவான்
தமர்ந்தமயக்கமாம் தங்கத்தைக்கண்டுடன்
எமன்தானுமேதென்பா னென்முன்னேயாரென்பான்
சமைந்தான்பதம்பார்த்துத் தணலைக்கொடுத்திடே. (335)

கொடுத்தவழிசென்றூற் கூடிஞானத்தினல்
தடுத்தேமணந்தன்னைச் சாற்றிடுவாசியை
அடுத்தேயிதைப்பார்த்து அப்பால்நூல்பாரென்று
விடுத்தேதொழிலை விடுவித்துக்காட்டிடே. (336)

காட்டிடுநூன்முறை கண்டதொழில்பாரு
பூட்டிடுவார்தம் புகழுக்கலையாதே
போட்டிடுவார்த்தை பொய்யர்பின்செல்லாதே
ஆட்டிடுநூல்கண்டும் அர்த்தமறிந்திடே. (337)

அறியாதகாலத்தி லறிந்தவர்பின்சென்றுஞ்
சிறியாரைப்போலே சிறக்கத்தொழில்பற்றி
மறியாமனத்திலே வைத்திடுநேசத்தை
நெறியாகவாய்க்கும் நிலையும்தவருதே. (338)

வாய்க்குமேநூலென் று வார்த்தையால்போராடில்
வாய்க்குமோவாதந்தா னெம்மட்டும்பார்த்தாலும்
காய்க்குமோகாய்தான் காயாதகாலத்தில்
நாய்க்குமேன்தேங்காய் நலமதுபார்த்திடே. (339)

### மூலாதாரம்

பார்த்திடுங்காலம் பரத்தின்முடியைப்பார்
ஏர்த்திடுவாசியி னிந்தமுறைகேளு
கோர்த்திடுமூலங் குமட்டிவகாரத்தைப்
போர்த்துச்சிகாரத்தைப் போகாமல்ரேசியே. (340)

ரேசித்துப்பூசித்து நின்றிடிற்குண்டலி
மாசித்துநந்தி வசனிப்பார்நீபாரு
நீசித்தோடெட்டும் நினையாதஞானமும்
வாசித்துமந்திர மார்க்கத்தைக்கண்டிடே. (341)

### சுவாதிட்டானம்

கண்டேகடந்துநீ கஞ்சன்பதிகூடி
ஒண்டேவகார முறுதியாய்நோக்கிட்டுத்
தண்டேசிகாரத்தைத் தன்னுள்ளேரேசிக்கப்
பண்டேபிறப்பினைப் பாறிப்பான்கஞ்சனே. (342)

### மணிபூரகம்

கஞ்சனைத்தாண்டிக் கருமால்பதியூடு
மிஞ்சவகாரம் விரையவேபூரித்து
ஒஞ்சியகாரத்தை யுன்னுக்குள்ரேசிக்கப்
பஞ்சுகரையும்போம் பாரிப்பான்மாலென்னே. (343)

### அநாகதம்

மாலைக்கடந்து மகத்தானருத்திரன்
காலையுறத்தாக்கிக் கலங்காதேநோக்கிட்டுச்
சாலச்சிகாரத்தைத் தன்னுக்குள்ரேசிக்க
மேலைச்சிவப்போடு விரிவெட்டுஞ்சித்தியே. (344)

## விசுத்தி

சித்தியாம்ருத்திரன் சேர்ந்தபதிதாண்டி
ஒத்திமகேசனுறையும் பதிக்குள்ளே
அத்திவகார மசையாமற்பூரித்து
ஒத்திச்சிகாரத்தை யுள்ளுக்குள்ரேசியே. (345)

உள்ளும்மகேச னுறையும்பரத்தடி
தெள்ளியேகாணச் சிறுபிள்ளைத்தானுவான்
அள்ளுங்கனிபோலே யாகுஞ்சிவயோகம்
துள்ளியவாசி துடியாதுசித்தியே. (346)

## ஆக்ஞை

துடியாமயேச்சுரன் சூழ்ந்தபதிதாண்டி
அடியாஞ்சதாசிவ மங்கேநீகாலூன்றி
மடிவாய்ச்சிகாரத்தை வைத்துநீபார்த்திடு
கெடியாக்கெவனமாம் கேளீர்மகாசித்தே. (347)

## நிராதாரம்

மகத்தாமனேன்மணி மாதாவின்பாதத்தை
அகற்றுமல்வாசியை யப்படியேபார்க்கச்
செகத்தானமெய்ஞ்ஞானஞ் சேரநிராதாரம்
மகத்தானவாசனை மன்னிநீமாய்த்திடே. (348)

நீதான்குருபத நின்றுபராபரன்
சூதானவாசியைச் சூட்டச்சிவயோகம்
தாதானபூரணந் தானேதெரிசனம்
வாதாம்வகார சிகாரத்தின்மார்க்கமே. (349)

மார்க்கமுறையோடே வைத்துவைத்தங்கங்கே
ஏர்க்கவேபாரும் எடுத்ததெல்லாஞ்சித்தி
நீக்கவிடமற்று நின்றிடும்பூரணம்
பார்க்கமகாவித்தை பவஞ்சேரானண்டமே. (350)

## அண்டங்களைக் காணல்

அண்டமிருந்தவடைவு சொன்னார்நந்தி
தண்டியதஞ்சுந் தனித்தவடுக்காக
ஒண்டியிருந்தது வோடிநுழையென்றார்
கண்டிக்கமலினி காணீர்சொருபமே. (351)

சொருபத்தைவாய் வைத்துச்சூட்டிக்கமலினி
அருபத்தசோதிபோ லண்டநுழைத்திட்டேன்
நிருபத்தகற்பம் நிறைவுள்ளயாவருந்
தருவொத்தஞானச் சதாகோடிசித்தரே. (352)

## அண்டத்திலுள்ள இயற்கைச் சித்தரைக் காணல்

சித்தரைக்கண்டேன் தெவிட்டாதேபாழித்தேன்
ஒத்தியசித்தி யுனக்கென்னவாச்சென்றார்
அத்தியகோடி யறுபதுமாச்சென்றேன்
எத்தியினஞ்சித்தி யின்னம்பாரென்றாரே. (353)

என்றேநுழைந்தே னியலொருவண்டத்தில்
கண்டேனேசித்தரைக் கடிபதுமைப்போலத்
தண்டேகைகூப்பினேன் தடவினேன்கைக்கில்லை
அண்டநீர்காரத் தடைந்தபெரியோரே. (354)

பெரியோர்தனைக்கண்டேன் பேறுய்வலம்வந்தேன்
அரிதாய்விடைபெற்று மப்பால்நுழைத்திட்டேன்
பரிவாயடுக்கொன்றிற் பாய்ந்துமுடியேறி
விரிவாயடுக்கில் விரைந்துநுழைந்தேனே. (355)

நுழைந்திடலண்டத்தில் நூல்பார்த்தசித்தர்கள்
அழைந்திட்டுநூல்சொன்ன தார்தானெனக்கேட்டார்
தனஞ்செயவீசன் றாய்க்கன்றுசொன்னது
களைந்தேழுலட்சங் கரைகண்டுபார்த்தோமே. (356)

பார்த்தோமென்றீரே பராபரசித்தர்காள்
கார்த்தேயிந்நூல்தன்னைக் கண்டுஞ்சுருக்காதேன்
சேர்த்தேசுருக்கச் சிவனுலுங்கூடாது
மார்த்தேயுண்டாகில் மகத்துவஞ்சொல்வீரே. (357)

சொல்லிடுமென்றீர் சுகஞானசித்தரே
மல்லியநந்திதான் வைத்தார்கேளாயிரம்
பல்லுயிர்பார்க்கப் பகர்ந்தேழுலட்சமுங்
கல்லினில்வெட்டுப்போல் காட்டினர்பார்த்தேனே. (358)

## நூற்களிருக்கு மிடம்

பார்த்திடென்றீரேநீர் பார்த்தநூலெங்குண்டு
தேர்த்தநல்மேருவின் தென்பாரிசத்திலே
ஆர்த்தறுநூற்றறு பத்தாகுமண்டபத்தில்
கோர்த்திடுஞ்சித்தர் குலாவிப்படிப்பதே. (359)

## மாணவர் வினவுக்கு விடை

படிக்கின்றநூலிற் பயனெல்லாஞ்சொல்லுமோ
படிக்கின்றநூலிலே பாச்சுமோசாரணே
படிக்கின்றநூலிற் பரிதான்குருவாமோ
படிக்குப்பதினாறும் பாங்காமோசித்தியே. (360)

பாங்காமோவெட்டெட்டும் பலபலசித்தொடு
வாங்காமலாடலா மற்றோர்க்குக்கிட்டாது
தேங்காமற் றேங்குஞ் சிவயோகபூரணம்
தூங்காமற்றூங்குஞ் சொரூபத்தைக்காட்டுமே. (361)

காட்டுமென்றீர்நூலைக் கைக்கொண்டபேர்சொல்லும்
நாட்டியவாசிக் குருநாதனந்திதான்
கூட்டினர்சித்தர்க்குக் கொடுத்தார்தானிந்நூலை
ஆட்டியமூலர்தா னறைந்தநூலென்பாரே. (362)

அறைந்துநீர்சொல்லிட லாமென்றிடமூலர்
மறைந்தேமயங்கிய வார்த்தையைநீர்சொன்னீர்
குறைந்திடுமோநூலைக் கொடுத்தாக்கால்பூரணம்
உறைந்தேழுலட்சமு மொக்கவரிதென்னே. (363)

அரிதல்லகாணு மகப்பட்டால்யாவரும்
புரிதல்லமூலத்திற் புகட்டினுல்வாசியை
எருதல்லநந்தி யெழுநூறுமொன்றாகப்
பெரிதல்லநூலினைப் பேசவறிகிரே. (364)

## மருந்து வகை

பேசாதநூலிலே பிறந்சமுறைசொல்லாய்
வாசாமல்சாரணை மருவியகட்டினம்
நேசாக்குடோரி நிலைக்கும்மெழுகினம்
ஆசாப்பரிக்கு வகண்டசெந்தூரமே. 365)

அகண்டகளங்க மடைவானசுன்னங்கள்
நிகண்டானசத்துக்கள் நேர்பலசெம்புகள்
பகண்டகுளிகைகள் பார்க்கிற்செய்நீருகள்
தகண்டதிராவகந் தானினிக்கூட்டமே. (366)

கூட்டமாமூலி குறையுப்புடற்பொருள்
நீட்டியபத்து நிலையாமினங்களும்
மாட்டியேசொன்னேன் மற்றுயிரத்துள்ளே
பாட்டிலேழ்லட்சமும் பாங்காய்ப்பிழிந்தொண்ணே. ()

## நூற்கோவை

ஒண்ணாய்ப்பிழிந்த துறுதியாமென்னூலைக்
கண்ணாரக்கண்டால் கவலையகன்றிடும்
வண்ணானுரைத்த மதியேழுலட்சத்தில்
எண்ணாபிரமீதி லெஞ்சாது சொன்னேனே. (368)

சொன்னேன்மூவாயிரஞ் சுருக்கதிலாயிரம்
முன்னேயென்னந்திதான் மூந்நூறுமுப்பதாய்
பன்னேனெனமூன்றும் பகர்ந்தமுறையாகத்
தன்னேழுநூற்களைச் சாற்றினேன்சித்தரே. (369)

சாற்றியநூலேழிற் றப்பாதோவங்கங்கே
போற்றியவீசனால் போய்க்காதுபோற்றுமின்
மாற்றிடுநன்றாக வல்லவர்காண்பார்கள்
வாற்றியேபோரேன் வாருங்காண்சித்தரே. (370)

## கெவுனம்

வாருங்காணென் று வலமாய்மருவண்டங்
கூருங்காணேடிக் கொடுந்தீயால்வேகுற்றுத்
தாருங்காண தப்பித் தனியண்டம்விட்டுநான்
பாருங்காண்பார்த்தே பலவாமடுக்கென்னே. (371)

அடுக்கைக்கடந்து அதுமேலேதான்தோற்றும்
ஒடுக்கியேபாயி லுலாவுறுஞ்சித்தர்கள்
தடுக்கியமேனிதான் தங்கமுமொவ்வாது
வடுக்கியேபார்த்தென்னை வாவென்றார்சித்தரே. (372)

சித்தரேயெவ்விடஞ் சேர்ந்தெங்கிருப்பது
பத்தித்தசித்தாலே பாய்ந்தீரோவண்டங்கள்
முத்திக்கும்புத்திக்கு முன்காயசித்திக்கும்
எத்திக்குநூலுமக் கேதென்றுகேட்டாரே. (373)

என்றநற்சித்தர்கா ளெய்தியநூல்கேளும்
பண்டுசிவன்சொற்பராபரியென்றாய்க்குக்
கண்டேவகுத்த கமலினிவாய்வைத்துப்
பண்டேபடைத்த பலவண்டம்பார்த்தேனே. (374)

பார்க்கமுறைதான் பதினாறல்லோநூலில்
ஏர்க்கவொன்றேது யென்னையாசொல்லென்றார்
சேர்க்கவேபாருங்கள் சேரேழுலட்சமும்
ஆர்க்கவேபார்த்தோம் அதிலொன்றைக்காணோமே. ( )

காணப்பொருளொன்று கடந்தசொரூபம்
வீணனவர்கூவி வெளியாகித்தோணுது
தோணப்பொருளொன்று தோன்றுஞ்சொரூபந்தான்
பூணகநந்திபுகழ்ந்த முறையொன்றே (376)

ஒன்றேகுளிகையை உறுதியாய்நான்பார்த்துக்
கண்டேகளிக்கக் கரத்திலேதாராயோ
பண்டேகுளிகையைபார்த்துநீ சாபித்தால்
இரண்டேபல்லண்டங்க ளேறவுங்கூடாதே. (377)

கூடாதேபோகக் குளிகைகெடுப்பாரோ
ஆடோமாடோநா னறிவற்றசென்மமோ
நாடாங்குளிகையை நானிட்டுத்தாரேன்காண்
தேடேங்குளிகையின் சித்தியைப்பார்த்தென்றான். (378)

## குளிகைத்திருட்டு

என்றவன்வாயிலே யிட்டான்குளிகையை
மன்றியபூரண மார்க்கத்திற்போய்விட்டான்
அன்றேயிருந்து மவன்பின்னேநீங்காது
தண்டிக்கமலினி தன்னல்தொடர்ந்தேனே. (379)

தொடர்ந்தண்டந் தோறுஞ் சுத்தியேயான்செல்லக்
கடந்தேனேபேரண்டங் கருதாயிரத்தெட்டும்
நடந்தான்புவனமும் நானும்பின்சென்றிட
அடந்தான்பதந்தாண்டி யப்பாற்பிடித்தேனே. (380)

பிடிக்கில்பிறிந்தான் பெரியவெளியூடே
அடக்கியமுப்பாழு மப்புறந்தாண்டினன்
நடிக்குமனேன்மணி நாயகிவாசலில்
இடிக்கிப்பிடிக்கையி லேகினன்சித்தனே. (381)

## குளிகை வாங்கினது

ஏகினனிஷ்கள யேகவெளியிலே
ஆகினன்மீட்டு மவன்பின்னேசுத்தினேன்
மாகியிளைத்தான் மறனென்கைசிக்கினன்
பாகியவன்கை பறித்தேன்குளிகையே. (382)

பறிப்பாயோநீயென்று பாங்காகத்தர்க்கித்தான்
தெறிப்பாயேநானேறித் திரிந்துவருமுன்னே
கறிப்பானகள்ளனே கண்கெட்டமூடனே
குறிப்பாய்த்தொடர்ந்த குறிசொல்லீரென்றானே. (383)

குறியேதுனக்குக் குறிகெட்டசித்தர்நீர்
பறியாச்சோவண்டத்திற் பார்த்தோர்சிரியாரோ
அறிவாட்சியில்லாதறிவுகாண்யான்றங்கேன்
தெறியாச்சுதென்று நிமிடத்தில்வந்தேனே. (384)

வந்தேயடுக்குவளமாகச் சோதித்துப்
பந்திக்கிழண்டம் பாய்ந்தேனடுக்கொன்றில்
அந்தித்தமேனி யதிகவெண்சங்குபோல்
சிந்தித்தசித்தர்கள் சேரச்சமாதியே. (385)

சமாதியைக்கண்டு சரணம்பணிந்தேகி
வமாதித்தவண்ட மதுவிட்டுமோடையில்
ஓமாதித்தசித்தர்க ளொளிபார்க்கில்ரத்நம்போல்
குமாதித்துலாவையில் கூடிமுன்னின்றேனே. (386)

## மணிக்குச் சாரணையறிதல்

நின்றவனைப்பார்த்து நீராரென்றார்சித்தர்
தொண்டனடியேன் சொற்பெறுமூலன்காண்
அண்டையிருமென்று ரப்பனேவாவென்றார்
கண்டேனே சாரணை காட்டினார்சித்தரே. (387)

காட்டினீர்சித்தரே கடிமணிப்பேரேது
தாட்டியவட்டமா சித்திமணியிது
நீட்டிக்கமலினி நேருண்டோவில்லையோ
தாட்டிகம்பேசாது தன்மாத்திரையுண்டே. (388)

உண்டென்றீர்மாத்திரை யுறமேன்புறக்காது
மண்டியதங்கம் வளமாய்க்குருக்காண
மூண்டியேதொந்தனை மூட்டிட்டுச்சூதத்தைத்
தண்டியேகட்டிடச் சார்பையறியோமே. (389)

அறியாததினாலோ வப்பனேமாத்திரை
மறியாச்சுருக்கு மகத்துவந்தானில்லை
குறியாகச்சொல்லிடிற் கூட்டுறேஞ்சாரணை
பிறிவானவண்டத்திற் பிறந்தபரிகேளே. (390)

## இயற்கைத் தங்கம்

கேளேபரிதான் கெடியாமிரமாற்று
காளேருறத்தங்க நாலாற்றின்மேற்றுண்டு
வாளேயுபரச மாற்றேவெகுவுண்டு
தாளேறக்காணலாம் தங்கக்குருசொல்லே. (391)

### பரிக் குரு

சொல்லுறேன்சித்தரே சூட்சாதிசூட்சமாய்க்
கல்லும்புழுக்கக் கவனங்கொடுபோக
மல்லியதீயுநீர் மாருதமுண்டிட
நல்லுங்கமலினி நல்மருமங்கேளே. (392)

கேளீர்நற்கார்முகில் கெடியானமாசூத
மாளீர்புளியுப்பு மத்திக்கொளுத்திடு
வாளீர்விசைதான் வளமாகவொன்பது
நாளீர்தலமித்திரம் நாட்டியுருக்கிடே. (393)

### குளிகைக்குச் சாரணை

உருக்கியசூதத்தி லூட்டியசாரணை
பருக்கும்பிரிக்கும் பகையெல்லாந்தீதானே
நெருக்கில்விடுவிக்க நிர்மலமாய்நிற்குந்
தருக்கியதங்கத்திற் ருக்குஞ்சரியிதே. (394)

சரியாவிச்சூதம்போற் ருக்குநிமிளையை
வரிவாயுரிக்கி மணிபோலதைவாங்கித்
தரியானவீரஞ் சமனிடுவெண்கண்டர்
பிரிவாயிரத்தொடு பேணுங்குருவண்டே. (395)

குருவண்டிடுனேடு கூட்டிடுமண்டத்தோல்
மருவியசூத மகத்தானபூரமும்
தருவியவேழுந் தனிக்காமநீரினல்
பருவியரைத்துநீ பாச்சாய்மணிகட்கே. (396)

மணியைரவிபட வைப்பாய்தினம்பத்து
அணியவேகாமநீ ரப்பிவாசித்தலும்
பிணியாத்திரிவங்கம் பேறுதுடைத்துளங்
கணியவரைத்துங் கவசத்துலர்த்திடே. (397)

உலர்ந்தபிறகு வுரவாய்முடிவிலே
கலந்தேநால்திக்குங் காட்டிடாய் நாற்பீடம்
தலந்தேவெளியிலே தாக்குப்புடமொன்று
அலந்தேகுருவாகும் அற்புதஞ்சித்தரே. (398)

அற்புதஞ்சொன்னே னடங்காப்பரிக்குரு
கற்பகமீடோ கலங்காக்குருமுன்னே
நிற்புதசங்கம் நிரைந்தேறுந்தொந்தனே
நற்புதஞ்சூத்ததை நாட்டிக்குருபாரே. (399)

பாரென்றீர்மூலர் பராபராவென்னையா
மாரின்றிப்பண்ணவு மற்றோர்க்குங்கூடாது
கூறென்றால்வித்தை குருதெட்சணைகேளும்
தாரென்றதங்கமுந் தாக்குங்காண்ரத்நமே. (400)

## இரத்தினசாரணை

ரத்தினத்தோடே நலமானதங்கமும்
ஒத்தித்தசாரணை யோர்முன்குளிகைக்கு
மத்தித்தெடுத்தது வாய்பேசிச்சிருக்கையில்
கொத்தித்தகாந்தியுங் கோடிரவியாச்சே. (401)

## அண்டங்களைக் காணல்

ஆச்சேகுளிகையா லப்பால்கடந்திட்டேன்
பாச்சேசலமாய்ப் பரவினதோரண்டம்
தீச்சேகடந்தே நிரையநுழைந்திடில்
வாச்சேசமாதியில் வல்லோரிருந்தாரே. (402)

இருந்தோரைச்சுற்றி யெழிலாய்மறுவண்டம்
பரிந்தேனுழைந்தேனன் பட்டப்பகல்போலே
தெரிந்தேநல்வாயு திரண்டதுவவ்வண்டம்
அரிந்தேகடந்தே னடுக்கெல்லாம்போனேனே. (403)

நுழைந்தேனடுக்கெல்லாம் நுவலாயிரத்தெட்டும்
அழைந்தேதிரிந்தபின் னைசையும்மாற்றினேன்
முழைந்தேன்சகலமு மோடினேனாடினேன்
தழைந்தேசமாதியிற் றானேனந்தியே. (404)

## சிவயோகமும் சித்திகளும்

தானேயவனாகத் தானவன்றானாக
ஊனேநற்கோட்ட முறுதிமிகப்பண்ணு
வானேநல்வாசியை வைத்துவைத்தங்கங்கே
பானுட்பழக்கமாய்ப் பார்த்துத்தெளிந்திடே. (405)

தெளியாதகாலத்திற் றேகத்தைவைக்காது
தெளியாதகாலத்திற் சித்தெட்டுமெய்தாது
தெளியாதகாலத்திற் சேராதுபூரணந்
தெளியாதமாண்பர்க்குச் சித்தர்சொற்பொய்யாமே. ()

பொய்யாதுவாசிப் புணையாஞ்சிவயோகம்
கையாரவந்துங் கனியாமிதில்ஞான
மையார்ந்தகண்ணியு மாதேவன்பாழிப்பால்
எய்யாதுமெய்து மெடுக்குங்கவனமே. (407)

கவனமெடுக்குங் களிம்பறுமுன்தேகம்
புவனத்துச்சித்தர்கள் பூசித்துப்பாழிப்பார்
தவனமுமில்லையே சாகாரொருநாளுஞ்
சிவனிவன்றானுஞ் சேர்வார்சிவயோகம். (408)

வாசிவாவென்று வாசியிலூடாடி
வாசியையங்கங்கே வைத்துநீசாதித்தால்
வாசியுமீசனு மருவியேபொன்றாகும்
வாசியைப்போற்சித்தி மற்றொன்றுமில்லையே. (409)

இல்லையேசித்தி யிதைப்போலெளிதாகப்
பல்லுகமாளெல்லாம் பார்த்தாலுங்கிட்டாது
சொல்லுயர்வாசி சுருதிமுடிந்திடம்
வல்லுயிர்வாதிகாள் வாசியைப்பார்த்திடே. (410)

பார்த்திடச்சோம்பினல் பலியாதுபோய்வாதம்
பார்த்திடச்சோம்பினல் பரமுங்கிடையாது
பார்த்திடச்சோம்பினல் படுவார்பிறப்புள்ளே
பார்த்திடவல்லோர்க்குப் பகலிரவொண்ணுமே. (411)

## வகார சிகாரப் பொருள்

ஒண்ணும்வகார முருகும்மனோன்மணி
பண்ணுஞ்சிகாரம் பகர்ந்தசதாசிவம்
தண்ணுதியொன்றாய்த் தாக்கிடப்பூரணம்
கண்ணாரக்கண்டு களித்தேனன்பார்த்திடே. (412)

பார்த்திடென்றேசொல்லிப் பார்க்காதமாண்பர்க்கு
ஏத்தியவாதத்தோ டெல்லாம்வெறும்பொய்யே
வார்த்திரமாத்திரை வயத்தம்பவித்தையூண்
காத்திடப்பூனையைக் காவல்செய்தொக்கும். (413)

ஒக்குமோவாத மூரம்பார்த்துச்சித்திக்கும்
தக்குமோதேகஞ் சதாகோடிகாலமும்
உக்குமேமேனி உயர்வாம்பிறப்பிது
தொக்குமோகற்பஞ் சொல்லாதிக்கல்லுப்பே. (414)

## கல்லுப்புக் கட்டு

கல்லுப்போவென்று கசடரேயெண்ணுதே
நல்லுற்றவாரிதி நாயகிநாதங்காண்
ஒல்லுற்றநீரி லுருப்பட்டுப்பாரைபோல்
வல்லுற்றவுப்பால் வளர்ந்ததுவாதமே. (415)

வளர்ந்திடுமுப்பை வளமாகக்கட்டிட
உளர்ந்துதிரிந்தாலு முருவாகக்கட்டாது
அளந்திதைக்கட்ட வறிந்தோருக்கெல்லாஞ்சாந்
தொலைந்திடாமாத்துடன் சொர்னக்குருவாமே. (416)

## கல்லுப்புக் குரு

குருவாகவேயுப்பின் கூறுநான்சொல்லுவேன்
விரிவாகக்கேளுங்கள் வேதாந்தமூர்த்திகாள்
பரிவாம்படிக்குப்பூபகர்ந்திடுகண்டருந்
தருவாஞ்சமபாகந் தாக்கரைச்சூடனே. (417)

சூடனரைக்குமுன் சொல்முதல்ரெண்டையும்
நீடவேவெண்கரு நேராயரைத்திட்டு
ஓடவேலேசா யுரவாகவில்லைசெய்
கூடரவியினிற் கூட்டுத்தினம்பத்தே. (418)

பத்தாந்தினத்திற் பரிந்துகுருவாகும்
மத்தானகல்லுப் புடைத்திடுபாக்குப்போல்
குத்தாக்குருபூசிக் குமட்டியில்வாட்டிடு
எத்தானஇந்துப் பிதன்மேலேலேபியே. (419)

லேபித்துவாட்டி நிரையெல்லாம்வெண்கரு
தாபிச்சவடு தனியாகநாற்சேரை
ஏபித்தகல்லுப் பினிற்போடுமுற்சேரை
யாபித்தசுண்ணும் பதுரண்டுஞ்சேரையே. (420)

சேரையிடுநீ திரண்டயிரண்டையும்
பூரையரசு பொலியாவிரையுடன்
நேரொத்தசாம்பல் நிரையொன்றுக்கோர்சேரை
தாரையேபாருந் தனிவாரமூரியே. (421)

அமூரியினலே யரைத்திடுநன்ருகத்
திமிரியபாதியைச் சேர்த்திடுபூவோட்டில்
கமரியவுப்பைக் கலக்கப்பதித்திடு
வமரியபாதி வலமாகமேற்பூசே. (422)

பூசிமேலோடு போட்டுநீசீலைசெய்
மாசிலாவீசனை வாழ்த்திப்புடம்போடு
ஆசிலாவுப்பை யடைவாயுருக்கிப்பார்
தேசித்தெறித்தால் திரும்பவிடம்போடே. (423)

போட்டேயெடுக்கப் புகழாங்குருவுப்பு
ஆட்டேசரக்கெல்லா மப்பனேகொன்றிடும்
நீட்டேநற்சினத்தில் நிரையாகலேபித்து
வொட்டேரவியி லுருவாகக்கட்டுமே. (424)

## சீனக் கட்டு

கட்டியசீனமும் கல்லுப்புஞ்சேர்சமன்
ஒட்டியமுறி யுறவாகும்வெண்கரு
நட்டியிணங்கன் நலமாகமேற்பூசி
மட்டியவோட்டில் வளமாகவாட்டிடே. (425)

வாட்டுமூரிந்தால் மருவித்தெரித்திடும்
கோட்டுநற்சூடன் குருப்பூசுவெண்கரு
காட்டியகட்டுக் கரைக்கெலாமுள் நஞ்சு
ஆட்டியும்பூசி யமளியாக்கட்டிடே. (426)

## சாரக் கட்டு

அமளியிணங்க லடைவானகல்லுப்புத்
தமளியசீனஞ் சமனுகவெண்கரு
கமளியரைத்துக் கலந்தவ்விடைச்சாரம்
உமளித்துப்பூசி யுறவாகவாட்டிடே. (427)

வாட்டியுமுன்கரு வளமாகநீபூசு
ஆட்டியகட்டெல்லா மப்பாமறவாதே
நீட்டியகாரம் நிமிரவேவாட்டிடு
சுட்டியசுண்ணும்புக் கொட்டியெரித்திடே. (428)

எரித்திடச்சார மிறுகுமெலும்புபோல்
மரித்தும்புகைந்தால் மறுபடிநீயெரி
தரித்திரம்போகுஞ் சகலமுங்கட்டுண்ணும்
வரித்தியவாத மகப்பட்டதுபாரே. (429)

## வீரக் கட்டு

பாரேயிச்சாரம் பரிவானவெண்கரு
நேரேயரைத்ததை லேபித்துவீரன்மேல்
காரேதணல்மேலே கைம்முறையாய்வாட்டு
தாரேயிணங்கன் தசைசூடங்கல்லுப்பே. (430)

உப்போடுமூன்று முறவாகமேற்பூசிச்
செப்பிட்டுமூடியுஞ் சீலையொன்றின்பினே
தப்பாதேதீயில் தவறுதேவாட்டிட
ஒப்பிடுவீர முருகியசையுமே. (431)

## சாரக் குரு

அசைகின்றவீர மணியில்நவலோகம்
இசைகின்றமாற்று மெட்டரைதப்பாது
பசைகின்றசாரத்தின் மேலேபரவிடத்
தசைகின்றசாரந் தவளக்குருவாமே. (432)

குருவானசாரங் குறிப்பாயிடைரெண்டு
மருவானவீரமு மாட்டதிலோரிடை
தருவானசூதமுந் தானுமிடைரெண்டு
பெருகாமித்ரத்தொடு பேருங்குருவண்டே. (433)

## துருசுக்குரு

பேராகக்கட்டின சாரமுமோரிடை
வாரானகுக்குடம் வளமானவெண்மலம்
தாரானவேழும் தனியரைவெண்கரு
ஓராந்துரிசியு மோரேழ்வராகனே. (434)

ஓரேழ்வராக னெருகட்டியாய்வாங்கி
ஆரேழிதைப்பூசி யடர்ந்தரவியில்லை
தாரேசலாசுத்துத் தனிச்சுன்னமேற்பூசு
வாரேநற்சீலை வளமாகச்செய்திடே. (435)

செய்திட்டுலர்த்தித் திரமாகமூன்றுநாள்
பைதிட்டவங்கம் பருகியுருகையில்
கைதிட்டமாகநீ கலங்காமல்தோய்த்துவா
மைதிட்டமாகவடைவாய்ப் பதினெண்றே. (436)

பதினோர்தரந்தானும் பாங்காகத்தோய்ந்திடில்
மதியோனிதுவென்ன வளமாய்க்குருவாகும்
அதியாஞ்சரக்கு அறுபதுங்கட்டுண்ணும்
நிதியாய்ப்பிறந்திடும் நிமிஷத்தில்கற்பமே. (437)

கற்பமுஞ்சொன்னேன் கனத்தகுருவாக
அற்பங்காண்சொல்லே னருமையாமிந்நூலில்
நிற்பகத்தங்கம் நிலையுற்றுருகையில்
தற்பனிமிளை சமபாகந்தாக்கிடே. (438)

தாக்கிடைரெண்டின் சமனாகவீரத்தைத்
தூக்கிக்குகைலயைச் சுழட்டுமணியாக
ஆக்குந்துரிசோ வதில்பாதிகல்வத்தில்
நேக்குகற்சூதம் நிறைமணிப்பாதியே. (439)

பாதியாஞ்சூதத்திற் பாதியிடுவீரம்
நேதியாம்வெண்கரு நீட்டியரைக்கையில்
கோதிக்குருவண்டு கொட்டதிலேம்பது
ஏதியாம்பூரமு மெட்டொன்றுகூட்டிடே. (440)

கூட்டியரைத்துக் குழுறமணிமேலே
ஆட்டியுலர்த்து அடைவாகமூன்றுநாள்
நீட்டுங்கிளிஞ்சில் நிலவுஞ்சலாசத்து
பூட்டியும்பூசிக்கப் புடத்திற்குருவாமே. (441)

பூசித்திடீசன் புகழாம்பராசத்தி
ஆசிக்கணேச னடைவாந்திசைதேவர்
மாசித்தவாணி மகத்தாங்குருவொடு
நேசித்துப்பூசிக்க நீயாங்குருவாமே. (442)

குருவானதங்கத்தின் கூறிகேள்தொந்தனே
பருவானதங்கத் தகட்டிலேபத்தொன்று
விரிவாந்துரிசிக் குருவவ்விடைப்பூசு
தருவானவண்டப் பொடிக்கீழ்மேல்தாக்கிடே. (443)

தாக்குகளங்கந் தயங்கிப்புடத்தைநீ
போக்குப்புடமெட்டும் போயேறுந்தொந்தனே
ஆக்குமேசூதத்தி லேயிரண்டுக்கொன்று
போக்குந்துரிசிக் குருபத்துக்கொன்றிடே. (444)

## சூத மணி

இட்டேவாய்நீரா லிழையவரைத்திடு
கட்டேயுருளுங் கபளித்துமத்தங்காய்
மட்டேபுடந்தான் வளமாய்பதினொன்று
நட்டேகுளிகை நலமாயிருக்குமே. (445)

இருக்கும்குளிகைக்கு ரெட்டிப்புச்சூதம்வார்
மறுகியரைத்திடு வாய்நீராலுண்டைசெய்
குறுகுந்துரிசிக் குறுப்பூசிச்சற்றேநீ
அறுகுமத்தங்கா யதுக்குள்புடம்போடே. (446)

போட்டுவாயிப்படிப் புடந்தோறுமட்டாக
ஆட்டுந்தொழிலி லாருக்குநான்சொன்னேன்
நீட்டுநல்வாசியில் நின்றுநல்வேதாந்தங்
கூட்டிடுஞ்சித்தர் குழாத்துக்கொளித்தேனே. (447)

ஒளித்தேகுருமுன்னே யொருகுருசடல்ல
அளித்தேனேயாயிர மதுக்குஞ்சுறுக்கிது
தெளித்தேனேஞானத் தெளிவுள்ளார்க்கேசித்தி
பழித்தகசடர்கள் பார்த்தால்பலியாதே. (448)

## இவருக் காகாதெனல்

பலியாதுபாவி பரதூஷமூடர்க்குப்
பலியாதுஞானத்தைப் பார்க்காச்சண்டாளர்க்குப்
பலியாதுவாசிப் பருவமறியாட்டால்
பலியாதுஈசன் பதம்போற்றுமாண்பர்க்கே. (449)

## தங்கக் குருவினால் காயசித்தி

போற்றியசொர்னக் குருதான்தினங்குன்றி
ஆற்றியேயுண்பா யமர்ந்தொருமண்டிலம்
மாற்றியேமேனி வளமாகச்சட்டைபோம்
தோற்றியபானு சுடராகுஞ்சித்தியே. (450)

சித்தியாஞ்சொர்னக் குருவால்சரக்கெல்லா
மத்திப்புரட்ட வசையாமல்கட்டுண்ணும்
வத்தித்தலோக வகைகண்டுநூலுடன்
சித்தித்தவாயிரத் தொன்றிடிலேமமே. (451)

## நற் புத்தி

ஏமத்தைக்கண்டு இருமாந்துபோகாதே
வாமத்தைத்தொட்டு வளமாகப்பூசைசெய்
காமத்தைவிட்டுக் கண்டுகொள்வாசியைச்
சேமத்தன்சாரணை யூட்டாய்குளிகைக்கே. (452)

குளிகையைவாயிட்டுக் குன்றுமலைதோரும்
அழிவில்லாச்சித்தர்க ளங்கங்குபோய்ச்சென்று
தெளிவுறக்குட்டெலாந் தெளிந்தபின்நீகேட்டுக்
கழிவுருங்கால்தன்னைக் கட்டாய்சமாதியே. (453)

சமாதியுரைத்தக்கால் தக்கரிஷியென்பார்
அமாதிக்குளிகையி லாடினாற்சித்தனும்
கமாதித்தவாசியைக் கண்டோர்சிவயோகி
புமாதித்தமூன்றும் பொருளொத்தஞானமே. (454)

## கெந்தகச் சத்து

ஞானமயமான நல்லோர்கள்கேளுங்கள்
மானமாங்கெந்தியை வாங்கிநீகைம்முறை
கானமாங்கட்டிய கல்லுப்புமோர்பலம்
ஓனமாங்காரக் குருவோர்பலம்போடே. (455)

போடுவாயோர்பலம் புகழ்கட்டுச்சாரத்தை
ஓடுகறக்கெந்தியு மொன்பதுவேப்போடு
தேடுந்தொகையது தீர்க்கப்பனிரெண்டும்
நீடுங்கலுவத்தில் நீபழச்சாரிடே. (456)

பழச்சாற்றிற்பூவெலாம் பாங்காய்ப்பிசைந்திடு
இழைத்தேகலந்து இழுத்தரைகெந்தியை
தழைத்தேதினமொன்று தப்பாதரைத்துவா
பிழைத்தேபூவரசன் பூச்சாறுவார்த்திடே. (457)

வார்த்திட்டரைமூன்று நாளும்வளமாகக்
கோர்த்திட்டுகிற்குங் குமரிப்பூமூன்றுநாள்
சேர்த்திட்டுமொன்பான் தினமுங்கடந்தபின்
வார்த்திட்டவில்லைபோல் வாகாயுலர்த்திடே. (458)

உலர்த்தியேவன்னியி லூட்டாய்சிவயோகி
மலர்த்தியசத்து வருங்காணுமோர்பலம்
குலர்த்தியிதைவாங்கிக் கொட்டுமறுகுகை
அலர்த்தியுருக்கி யடைவாகச்சோதியே. (459)

## சந்து உருக்க மித்திரம்

சோதிக்கமித்திரஞ் சூட்டினுஸ்காரத்தை
ஆதிவளைய லதில்போடுமூன்றிடை
காதியவீரமுங் காத்திடவோரெடை
பேதித்துரைத்துப் பிலக்கப்பொடிசெய்யே. (460)

பொடியையுருக்கையிற் போட்டுவாசோதனை
வடிவாகவித்தை வாங்கிரவிகாட்டி
மடியுமளவு மடைவாகச்சோதித்தால்
கெடியரவிகாணுங் கேளீர்நற்சித்தரே. (461)

## தங்கச் செம்பு

கேணூரிடுசெம்பு கெடிநூறிடுதங்கம்
வானீருருக்க மகத்தாம்பரிச்செம்பு
வானீரிரத மடைவாய்க்குழைத்திடு
ஆணிவேர்கண்டுநீ அப்பாய்குளிகையே. (462)

குளிகையெடுத்துக் குமட்டிவலக்கரங்
தெளிவாகவேகட்டிச் சிந்தித்துவாசியை
நெளிவாகப்போக்காமல் நிறுத்தியேயுள்ளுக்குள்
ஒளிவாகவாயிட வோடுங்கவனமே. (463)

ஓடலாமெங்கு மூலாவலாமண்டத்தில்
தேடலாம்பூரணந் தெளிவாமதுவாச்சு
தேடலாஞ்சித்தர் திரட்டெல்லாம்பாவித்துக்
கூடலாமஞானக் குறிப்பங்கெளிதாச்சே. (464)

## பரிச்செம்பினுல் காயசித்தி

ஆச்சேயிச்செம்பு வாத்தாளிடநாதம்
போச்சேவெகுதூரம் பூட்டல்லதொந்தனை
மாச்சேமதிமேலே வைப்பாயிரத்தொன்று
காச்சேகனகங் கனமானமாற்றிதே. (465)

மாற்றும்பரிச்செம்பை மாட்டிக்குருபண்ணு
ஆத்தாளுந்தந்தை யறைந்தரகசியம்
ஏத்தாங்குருவீச மேழுநாள்தின்றிடே
ஊத்தாமுன்தேக மொளிபார்க்கில்கூசுமே. (466)

கூசுமேகண்களுங் கோடிரவிக்கொப்பாய்
மாசுமேதேகமு மதனுக்கிணையாகும்
பேசுமேபூரணம் உம்மைப்பிரியாது
வாசிமேல்வாசி வாசியவனுமே. (467)

அவனாகவேவாசி யவ்வாசிதானாகச்
சிவனாகவேநின்ற சித்தர்மகத்துக்கள்
மவுனசமாதியில் வாழ்வார்வெகுகோடி
புவனத்தில்வேதாந்தப் புண்ணியர்க்கெய்துமே. (468)

எய்திடுங்கல்லுப்பா லெட்டெட்டுமாடலாம்
கைதிடுமேருக் கவனமுமோடலாம்
வைதிடுஞானத் தகண்டத்திலாடலாம்
பைதிடுவாசி பலிக்கின்றகாலமே. (469)

காலமேதென்று கலங்காதவல்லோரைக்
கோலமேயாறு குறிப்பானசக்கரம்
மூலமேயங்கங்கே சொன்னேனதன்தெய்வம்
பாலையேயட்சரம் பாங்காயறிந்திடே. (470)

## அண்டவுற்பத்தி

அறிந்துநீயங்கங்கே யடைவாய்ப்பழகிவா
வறிந்துநீபுத்தியில் வைத்திடுவாசியை
எறிந்துநீயேழில் யெடுத்ததெல்லாஞ்சித்தி
பறிந்துநீயண்டத்திற் பாயுமுறைகேளே. (471)

கேளேநீயண்டங் கொடியானவுற்பனங்
தேளேபிருதிவி தெண்ணீரதன்மேலே
கேளேமூள்வன்னிக் கெடுங்காலதின்மேலே
வாளேவெளிவானம் வளர்ந்ததிவ்வண்டமே. (472)

அண்டத்தின்மேலே யடர்ந்ததுபூமிதான்
பண்டுத்தபூமிமேற் படர்ந்ததுவப்புனல்
தண்டப்புனன்மேற் றளர்ந்ததுவன்னிதான்
கண்டத்தழல்மேற் கலந்ததுவாயுவே. (473)

## அண்டபிண்ட வெற்றுமை

வாயுவுமேலே மருவின தாகாசம்
காயுமோரண்டத்தில் கண்டகுறிப்பிது
பாயுமோராயிரத் தெட்டுக்குமிப்படிப்
பாயுமோர்பிண்டம் பரிந்துநீபார்த்திடே. (474)

## உடலில் பஞ்சபூதம்

பார்த்திடுமாங்கிஷம் பரித்தபிருதிவி
வார்த்திடுரத்தம் வழலையுநீராச்சு
தோற்றிடுவாய்வு சுழண்டேறிப்புக்கிற்று
காற்றேருடுதீயும் கலந்தவிசும்பென்னே. (475)

கலந்தேசெவிக்குள்ளே கண்டதுவாகாசம்
மலந்தேயிடைபி னிரண்டாச்சுவாயுவு
குலந்தேசுழிமுனே கூடிற்றுமேருவாய்த்
தலந்தேபிண்டத்திற் சார்ந்தமூரையாச்சே. (476)

ஆச்சேயிப்பிண்டத்துக் காதாரம்பூமிதான்
வரச்சேபூமேலே வளர்ந்ததுநற்புனல்
காச்சேபுனலுக்குள் கடுந்தீகாண்பானுவுந்
தோச்சேயிதைஞ்சிற்சுழல் வாய்வுமேல்விண்ணே. (477)

## அண்ட பிண்டம்

விண்ணுற்றவண்டம் விரைந்ததன்பிண்டத்திற்
கண்ணுற்றூற்போலவே கண்டிடுசிற்றண்டம்
பண்ணுற்றபேரண்டம் பார்த்ததுமிப்படி
தன்னுற்றமேரு தலையிற்றுருவனே. (478)

துருவன்றலைக்குள் சுழண்டவிதங்கேளும்
மருவரவிமதி மற்றுள்ளகோள்ராசித்
தருவியிருபதுந் தானேழாம்ரோகணி
பருவிப்பரவும் பலபலமீன்களே. (479)

பலபலபேரால் பகர்வார்பெரியோர்கள்
வலவியசெக்குப் போலாடிற்றுவவ்வண்டம்
நிலவித்துருவனும் நின்றதமரோடும்
கலவிக்கவனங் கலந்தோடுமண்டமே. (480)

அண்டத்துட்பக்க மசையாமலேயோடும்
வண்டுற்றுப்பாய்ந்தாலும் வாகாயழியாது
உண்டுற்றுமேலோ டுலாவியறிவார்கள்
பண்டுற்றசித்த ரிதைக்கண்டு பாருமே. (481)

கண்டுகண்டண்டங் கடந்தோடிநீபாரு
பண்டுவுரைத்த பழக்கத்துடனேநீ
அண்டிடுமாத்திரை யாருக்குங்காட்டாதே
ஒண்டிலறண்ட முகந்துநீயோடிடே. (482)

## மூலாதாரம்

ஓடிடும்போது வொருமித்துவாசியை
நாடிடுதிக்கை நலமாயிதத்தெண்ணி
கூடிடுமார்க்கத்திற் கோடிகாண்சித்தர்கள்
ஆடிடுமார்க்க மறிந்துகொள்மூலமே. (483)

மூலமிருந்த முறைகேளுமண்டம்போற்
கோலமதின்மேலே குலாவியநாலிதழ்
சீலநடுவேசிறந்திடு முக்கோணம்
ஆலயமூன்றி லமர்ந்தசிகாரமே. (484)

சிகாரமேமூலஞ் சிறந்தமுனையொன்றில்
ஒகாரவடிவாகி யோமென்னுங்குண்டலி
நகாரமுதலாக நற்சக்கரமையம்
அகாரக்குருவா ளளாவியிரங்கிற்றே. (485)

இரங்கிப்புருவ மிடைக்குள்ளேநின்றது
தரங்கித்தமர்வாசல் தாளாகிநின்றது
மரங்கித்தமூல மருவுமிதழ்நாளில்
அரங்கத்தவர்முத லறிவானவர்க்கிடே. (486)

இட்டதுநாலு மிருந்தசிகாரமும்
ஒட்டியேபார்க்க வொருமுனைவல்லபை
கட்டிமுனையொன்றிற் கணபதியேநிற்பார்
மட்டானகுண்டலி வாய்க்குள்ளேநந்தியே. (487)

## சுவாதிட்டானம்

நந்தியைப்பார்த்திடு நாட்டுசிகாரத்தை
அந்திவகார மடைவாகவேபூரி
பந்தியவேதம் பலபலநூலெல்லாஞ்
சிந்திக்கத்தோன்றிடுஞ் சேர்த்திடுவாசியே. (488)

சேருந்தினந்தான் தெளிவாகக்கண்டிடு
பாருவிடாமலே பாழிப்பானென்னந்தி
கூறிதுதாண்டக் குலாவியசக்கரம்
சேறிதழாறுஞ்சுவா திட்டானமென்பரே. (489)

என்பாரிதழாறி லிருக்கின்றவட்சரம்
வன்பாம்வகாரம் வகுத்தலவ்வோடாறும்
தன்பால்நடுவே சதுராம்நகாரங்காண்
இன்பாகவாணி யிருக்கும்பிரமனே. (490)

## மணிபூரகம்

பிரமனைப்பார்த்தும் பேணிற்றெளிந்துநீ
அரமனைக்குள்ளே யந்தித்துவாசியை
உரமனைத்தாக்கு வோடினு மோடாது
திரமனையோடுஞ் சிவயோகியாகுமே. (491)

ஆகின்றசக்கர மதின்மேல்மணிபூரம்
பாகின்றிநிற்கும் பாய்ந்தவிதழ்பத்தாய்
வாகின்றபத்தினில் வரைந்தவெழுத்துக்கேள்
போகின்றவாமுதல் புகழாம்வகாரமே. (492)

புகலானதானம் பொலிந்துநடுவூடே
மகலாமகார மருவியிருந்தது
நிகழானமாலும் நிறையானலட்சுமி
அகலாதிருப்பார்க ளப்பனேபார்த்திடே (493)

பார்த்திடுமேலே பாலிக்குமாயோகம்
காத்திடுநீதான் கருமேகவண்ணனைக்
கோத்திடுவாசி குமட்டியதிற்பாரு
ஆத்திடுமப்பா லநாகதங்கண்டிடே. (494)

## அநாகதம்

கண்டிடுசக்கரங் காணிதழீராறில்
தண்டியெழுத்தினைச் சாற்றமுறைகேளு
அண்டிடுசக்கர மம்முதலாகவோ
ஒண்டிப்பனிரெண்டு முறுதியாய்நின்றதே. (495)

நின்றநடுமையம் நேராகமுக்கோண
மண்டிச்சிகார மதுக்குள்ளேநின்றது
தண்டியருத்திரன் தாயானபார்வதி
அண்டித்தொழுதுநீ யாட்டிடாய்வாசியே. (496)

வாசியையாட்ட மகத்தாமனத்துடன்
ஓசியேபானு வொருகோடிபோலொளி
தேசியின்தேசு சிறக்குமதிற்பாரு
ஆசியைத்தாண்டி யதன்மேல்விசுத்தியே. (497)

## விசுத்தி

விசுத்தியிதழ்தான் விளங்கப்பதினாறு
வசுத்தியவட்சர மாமுதலீரெட்டும்
பசுத்தியிதழ்க்குள் பரவியேநின்றது
ஒசித்துநடுமைய மோராறுகோணமே. (498)

கோணநடுவே குவிந்தவகாரங்காண்
ஆனமயேச்சுர மாத்தாள்மயேஸ்வரி
பேணியிருந்தது பேரானகண்டங்காண்
பூணப்பரத்தின் புகழாமடியிதே. (499)

அடியிலேவாசி யசையாமல்வைத்திட
முடியிலேகொண்டுபோய் மூட்டுமதுபாரு
கொடியிலேயோடிடுங் கூப்பிடும்பூரணம்
மடியிற்கனிபோலே வாய்க்குங்காண்யோகமே. (500)

## ஆக்கினை

வாய்க்குந்தலமேல் வளமாகக்கண்டிடும்
காய்க்குமிதழ்ரெண்டு காணருமாக்கினை
பாய்க்குநடுவே பகுந்ததைகாரங்காண்
வாய்க்குஞ்சதாசிவம் வட்டமணியெண்ணே. (501)

மணியாமனோன்மணி மாதாவைநேசித்து
அணியாயதற்குள் ளடைவானவாசியைப்
பணியாகவேபூட்டிப் பார்த்திடும்யோகியே
தணியாதசித்தர் தலைவன்காண்தப்பாதே. (502)

## ஆராதாரமும் இடமும்

தானாகநின்ற தலமாறின்வர்ணங்கள்
கோனாகுமூலங் குமட்டியபொன்னிறந்
தானுமதுமேலே நாலங்குலந்தாண்டில்
வானனகஞ்சன்றன் வர்னம்வெளுப்பென்னே. (503)

வெளுப்பானகஞ்சன்றன் மேலாறுவங்குலம்
விளுப்பானமால்தான் விரைந்தகருநிறந்
தளுப்பாதிமேலே தானெட்டுவங்குலம்
மளுப்பானருத்திரன் வர்னஞ்செவப்பென்னே. (504)

செவந்தபதிமேலே சேர்பத்துவங்குலம்
நவந்தான்மயேச்சுர னுதனுமைபச்சை
அவந்தானுமங்கே யதின்மேற்பனிரண்டில்
தவந்தான்சதாசிவன் தானஞ்சுவர்னமே. (505)

வன்னங்கள்சொன்னேன் வளரங்குலஞ்சொன்னேன்
தன்னங்கெழுத்தொடு சார்ந்தவிதஞ்சொன்னேன்
பன்னங்கள்வாழ்ந்த பதிதேவதைசொன்னேன்
உன்னங்கள்வாசியை யூட்டிடுந்தப்பாதே. (506)

## ஆயிரமிதழ்க் கமலம்

தப்பாதேதாண்டிடத் தானுங்குருபதம்
ஒப்பாயிதழ்கானு மோராயிரத்தெட்டுங்
கொப்பாநடுவே குறிப்பதுவைங்கோணம்
அப்பா அகார உகாரமகாரமே. (507)

மகாரத்துடனே மருவியநாதங்கேள்
பகாரத்தவிந்து பரிவாயிதுவஞ்சும்
ஒகாரத்துச்சோதி யொளிபோல்வெளியாகி
நிகாரத்தநின்மலம் நின்றவடிவாமே. (508)

வடிவாமிடத்திலே வைத்திடுவாசியை
நெடிவாய்ப்போகாமல் நிறுத்தியதிற்பாரு
குடியாம்பிலக்குங் கொண்டிடும்பூரணம்
வடிவானவேதாந்த மன்னும்பொருளிதே. (509)

## பொருளுணர்தல் (ஞானம்)

பொருளாமதில்நின்று போக்கோடேமேல்நோக்கச்
சுருளாந்துவாதசந் தோற்றுமதிலேறும
அருளாலுனைமுற் றழிந்தால்மகாஞான
மருளாய்ப்பிடரியில் வைத்திடற்யோகமே. (510)

யோகமாங்குண்டலி யோகத்தைநோக்கிடப்
பாகமாய்க்கீழே பதினொன்றுகண்டிடும்
நாகமாய்நின்ற நடுமையம்நோக்கினல்
ஆகமாய்ருத்திர னழல்கோடிபானுவே. (511)

பானுக்குள்ளே பகருமுறையஞ்சும்
கானும்படியாக நாசியிற்பாயாது
தேனுமீதூறுந் தெளியாதுஞானங்கள்
வானுவாய்வாசியை வைத்துநீபார்த்திடே. (512)

பார்த்திட்டேன்யானும் பழகியிம்மார்க்கத்தைக்
கோர்த்திட்டவண்டத்தில் கூசாமலோடினேன்
ஆர்த்திட்டவண்ட மடங்கப்புவனமும்
போர்த்திட்டவற்றொடும் பூரணங்கண்டேனே. (513)

கண்டேனே காய்ச்சியைக் காரணர்காட்டிட
விண்டேனே சித்தர்க்கு வெளியாய்த்தொழிலெல்லாம்
பண்டேகுளிகைப் பருவமெல்லாஞ்சொன்னேன்
கொண்டேமுன்னுயிரங் கூறினேனைந்நூறே. (514)

ஐந்நூறுசொன்னே னடைவானசித்தர்க்கு
ஐந்நூறுசொன்னே னகண்டமெய்ஞ்ஞானிக்கு
ஐந்நூறுசொன்னே னடியேன்சிவன்சொல்ல
ஐந்நூறும்பார்த்தவர்க் காதிமகாசித்தே. (515)

சித்தாகவேண்டினுற் சேர்ந்துண்ணுங்கற்பத்தை
வ்த்தானவாசியை வைத்துவைத்தேபாரு
கொத்தானவாசையும் கோபமும்விட்டிடு
உத்தாருனக்கு மொருகோடிசித்தரே. (516)

கோடிதுறைசொன்னேன் குலாவியவாதந்தான்
ஆடியேபார்த்து அழியாதேபொன்னுலே
நாடியேநாவின் ருசியாலேவண்டுபோல்
ஊடிக்கமலத் தொடுங்காதேசித்தரே. (517)

ஒடுங்கிச்சகலமெல்லா மொக்கவிறந்தார்கள்
அடுங்கியசாங்கத் தகண்ட நானென்பார்கள்
எடுங்கியகால னெறிந்தவலைசிக்கி
நடுங்கித்தளர்ந்து நலிவார்களெய்தாதே. (518)

எய்யாதுசாங்கத் தெளிதாகமெய்ஞ்ஞானம்
மையாகமூலத்தில் வாழ்ந்தேயிருக்கையில்
பொய்யாமோகண்டது புத்திதான்கெட்டதே
கையாறவாசிதான் கண்டபின்சாங்கமே. (519)

சாங்கமாயான்சொல் சடாதாரமார்க்கமும்
ஓங்காக்குருபத மூயர்வோடுமாறிலும்
பாங்காகபுத்தியாற் பகுத்தேமனமுன்னி
வாங்காமற்பார்க்க மகத்தானசித்தியே. (520)

## மனம் புத்தி இயல் கூறல்

சித்தஞ்சிவன்காண் சேர்மனஞ்சத்திகாண்
ஒத்தநற்புந்தி யுறிதிமகாயோகம்
கொத்தாகமூன்றுக்கும் கோனுகுமாங்காரம்
பத்திநல்லாங்காரம் பாவத்துக்கேதுவே. (521)

## சூதசுத்தி

ஏதுவாய்நின்ற வெழிலானசூதத்தில்
கோதுவாய்நின்ற குடிலமயலேழுங்
கேதுவாய்ப்போகாட்டால் கெவனமெடுக்காது
வாதுவாம்வாதத்துக் காகாதுவாகாதே. (522)

ஆகாதகன்மச மகற்றமுறைகேளு
வாகானகல்லுப்பு மாட்டுசமபாகங்
தாகாக்குமரிப்பூச் சாறொருமூன்றுநாள்
பாகாய்க்கழுவிப் பதனமாய்வாங்கிடே. (523)

## சூதக்கட்டு

வாங்கிட்டசூதம் வளமாய்ப்பலம்ரெண்டு
தாங்கிட்டசட்டியில் தானேயதைவார்த்து
ஓங்கிட்டவண்டோ டுடன்சூடங்கண்டரும்
பாங்கிட்டசாரமும் பாரிருகாரமே. (524)

காரத்துடனே கடுகியிரண்டுப்பு
வாருற்றவப்பிரகம் வாங்குநவநீதம்
நேரொத்திடவே நிறையாகவொன்பதும்
தாரொத்தமுரியால் தாக்கியரைத்திடே. (525)

அரைத்தேகலக்கா யமுரிபடிநாலில்
விரைத்தேசூதத்தில் விளங்கச்சுருக்கிடு
தரைக்கேயிரக்கிநீ தான்வாங்குபிட்டினை
துரைத்தேபடிகாலு சூட்டாயமுரியே. (526)

சூட்டிக்கலக்கிச் சுகமாய்மறுவிசை
ஆட்டிச்சுருக்கிடுவப்படிச்சூதத்தில்
தீட்டிப்படிக்கே திரமாச்சுறுக்கஞ்சு
மாட்டியேபூட்டி வளமாகவாங்கிடே. (527)

வாங்கியேகல்வத்தில் வைப்பாய்பணிப்பட
ஓங்கிருதுவாயொழுகுஞ் செயனீரைப்
போங்கிக்கலுவத்தில் போட்டரைகற்பூரம்
பாங்கியசூதத்திற் பாய்ச்சிச்சுருக்கிடே. (528)

சுருக்கிடச்சூதந்தான் றுள்ளாதுவாலையாம்
மருக்கிப்புகையாது மகத்தாங்கனலுக்கு
உருக்குந்தொழிலுக்கு மோடுங்குளிகைக்குஞ்
செருக்குமிதைவிட்டாற் சித்தெல்லாம்பொய்யாமே. (529)

திரட்டுந்தொழிலுக்குஞ் சேர்ந்தகுளிகைக்கும்
மருட்டியசூதத்தை வளமாகச்சுத்திசெய்
தருட்டியேசுத்தித்துச் சத்துநீபூட்டினல்
பிரட்டாகுமோதான் பேரானசித்தரே. (530)

பேரானசுத்தியிற் பெலப்படுமேசூதந்
தாரானதீபனந் தானுகுஞ்சாரணே
காராணைப்போலே கவனங்கொடுபோகும்
ஆரார்களபார்த்தாலு மப்பனேதப்பாது. (531)

தப்பாமலிப்படிச் சரக்கானதெட்டெட்டும்
ஒப்பாய்ச்சுருக்கிடு வூறல்போய்ச்சுத்தியாம்
கொப்பானவேதை கொடுக்கமிகநன்று
இப்பாவிதைவிட்டா லெய்தாதுவாதமே. (532)

## இரும்புருக்க (சத்து)

வாதம்பிறந்தது மகத்தாமிரும்பிலே
போதவிரும்புண்டால் புகழ்காயசித்தியாம்
தாதாவிரும்பு தனியொன்பதாங்கற்பம்
மாதாவிரும்பை வளமாயுருக்கிடே. (533)

உருக்கமுறைகேளு வுள்ளொளியோகிகாள்
பருக்கியசாரம் பரிவாம்பொரிக்காரஞ்
செருக்கியவீரஞ் சிறந்ததொருலிங்கம்
மருக்கியதாளக மன்னுநற்சூதமே. (534)

சூதத்தோடாறையுந் தூக்காறுகாசிடை
வேதத்தோடொத்த வெடியுப்புநீர்வாரு
வாதத்தைப்பூசித்து வாகாயரைத்திடு
நீதத்தோடாறும் நிலையாகக்கட்டுமே. (535)

கட்டுஞ்சரக்கொடு காசிடைபூநாக
மட்டுறுவாளம் வளருமுட்காவேளை
எட்டுங்கலந்துட னெந்தாய்பதமுன்னி
வெட்டுருவேம்பின் விரையின்பருப்போடே. (536)

பருப்புடனஞ்சும் பகுந்தஞ்சுகாசிடை
அருப்பொடுமூன்னறு மாகப்பதினென்றும்
விருப்பொடரைநீ வெடியுப்புநீர்வார்த்து
தருப்பொடரப்பொடி தாணும்பலம்ரெண்டே. (537)

ரெண்டையுங்கூட்டி நிமிரவைப்பாய்குகை
உண்டையுருக்கி யுறவாகக்கிண்டினல்
தண்டியுருகியுந் தானேமணியாகும்
அண்டிமணியை யடைவாய்நொருக்கிடே. (538)

அடைவாய்முன்போலே யளவாய்ப்பதினென்றும்
படைவாகக்கூட்டியே பாய்ச்சியுருக்கிடு
கடைவாகவேழ்தரங் கவளித்துருக்கிடு
தடைவானசோதனை தாக்கிநீசோதியே. (539)

சோதிக்கலோகந்தான் சொர்னம்போல்நின்றாடும்
மாதித்திரையில்லை மற்றுஞ்சவடில்லை
ஆதித்தபாடாண மறுபதுமுட்கொள்ளும்
பேதிக்குந்தேகம் பிறக்குமிதிற்பொன்னே. (540)

## சத்துச் செந்தூரம்

பொன்னாகவேண்டினல் பூட்டுநல்லிங்கத்தைப்
பொன்னாகவேண்டினல் பூட்டதில்நாகத்தைப்
பொன்னாகவேண்டினல் பூட்டுநிமிளையைப்
பொன்னாகவேண்டினல் பூட்டுநீதுத்தமே. (541)

பூட்டுரசத்தைப் புகழானலோகத்தில்
நீட்டுநீதங்கமு நேராமிடையொன்று
ஆட்டுமணற்குள்ளே யந்தயிடைகெந்தி
கூட்டிப்பொடிசெய்து குப்பிக்கெடுத்திடே. (542)

எடுத்தேஎறித்திடு இயல்பாயறுசாமம்
படுத்தேசெந்தூரம் பவளநிறமாகும்
அடுத்தேநாட்குண்ணி யமர்ந்துண்ணமண்டிலம்
கடுத்தேயுன்றேகங் கல்லுச்சமனுமே. (543)

கல்லாகுமுன்றேகங் கரத்தால்மலேகுத்திற்
சில்லாகும்தூளாகுஞ் சித்துமனேகம்பார்
வெல்லாவிரும்பினே வேண்டுமபோதுண்ணலாம்
வல்லானசித்தரே வச்சிரதேகமே. (544)

## உடற் சிறப்பு

தேகமிருந்தல்லோ சித்தெல்லாமாடலாம்
தேகமிருந்தாக்காற் சேரலாம்பூரணம்
தேகமிருந்தாக்காற் செயலெல்லாம்பார்க்கலாம்
தேகமிருந்தாக்கால் சேரலாமுத்தியே. (545)

## தேவி பூசை

சேரவேகற்பஞ் செலுத்தியகாலத்தில்
ஆரமதிமேலே யாத்தாளைநீபாரு
தாரவேமூலத் தணலைப்பிறப்பிக்கும்
கோரவேகாமங் குமட்டிச்செரிக்குமே. (546)

செரிக்கின்றகாலத்தில் சேருஞ்சமாதிமைத்
தரிக்கின்றமாயையுட் சாராதேவிட்டிடு
மரிக்கின்றவார்த்தைதான் வாராதொருநாளும்
துரிக்கின்றமோனத் துரியங்கைச்சிக்குமே. (547)

## வாம பூசை

சிக்கவேயாத்தாளைச் சீராகவாமத்தில்
ஒக்கவேயண்ட முடன்மாங்கிசமது
பக்கம்பலகாரம் பாயசம்பாத்திரம்
திக்கெட்டிற்பூசையுஞ் செய்திடீர்சித்தரே. (548)

சித்தாகுமீசற்குஞ் சேர்நிருவாணிக்குங்
கொத்தாய்வடையுங் குடத்தில்மதுவும்வை
பத்தானதூபம் பரிமளம்பூச்சாந்து
முத்தானதீபத்தால் முன்னிட்டுப்பூசியே. (549)

பூசித்துமன்பாய்ப் புகழ்ந்தேத்தியர்ச்சித்து
மாசித்துத்தாவென்று மாதாவைநீகேளு
காசித்தியாகுங் கவனங்கொடுபோகும்
வாசித்துவாதமும் வந்துவணங்குமே. (550)

வணங்காமலாத்தாளை வாதத்தைப்பார்ப்போர்கள்
பிணங்கானவர்கட்குப் பேசாதேயிந்நூலை
இணங்காதவரோடே யெய்தாதுசித்தெல்லாம்
தணங்காள்நிருவாணி சண்ணுவாள்தப்பாதே. (551)

தப்பாமல்நாதாக்கள் சகலபெரியோரும்
ஒப்பாமுனிவோ ருயர்ந்தமெய்ஞ்ஞானிகள்
எப்பானவேதாந்தி எவ்வகைச்சித்தரும்
அப்பாவிவர்தா னருச்சிக்கும்பூசையே. (552)

பூசையறியாட்டாற் பூட்டாதேசூதத்தை
பூசையறியாட்டால் போடாதேவேதையை
பூசையறியாட்டாற் புருமையம்பாராதே
பூசையறியாட்டாற் பொய்யாகும்நூலெண்ணே. (553)

நூலேதுசெய்யும் நுழையாட்டால்வாமத்தில்
பாலோடுமன்னம் படைத்தாலும்பாங்கல்ல
கோலோடுசூலமுங் கொண்டநிருவாணி
மேலோடுமண்டம் விளங்க அரைவாளே. (554)

## நாக சுத்தி

அறையாமலீச னகலாமல்வாதங்
குறையாமல்யோகத்தின் கூறேடுபூசைசெய்
நிறைவாகநில்லு நிமிஷத்திற்சித்தியாம்
துறையாமுறையெல்லாஞ் சொன்னார்கள்சித்தரே. (555)

சித்தானநாகம் திரமாகக்கட்டுண்ண
வத்தானசித்தரே வகையாகக்கேளுங்கள்
கொத்தானநாகத்திற் குத்துநுணலைநெய்
சத்தானசாரந் தனக்குள்ளேசாய்த்திடே. (556)

சாய்த்திடுங்காலம் தணல்வைத்துருகையிற்
பாய்த்திடுநெய்யைப் பருவமாய்க்குத்திவா
காத்திடவாருங் கலக்கும்பதினென்றும்
ஆத்திடுவில்லைபோ லாகுங்காண்சித்தியே. (557)

## நாகக் கட்டு

சுத்தித்தநாகத்தைச் சூட்டிக்குகைவைத்து
பத்தித்தகல்லுப்பும் பாங்காம்வெடியுப்பும்
ஒத்தித்தகார மொருமூன்றுங்கட்டினம்
அத்தித்தநாகத்துக் கந்தவிடைமூன்றே. (558)

மூன்றும்பொடித்து முழங்கவேதூவிவா
ஊன்றியேவாங்கியுறவாகக்கட்டுண்ணும்
நீன்றியநாகம் நிலைத்தாடுங்கண்விட்டு
தான்றிப்புகையாது தாக்குமுறைகேளே. (559)

முறையானநாக முதற்றரக்கட்டிது
அறையானசூத மதனிடைகூட்டிநீ
துரையானசாரமுஞ் சூழ்கட்டுங்காரமும்
நிறையாப்பொடிசெய்து நீட்டிவார்சூதமே. (560)

## நாகக்களங்கு செந்தூரம்

சூதமும்நாகமுஞ் சூழ்ந்தேயுருக்கையிற்
போதநற்சாரப் பொடித்தூதக்கட்டுணுங்
கோதவிரண்டுங் குழறியுருகையில்
மாதையதங்கத்தை மாட்டிடுபாதியே. (561)

பாதியையீய்ந்தும் பருவத்தில்வாங்கிநீ
கோதிமணியைக் குழறப்பொடியாக்கி
நீதியாங்கெந்தகம் ரெட்டிப்பதிற்கூட்டி
ஆதியாம்வீர மதுவெட்டுக்கொன்றிடே (562)

ஒண்ணுகவஞ்சு முறவாகக்குப்பியிற்
பண்ணுயடைத்துப் பதிந்திடுவாலுகை
தெண்ணுனதீமூட்டிச் சிவந்தபதம்பாரு
கண்ணுனசெந்தூரங் காட்டிற்பசும்பொன்னே. (563)

பொன்னுனலோகத்திற் பூட்டுவாய்நூற்றெரன்று
பண்ணுனநாகம் பழுக்குஞ்சுகம்பாரு
எண்ணுதுறைக்கெல்லா மேற்றமிதுவாகும்
வண்ணுனிருவாணி வந்தித்தபீடமே. (564)

பீடமாய்நின்ற பிலத்தமகாநாதம்
நாடவேவேண்டில் நலமாகப்பூஜைசெய்
தேடவேவேண்டாஞ் சித்தியாமெட்டெட்டும்
ஆடவேநாகத்தி னுண்மையினுங்கேளே. (565)

## சூதநாகச் செந்தூரம்

கேளேமுங்நாகம் கெடியாய்ப்பலமொன்று
வாளேயிரும்பு வளமாய்ப்பலமொன்று
தாளேநற்றங்கம் தானும்பலமொன்று
ஏளேநற்சூத மிடுமுப்பலமிதே. (566)

பலமாகுமாறும் பருகியுருகையில்
தலமானகெந்தகச் சத்தினிலோர்பலம்
குலமாயுருக்கியே கொட்டிப்பொடியாக்கி
நலமாகரெட்டிப்பு நாட்டதிற்கெந்தியே. (567)

கெந்தியுடன்கூடக் கேளிருபத்தொன்றும்
அந்தித்துக்குப்பி யடைத்தேற்றுவாலுகை
பந்தித்தெரித்திடு பயிரவர்பூசைசெய்
கொந்தித்தசெந்தூரங் கோடியருணனே. (568)

அருணனுஞ்செந்தூர மாயிரத்தொன்றிட
வருணனைப்போலே வருடிக்குஞ்சொர்னந்தான்
தருணத்தினம்பார்த்துச் சண்ணிடக்குண்ணிதான்
கருணைப்பராசத்தி காந்தியாந்தேகமே. (569)

தேகத்தின்காந்திதான் சிற்பரத்தோடொக்கும்
வாகொத்தபூரணம் வாவென்றேகூவிடும்
ஆகந்திரமல்ல அண்டுநிராகாரம்
பாகொத்தசித்தரே பாரீரிதாண்மையே. (570)

## நாகச் செய்நீர்

ஆண்மைதான்சொல்ல வடங்காதநாகத்தை
வாண்மையாய்ப்பார்த்து மதிசூடிவாஞ்சையால்
நீண்மையாய்த்தாய்க்கு நிமலைநன்னந்திக்கும்
ஏண்மையோசித்தரே என்வழிக்கொவ்வாதே. (571)

ஒவ்வாதுநாகத் துதிக்குநீர்தான்கேளு
செவ்வாகச்சுத்தித்த நாகம்பலமொன்று
சிவ்வானசூதத்தைச் சேர்த்திடுபாதிகாண்
நவ்வாய்ப்பொடிசெய்து நாட்டிடாய்கல்வமே. (572)

கல்வப்பொடிமேலே கண்டவிடைவீரம்
வல்லொக்கத்தூவியே வைத்திடுமூலையில்
செல்வச்செயனீர் திரண்டோடும்வெண்மையாய்ச்
சொல்லொத்தவேதை துதிக்கநாவில்லையே. (573)

## காடிக்காரக்கட்டு

நாவில்லாநீரின்பேர் நாகச்செயனீர்காண்
காவில்லாகற்காடிக் காரத்தின்வேதைகேள்
தாவில்லாநீருக்குள் தானேதுவைத்ததை
மேவில்லாத்தங்கத் தகட்டைமேற்சுற்றிடே. (574)

சுற்றியேதோய்த்துச் சுகமாகவாட்டினல்
பற்றியேயுள்ளீர்க்கும் பாரிரிதனுண்மை
அற்றிப்பரிதா னதற்குநாற்கொண்டேற்றி
மற்றிமயிர்சுற்றி மாட்டிடாய்தீபமே. (575)

### காடிக்காரச் செந்தூரம்

தீபத்தில்வாட்டச் சிவப்பாகுமட்டுமே
கோபத்தைவிட்டிடு கொட்டுமதுமச்சை
ஆபத்தைநீக்கிட வாத்தாளைப்பூசைசெய்
சோபத்தைநீக்கிடுஞ் சொர்ணவருடமே. (576)

வருடம்பொருந்திடும் மாதாவைபூசித்தால்
அருடெறும்மாங்கார மருணன்பனியாகும்
பொருடரும்லோகத்திற் போட்டிடுநூற்றென்று
புருடமுற்காரம்போற் பொட்டிலைவாட்டிடே. (577)

### இணங்கன் செந்தூரம்

வாட்டுமினங்கன் வளமாய்ச்செந்தூரிக்கும்
ஓட்டுநவலோகத் தொருநூற்றில்வேதைதான்
காட்டுந்துரிசுடன் கட்டினசாரமும்
நீட்டுமுன்தீபம் நிலையாய்ச்செந்தூரமே. (578)

### துருசுசாரம் கல்லுப்பு செந்தூரம்

செந்தூரமுன்போலே செய்திடுகல்லுப்பைப்
பந்தூரமஞ்சுமே பாங்காகுஞ்செந்தூரம்
எந்தூரமோடு மெனக்கேட்கில்நூறேடும்
கந்தூரும்வேதையைக் காணீர்பெரியோரே. (579)

### நாகக்குரு

பெரியோரேநாகம் பிலக்கக்குருபண்ண
பரியோமுன்னுகத்திற் பாய்ச்சிடுநேரிடை
சரியோநற்சூதமும் தாக்குமதற்குள்ளே
வரியோடுகல்வத்தில் வைத்துப்பொடிசெய்யே. (580)

பொடிக்குச்சமனகப் பூட்டுசவ்வீரத்தைப்
பொடிக்குச்சமனகப் பூட்டுவெண்கண்டரைப்
பொடிக்குச்சமனகப் பூட்டுவெருக்கன்பால்
பொடிக்குத்துவளப் பொலிவாயரைத்திடே. (581)

அரைத்தேயுருட்டி யடைவாகமெல்லிதாய்த்
தரைத்தேநல்வில்லையைச் சாரவுலர்த்திடு
புரத்தேநல்லண்டப் பொடிபோடுகீழ்மேலும்
துரத்தேபுடமொன்று சூழக்குருவாமே. (582)

குருவானநாகங் கொடுக்குமுறைகேளு
அருவானவொன்பதி லந்திப்பாய்நூற்றென்று
திருவாகுமாற்றுச் சிறக்கப்பதினறு
மெருவாகுந்தங்கத்தின் மேற்பூசிப்போட்டிடே. (583)

## தங்கக்குரு

போட்டிடிற்றங்கம் புடத்திற்குருவாகும்
ஆட்டியவேதைக் களவில்லையான்சொல்லேன்
நீட்டியபூரணம் நிர்மலச்சித்தரே
காட்டியநாகங் கரைசொல்லக்கூடாதே. (584)

## சாரச்செய்நீர்

கூடாதசாரச் செயனீர்க்குணங்கேளு
தாடாங்கிளிஞ்சி சமனிடைகாரமும்
நீடாய்ப்பொடித்து நிறுத்திவைமூன்றுநாள்
வாடாக்குகைக்குள்ளே வைத்திடாய்காரமே. (585)

காருமுருகையிற் காட்டிவாமுன்பொடி
தாரவேதீயினிற் றண்ணீர்போல்நின்றுடும்
ஓரவேகொட்டி யுரவாய்ப்பொடிசெய்து
ஆரவேகல்வத் தமர்த்திப்பனிவையே. (586)

வைத்திடநீராகு மகத்தாஞ்செயனீரு
கைத்திடநாகங் கருலோகஞ்சுத்தியாம்
பைத்திடப்பாடாணம் பலமற்றுமூறல்போம்
மொய்த்திடவாட்டு முதற்றரநீரிலே. 587

## வெடியுப்புச் செயல் நீர்

நீராகியுப்பு நிலைக்குமுறைகேளு
ஆராங்கிளிஞ்சிற் சடைதயையுலர்த்தியும்
பாராய்கரண்டியிற் பாங்காய்வெடியுப்புத்
தாராயுருகையிற் றூக்காய்சடைதயென்னே. (588)

சடைதயுண்டிணங்கன் றம்பித்துநின்றிடும்
அதையுண்டுவாங்க வரிதாஞ்செயனீராம்
கெதையுண்டபாணம்போற் கெடியாகக்கட்டிடும்
பதையுண்டநீர்தான் பகரமுடியாதே. (589)

முடியாதநீருடன் முன்சாரநீறும்
பிடியாய்ச்சரிகூட்டிப் பேதித்தால்வெண்ணையாம்
வடிவானவீரம் வழங்கியகற்பூரம்
கடியாம் வெண்கண்டர் கலந்தங்குவைத்திடே. (590)

## சரக்குக் கட்டு

வைத்தேயிதற்குள்ளே மாட்டிடுவெண்காரம்
கைத்தேசவுக்காரக் கடுஞ்சுன்னத்தோடஞ்சும்
ஒத்தேயிடைதா னென்றுக் கொருபலம்
பைத்தேயிணங்கனும் பாய்ச்சாய்பலம்ரெண்டே. (591)

ரெண்டோடுவஞ்சும் நிலையாகமத்திக்கத்
தண்டாதுருண்டுந் தயிர்வெண்ணைபோலாகும்
கண்டேசரக்கெல்லாங் கட்டுமேவாட்டிடப்
பண்டேகதையல்ல பார்க்கையிற்கொல்லுமே. (592)

கொல்லுமேபாடாணக் கூட்டவினமெல்லாம்
சொல்லுமோசாரக் காரக்குலமெல்லாம்
கொல்லுமேயொன்பான் கொடிதானலோகத்தைக்
கொல்லுமேசூதம் கோபத்திலானையே. (593)

### செயல் நீரின் மகிமை

ஆனையைப்போலே யசைங்காடுஞ்சூதந்தான்
பூனையைப்போலே புலம்பித்தவித்திடுஞ்
சேனையைக்கட்டும் தெளிவாம்நவநீதம்
வானைக்கடந்தோடி வாழ்கின்றசித்தரே. (594)

### துரிசின் சுன்னம்

சித்தானசாரச் செயனீரில்சவ்வீரம்
கொத்தாய்க்கரைத்துக் குழப்பியேகண்டர்மேல்
நித்தாரப்பூசி நிலையொருமண்டிலம்
வித்தாரவெய்யில் விளங்கநீபோட்டிடே. 595)

போட்டிடப்பச்சை பொருமிக்கழண்டோடும்
நீட்டிடச்சூதம் நிலைத்தாடும் வெண்ணெய்போல்
ஆட்டிடக்காண்பா யகண்டநவநீதம்
கூட்டிடவேமார்க்கங் கொண்டார்க்குச்சித்தியே. (596)

### சாரக் கட்டு

சித்திவெடியுப்புச் சேர்ந்தசெயனீரில்
பத்தியசாரத்தைப் பாங்காய்த்துவைத்துநீ
அத்தியமண்சீலை அப்பா வெயிலில்வை
முத்தியசார முதற்றரக்கட்டிதே. (597)

### கட்டு வகை

கட்டிடுமிந்தக் கடியதோர்சீனத்தை
ஒட்டிடுமிப்படி யுறவாகவெண்காரம்
மட்டிடுமிப்படி வளமானகல்லுப்பும்
பட்டிடுங்கண்டாய் பச்சைக்கிளிக்கட்டே. (598)

கட்டுந்துரிசுங் கடியதோர்காரமும்
வெட்டுநற்சார முடன்சேர்ந்தசீனமும்
விட்டுநற்பூரம் விளங்கியகல்லுப்பும்
கொட்டுமமுறிமனத் தீனீரின் கூர்மையே. (599)

கூர்மையோடேழுங் குறிப்பாய்ச்சமபாகம்
வார்மையாய்வாய்நீரால் மத்தித்துவீரன்மேல்
தார்மையாய்க்கட்டுங் தணல்வாட்டுதீபத்தில்
ஓர்மைசெய்சீலை யுயரவேவாட்டிடே. (600)

## வீரக் கட்டு

வாட்டிடவாட்டிட வளமாகச்சவ்வீரம்
வாட்டிடவாட்டிட மணிபோலுருகிடும்
நீட்டிடத்தங்கம் நிமிஷத்தில்நீறுகும்
பூட்டிடவேதையும் போகுங்காண்தூரமே. (601)

தூரமுமோடிடுஞ் சூதத்தைக்கொன்றிடும்
பாரமுமல்ல பலகாரஞ்சாரங்காண்
நேரமுமில்லை நிமிடத்திலுப்புநீர்
ஆரமும்பூண்டநம் மாத்தாளறைந்ததே. (602)

அறைந்தாளேயாத்தா ளவளைநான்பூசிக்க
நிறைந்தாளேயுள்ளே நிலைத்தமதுவாலே
அறைந்தாளேமூலத்தி லாமென்றுமேலோடிக்
குறைந்தவள்நாலுக்குள் கூடினுள்பார்த்தேனே. (603)

பார்த்தேனேஞானத்தைப் பட்டப்பகலாகக்
கோர்த்தேனேவாசி குறிப்பாகவொன்பதில்
தேர்த்தேனேராசனுஞ் சூதத்லைதக்கட்டிநான்
போர்த்தேனேசாரணை பூட்டினேன்கண்டிடே. (604)

## உபரசச் சத்து

கண்டிடுகட்டிய சாரமுமோரிடை
தண்டிடுவெண்காரந் தன்னேடுவீரமும்
பண்டிடத்தாளகச் சத்தும்பரிந்திடு
மண்டிடும்கண்டர் வளமானரங்கியே. (605)

ரங்கொடுமாறும் நிறைதான்சரிகூட்டிப்
பங்கானவுப்புநீர் பாங்காயரைத்திடு
மங்காவுபரசம் வாங்கிடச்சத்ததில்
தங்காமல்நாளொன்று தாக்கியுருக்கிடே. (606)

உருக்கிடச்சத்தாகு முபாசமெல்லாந்தான்
பருக்கிடலோகம் பரிந்தாடும்தண்ணீர்போல்
நெருக்கிடரத்தினம் நிமிஷத்தில்நீராகும்
சொருக்கிடுசாரணை சூதத்திற்சோதியே. (607)

சோதித்துச்சூதத்தைச் சூட்டாட்டாற்சாரணை
ஆதிக்கெவன மடைவாயெடுக்காது
பேதிக்கமாட்டாது பெலமானகாயத்தை
வாதிக்கேயாகும் வகுத்ததோர்ஞானமே. (608)

## அருட்சத்தி கருணை

ஞானங்கொடுப்பாளே நாடினுல்மாதாவை
பானங்கொடுக்கையில் பரத்துக்கென்றேகொடு
தானங்கொடுக்கையில் தாய்க்கென்றேயுன்னுவீர்
வானந்திறக்குமே வாதமுஞ்சித்தியே. (609)

## அமுத சித்தி

சித்தியாய்பானத்தால் சேர்ந்திடுமெட்டெட்டும்
முத்தியாம்பானத்தால் முப்பாழுஞ்சூனியம்
பத்தியாம்பானம் பரத்திலேசேர்த்திடும்
சத்தியாம்வேதாந்தத் தாமவள்கண்டிடே. (610)

## தேவி பூசையின் பலன்

கண்டவர்சித்தர்கள் கவனிகள்ஞானிகள்
உண்டவர்யோகிக ளொளியாமறையோர்கள்
ஒண்டவமாற்று மோரைந்துபேர்களும்
மண்டியேபூசித்து மகத்துவமானரே. (611)

மானரேயாயினர் மாதாவைப்பூசித்து
தேனரவேயுண்டு சேர்ந்தார்பதிதோரும்
வானுறைத்தாண்டலா மாயமும்போக்கலாங்
கோனுறுகூடுங் குறிக்கெய்தும்பானமே. (612)

## அமுரி தாரணை

பானத்தைவாங்கையிற் பாங்காய்வகாரத்தை
ஊனத்தைவிட்டு உறிஞ்சியேபூரித்து
தேனெத்துநின்ற சிகாரத்தையூதிட
வானெத்துநின்ற மனோன்மணிகாண்பளே. (613)

காண்பாள்மனோன்மணி கண்டிடும்பூரணம்
வீண்பாழாய்நாளை விட்டுமறவாதே
ஏண்பாகநித்த மெய்துமென்றெண்ணாதே
பூண்பாகச்சொல்லுவேன் பொலிவாகச்சித்தியே. (614)

## சமாதி இளகியம்

சித்திமாமூலிகை சேருபலமொன்று
ஒத்தியவண்ட முரப்பொடுமூன்றதில்
மத்தியபத்திரி வழங்கிமசாதிக்காய்
அத்தியசீரக மதனில்கிராம்பிடே. (615)

இட்டேகசகசா வியல்சிறுநாகப்பூ
மட்டானசாரப் பருப்புடனேழையும்
தட்டேயிடைதான் சரிதூக்குகால்பலம்
பட்டாகவார்நெய் மணக்கவறுத்திடே. (616

வறுத்துமோரேழு மறுமுன்னிரண்டையும்
விரைத்தாவின்பாலில் மெழுகிலரைத்திடு
தரைத்தேகொதிக்கையில் சர்க்கரையீர்பலம்
நிரைத்தேகுழம்புக்குள் நீட்டிமதுவாரே. (617)

வாரேயுருட்டிடு வைத்துவைவத்துவில்
வாரேயுதயத்தில் வாசமெல்லாந்தீர்த்து
பாரேசமாதியிற் பாக்களவேயுண்டு
யாரேனும்பிற கெல்லாம்புசித்திடே. 618)

## பத்தியம்

புசிக்குமுறையெல்லாம் பூரணிக்கேயென்னில்
மெசிக்குநற்றேடமுமிங்கிழைவாராது
வசிக்குள்மறவாதே மகத்தானசித்தரே
தசிக்கவேமந்திரந் தாக்காய்ச்சமாதியே. (619)

சமாதியையுன்னிடு தாயாரைப்பூசித்து
அமாதிக்கிரிகையா யாகத்தைச்செய்யாதே
கமாதிப்பொறிவழி கண்டுநீயோடாதே
புமாதிப்பொன்னுசை பூட்டாதேபொல்லாதே. (620)

பொல்லாதவானந்தம் பூட்டிடுங்காலத்தில்
மல்லாடாதேநின்று வார்த்தைகள்பேசாதே
கொல்லாதேயொன்றையுங் கூடாதேபெண்ணொடுஞ்
செல்லாதேதீயினிற் சேர்வாயகண்டமே. (621)

அகண்டஞ்சிவமாச்சு வாத்தாள்விளக்காச்சு
தகண்டவிரண்டுஞ் சமனடுச்சீவர்க்கு
உகண்டவுன்மனியு முபாயப்பதிதோன்றும்
சிகண்டியுந்தாண்டிடிற் சின்மயங்காணுமே. (622)

## சித்தமார்க்கச் சிறப்பு

காணுமேஞானங் கடுகப்பலித்திடுங்
காணுமேயோகங் கடுகப் பலித்திடுங்
காணுமேவாதங் கடுகப்பலித்திடுங்
காணுமேகாயங் கடுஞ்சித்திமுத்தியே. (623)

முத்திக்கிதைவிட்டால் மூவுலகுய்யாது
சித்திக்கிதைவிட்டால் தேடியுங்கிட்டாது
பத்திக்கிதைவிட்டால் பரத்துக்குவாழ்வல்ல
சுத்தியவேதங் கடைசியிலுண்மையே. (624)

உண்மையிதைவிட் டுசாவவுமொன் றில்லை
வண்மையாய்ப்பார்த்து மகிழ்ந்தார்பெரியோர்கள்
தண்மையாய் நாயேனுந் தக்கபடிசொன்னேன்
நன்மையாய்நந்தி நாட்டுமுறைப்பாடே. (625)

முறைபாடுகேளு முதனூற்பனிரண்டும்
மறைபாடுலகில் வைத்தியம்நான்சொன்னேன்
நிறைபாடத்தாயருள் நின்மலஞ்சித்தர்க்குத்
துறைபாடுமைந்நூற்றில் சூட்டுமுறைகேளே. (626)

## தொகுப்பு

கேளேமுன்சித்தி கிடைத்திடச்சோதனை
வாளேநற்கற்ப மகத்தானமெய்ஞ்ஞானந்
தாளேகுளிகை சமைத்திடச்செந்தூரம்
நாளேபரிக்குரு நற்கட்டுமார்க்கமே. (627)

மார்க்கங்கவனம் வழங்கும்புரியட்டம்
ஏர்க்கவேயண்ட மெழிலாகவுற்பனம்
பார்க்கவேமேருவின் பட்டினந்தெய்வங்கள்
சேர்க்கமனோன்மணி சித்துக்கள்சொன்னேனே. (628)

சொன்னேனேசாரணை சொர்னரவிக்குரு
சொன்னேனேசார காரத்தின்சூட்சத்தைச்
சொன்னேனேயாத்தாளைச் சுகமாகப்பூசிக்கச்
சொன்னேனேயாத்தாள் சூழ்பூசைமார்க்கமே. (629)

மார்க்கமாய்ச்சக்கரம் வழங்கியவட்சரம்
மார்க்கமாய்வாசியை வைக்குமுறைப்பாடு
மார்க்கமாய்மூக்கில் மனோன்மணிமெய்ஞ்ஞானம்
மார்க்கம்பிடாரி மகத்தானயோகமே. (630)

யோகமாய்மூலத் துதிக்கின்றவென்னந்தி
பாகமாய்நெஞ்சிற் பகிர்ந்தாவியேகமாம்
ஆகமாய்நின்ற வசனபயினுண்மையும்
தாகமாய்முப்பாழுந் தப்பாமல்சொன்னேனே. (631)

## நூற்பலன்

சொன்னேனேஐந்நூறு கூட்டுமுன்னுயிரம்
பன்னப்பலந்தான் பகருவேன்வல்லோரே
சின்னஞ்சிறுபிள்ளை தேசுநூலெஞ்ஞாறும்
மன்னுஞ்சிவஞான வாசிக்குள்வாள்வரே. (632)

## சித்தர்களுக்கு இடம்

வாழ்வார்மலைதோறும் வாதத்தோடெட்டெட்டும்
தாழ்வாவதில்லை சகலமகாசித்தி
கேழ்வாமுன்னுயிரங் கேளிந்தவைந்நூறுஞ்
சூழ்வாகநித்தஞ் சுகமாகப்பார்த்திடே. (633)

பார்த்திடுமாயிரம் பாட்டினுமெத்தவே
கோர்த்திடுமறுநூறு கோட்டினேன்ஞானத்தை
சேர்த்திடுரெண்டுந் திரட்டையுமொன்ருகக்
கார்த்திடுஞ்சித்தைக் கடைந்தெழும்வெண்ணையே. (624)

வெண்ணைகடைந்தேன் விரைந்தெழுலட்சத்தில்
எண்ணெயைப்போலே யிதையுமுருக்கினேன்
கண்ணைத்திறந்தே கடுஞானவேதாந்தி
எண்ணைக்கும்பார்க்கலா மிந்தநூல்மூற்றுமே. (635)

திருமூலர் கருக்கிடை, வைத்தியம்-600.

முற்றிற்று.

---

T. V. Press, Madras-1—1968.

# வைத்திய நூல்களின் விளம்பரம்

**பதார்த்த குண விளக்கம் முதல் பாகம்**

(மூலவர்க்கம்) விலை ரூ. 10-00

ஷை இரண்டாம் பாகம் (தாது, ஜீவவர்க்கம்) விலை ரூ. 5-00

வைத்தியவித்வன்மணி சி. கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியது. முதல் பாகம் 705-பக்கங்களும், இரண்டாம் பாகம் 304-பக்கங்களும் கொண்ட அரிய பெரிய நூல்.

இந்நூல் சித்த வைத்தியத்திற்குரிய மூலிகைகளேயன்றி தென்னாட்டு மருத்துவர்கள் கையாண்டுவரும் சில யூனானி ஆங்கிலச் சரக்குகளும் பதார்த்தகுண சிந்தாமணி, வைத்திய மூலிகை யகராதி முதலிய நூல்களில் கூறப்படாத, பல மூலிகைச் சரக்குகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூல் உயிர்மெய்யெழுத்து வரிசையில் ஒவ்வொரு சரக்கின் பெயரும், அதற்குரிய செய்யுளும், பின்னர் அதன் உரையும், அதன்கீழ் அச்சரக்கின் செய்கையும், உபயோகிக்கும் முறையும், மற்றும் வைத்தியர்க்குரிய பல அரும் பெரும் முறைகளையும் கூறியுள்ளார்.

**கண் வைத்திய மென்னும்**

**திருநேத்திர சிந்தாமணி** விலை ரூ. 1-00

ஆயுர்வேத வைத்தியர்: சிறுமணவூர் முனுசாமி முதலியார் அவர்களால் இயற்றியது.

இதில் தனிப்பட்ட நேத்திரரோக சம்பந்தமான 90-முறைகள் அடங்கி யிருப்பதுடன் நேத்திர ரோகம் உண்டாவதற்கான காரணங்கள், நேத்திரரோக லட்சணங்கள், நேத்திர ரோகங்களுக்கு சிகிச்சைகள், செய்பாக கைபாகங்களுடன் இதில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

**நோயில்லா வாழ்வு** விலை ரூ. 2-00

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கேற்ப மாந்தர் திடகாத்திர தேகிகளாய் வாழவேண்டியதற்கான இந்நூலில் உண்ணும் விதி, உறங்கும் விதி, ஒழுகும் வகை, நாம் கையாளும் பொருள்களும், அவைகளின் தன்மைகளும், கருவுற்ற ஸ்திரீகளும், அவர்களின் நடைமுறைகளும், மருத்துவ வகை முதலியனவான பல விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

**விஷ வைத்திய சிந்தாமணி** விலை ரூ. 1-50

இந்நூலில் எத்தகைய கொடிய விஷ ஜந்துக்களின் கடிகளுக்கும் தகுதியான கைகண்ட முறைகள் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் கைவசமிருப்பின் பாம்பு முதலிய விஷ ஜந்துக்களைப் பற்றிய பயமே இல்லாமல் போகும், அவைகளின் விஷங்களுக்கு ஔஷதம் கலிக்கம், மூலிகைப் பிரயோகம், புகை, முடிக்கயிறு, மந்திரம் முதலிய சகல சிகிச்சைகளும் இதில் அடங்கி யிருக்கிறது.

**பாம்பரை வைத்தியம்** விலை ரூ. 6-00

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.

இந்நூலாசிரியர் பல வைத்திய நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலை இயற்ற ஆரம்பித்து பல இன்னல்களின் இடையிலும் விடாமுயற்சியுடன் முடித்துத் தந்துவிட்டு இறுதியில் 14-12-1946-ல் தமது 72-ஆம் வயதில் இயற்கையை எய்தினர். பின்னர் இவ்வருமையான நூலினை மேற்படியார் குமாரர் டாக்டர். க. இராதாகிருஷ்ணன் எல் ஐ. எம்.) அவர்களைக் கொண்டு பரிசோதித்துச் செப்பஞ் செய்து புதியதாக அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். ஆதலின், இதுவே கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் கடைசியாக இயற்றிய சிறந்த வைத்திய நூலென்பது தெளிவாம். இதற்கு முன் வெளிவராததும், தான் இரகசியமாகக் கையாண்டு வந்ததுமான அநேக முறைகளை இந்நூலில் கூறி யிருப்பதுடன், சித்தர் நூல்களில் மிகச் சிறப்பு வாய்ந்த முப்புவைக் குறித்து தன்னுடைய ஆராய்ச்சியில் கண்ட சிறந்த கருத்துக்களை பரிபாஷையின்றி எளிய முறையில் விளக்கி யிருப்பது இந்நூலுக்கு ஓர் விசேஷ சிறப்பாகும். ஆதலால், ஒவ்வொரு வைத்திய நண்பர்களுக்கும் சிறந்த பொக்கிஷம் போன்றது இந்நூல்.

**கைமுறை பாக்கெட் வைத்தியம்** விலை ரூ. 3—00

சுமார் 50-வருஷ காலமாக கைமுறையாக சுருதி யுக்தி அனுபவத்துடன் கைபாகம் தவருமல் செய்து முடித்துப் பலருக்கும் கொடுத்துப் பூரண சௌக்கியம் உண்டாகி எங்கும் பிரபலமான அநேக முறைகளை லோகோபகாரமாக இதில் எழுதி யிருக்கிறது. ஆபத்துக் காலத்தில் வைத்தியரைத் தேடாமலே இதிலுள்ள ஔஷத முறைகளை நம்பிக்கையாகச் செய்து சௌக்கியத்தை அடையலாம், இது ஒவ்வொரு குடும்பங்களிலும் அவசியமாக கையிருப்பில் இருக்கவேண்டியதாகும். எப்போதுங் கையில் இருப்பதற்காக சிறிய பாக்கெட் அளவில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு காலிகோ கட்டிடம் செய்துள்ளது.

**சிகிச்சாரத்ன தீபம்** விலை ரூ. 6-00

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.

ஒவ்வொருவரும் எளிதிலுணரும் வண்ணம், தேக பஞ்ச பூதம், நாடி ரோக நிதானம், செயபாக விளக்கம், கியாழம், சூர்ணம், மாத்திரை, மெழுகு, லேகியம், கிருதம், செந்தூரம், பற்பம், தீநீர், திராவகம், ஆசவம், அரிஷ்டம், பத்தியம் இன்னும் பல பாகங்களையும் இலம்பகங்களாக வரைந்துள்ளார். இந்நூல் வைத்தியத் தொழிலைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கும் வைத்தியர்களுக்கும் மற்ற யேனையோருக்கும் பெரும் நன்மையைத் தரத்தக்கது. வாலையந்திரப் படங்களுடன் கூடியது.

**வைத்திய சிந்தாமணி** விலை ரூ. 5-00

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.

இந்த "வைத்திய சிந்தாமணி" என்னும் நூலானது யூகிமா முனி என்பவரால் கூறப்பட்டது. இதனில் ரோக நிதானங்களை செவ்வனே கூறியிருப்பதினால் இதனை ஆதரவாகக் கொண்டும் சில கிரந்தங்களினின்று சிலது சேர்க்கப்பட்டும், ஒவ்வொரு ரோகங்களின் இறுதியில் ஆங்கிலேய மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள ரோக நிதான விஷயங்களை மதாந்தரமாகவும் அமைத்துச் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு பல அரிய சிகிச்சைகளையும் சேர்க்கப்பட்

**மூலிகை மர்மம்** (நான்கு பாகங்கள்) விலை ரூ. 5-00

ஆயுர்வேத பண்டிதர் : சிறுமணவூர். முனுசாமி முதலியார்

இதனில் பாஷாணாதி கொடுஞ்சரக்குகள் கலப்பன்றித் தனித்து மூலிகைச் சரக்குகளினாலேயே முடியும் முறைகள் அநேக நூற்றுக்கணக்காக எழுதப்பட்டிருக்கின்றன. எல்லா வகை நோய்களுக்கும் இந்த ஒரு நூலிலேயே பலவகை முறைகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு முறைகளும் எவரும் எளிதாகச் செய்து கையாளலாம். எல்லாம் மூலிகைச் சரக்குகளினாலே முடிவதாகையால் ஒருவித பயமும் கெடுதியும் இல்லை. வைத்தியர்களுக்கும் வைத்தியர் அல்லாதவர்களுக்கும் இது பெரும்பயன் தரத்தக்கது.

**கண்ணுசாமியம்** (என்னும் வைத்தியசேகரம்) **விலை ரூ. 3-50**

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் தமது பெயர் உலகில் எக்காலத்திலும் நிலைபெறுமாறு பரம ரகசியமாக தான் கையாண்டு வந்த பல அரிய பெரிய பாகங்களை யெல்லாம் சூர்ணம், மாத்திரை, லேகியம், எண்ணெய், தைலம், கிருதம், பஸ்பம், செந்தூரம், ஆக்கிராணம் முதலியவைகளை ஆங்காங்கு கைபாகம், செய்பாகம் முதலியவற்றால் எளிதில் உணரும்படி இப்புத்தகத்தில் எழுதியுள்ளார்.

**தைலவருக்கச் சுருக்கம்** (மூலமும்-உரையும்:) **விலை ரூ. 3—00**

ஆயுர்வேத பாஸ்கரர். சுப்பிரமணிய பண்டிதரவர்களால் எழுதிய உரையுடன் கூடிய சிறந்த வைத்திய கிரந்தம்.

இந்நூலில் குடித்தைலம் அதாவது குடிக்கும் எண்ணெயும், முடித்தைலம் அதாவது தலைக்கிட்டு முழுகும் தைலம், பிடித்தைலம் அதாவது தடவிப் பிடிக்கும் தைலம், துளைத் தைலம் அதாவது கண் செவி முதலிய இந்திரியத்துளைகளில் விடும் தைலம், புரைத்தைலம் அதாவது புரையோடும் விரணங்கட்குச் சீலையில் நனைத்து உபயோகிக்கும் தைலம் ஆகிய 147-தைல வகைகளை செய்பாக கைபாக விளக்கத்துடன் கூறப்பட்டிருக்கிறது.

**ஸ்திரீபால சிகிச்சை** **விலை ரூ. 6—00**

எட்டயாபுரம் சமஸ்தான வைத்தியர்
டாக்டர் S. A. சின்னப்பா M. D. (ஹோமியோ)
அவர்கள் இயற்றியது.

அருமை வாய்ந்த இந்த வைத்தியக் கிரந்தத்தில் ஸ்திரீகளுக்கும், பாலர்களுக்கும தனிப்பட சம்பவிக்கும் ரோகங்களையும் அவற்றிற்கான செய்முறை, கைமுறை, ஆங்கிலமுறை ஆகிய மும்முறைகளிலும் சிகிச்சைகளை விளக்கியுள்ளன. மேலும், ஸ்திரீ ஜாதிகளுக்கேற்பட்ட தனித்தனி வியாதிகளுக்கும், பாலர்களின் பல பிணிகளுக்கும் சிகிச்சை முறைகளையும் ரோக நிதானங்களையும் கூறும நூற்கள் ஒன்றுமில்லாதது கண்டு நமது தாய்நாட்டிற்குள்ள இக்குறையை நீக்குவான் வேண்டி மேற்படி டாக்டர் S. A. சின்னப்பா M. D. (Homeo) அவர்கள் அனுபவத்திற் கையாண்டுவந்த முறைகளை இந்நூலில் விளக்கியுள்ளார். தவிரவும், ஆங்கிலம் தமிழ் சிகிச்சைகளைச் சம்பூரணமாகவும், யாவரும எளிதில் கையாண்டுகொள்வதற்கு ஏற்றபடி இலகுவான விதமாகவும் வரையப்பட்டிருக்கிறது.

---

**கிடைக்குமிடம்:—** B. இரத்தின நாயகர் சன்ஸ்,
57, வெங்கட்ராமய்யர் தெரு, மின்ட்போஸ்ட் சென்னை-1.

பின் பக்க தொடர்ச்சி

ஆப்பிள் பழம்

கொ[illegible]க் கப்ளை

கோகும்ளை

சம்பா ப[illegible]க்காளி

தக்காளிப் பழம்

திராட்சைப் பழம்

வாழைக்காய்

மாதுளைப் பழம்

இலந்தைக் கனி

மாம்பழம்

பலாக்கனி

வெள்ளரிக்காய்

[illegible]

உ

## இரத்த தாது விருத்தி செய்யும் வஸ்துக்கள்

முருங்கை வித்து
பூனைக்காலி வித்து
அரசம் வித்து
கருணைக் கிழங்கு
நிலப்பனை கிழங்கு
தாம்பிர கிழங்கு
முத்தக்காசி
அசுவகந்தி
அல்லி கிழங்கு
பசுப்பாகல் கிழங்கு.
எக்கு
பொன்
வெள்ளி
முருங்கை பூ
சிறு நாகப் பூ
இலுப்பைப்பூ
ஆவாரம்பூ
ஜெண்பகப்பூ
மதன காமப்பூ
பேதான பருப்பு
பாதாம் பருப்பு
முந்திரி பருப்பு
சாரை பருப்பு
உளுந்து
அபின்
கோஷ்டம்
நெல்லு முள்ளி

அமிர்த சர்க்கரை
கிராம்பு
எருமைப் பால்
அதிமதுரம்
ஏலாதி
பெருஞ்சீரகம்
பொற்கடுக்காய்
திப்பிலி
மண்டூரம்
நெல்லி
கசகசா
கஸ்தூரி
ஜாதிபத்திரி
பொன் முசுட்டை
சீந்தில்
கஞ்சா
குன்றன்
வேம்பு
களிபிரண்டை
சிவகரந்தை
வல்லாரை
ஜாதி கஞ்சம்
ஆவரி வேர்
நன்னாரி வேர்
அருகம் வேர்
அரசங்கனி பழம்புளி
பேரிச்சை பழம்
திராட்சை பழம்
விளாம்பழம்
எட்டிக்கொட்டை
கடுக்காய்ப்பூ
கிட்டிக்கிழங்கு

8-பாகங்கள் அடங்கிய

**மலையாள மாந்திரீக ரத்னாகரம்** **விலை 2—50**

அநேக பீஜாக்ஷர யந்திரப் படங்கள் அடங்கியது.

மனிதர், பேய் பிசாசுகளால் வருந் துன்பங்களினின்று நீங்கி, பகைவர் செய்யும் பில்லி சூனியம் மாரணம் முதலிய வை தங்களிடம் வராதபடி செய்தும், நோய் நொடிகள் அணுகாமல் தடுத்தும், தேவதைகளையும் மனிதர்களையும் வசப்படுத்தியும், எவ்விடத்தும் எக்காரியத்திலும் ஜெயம் பெற்றும் மிகுந்த ஐசுவரியத்தையும் செல்வாக்கையும் அடைந்தும் வாழ்வதற்கே பிரியப்படுவார்கள் இவற்றை எல்லாம் எளிதில் அடையக்கூடிய மந்திர யந்திரங்களும் அவற்றை அனுஷ்டித்துச் சித்திபெறக்கூடிய மார்க்கங்களும் இதில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

**கண்கட்டு வித்தைகள்** **விலை 3—50**

ஜப்பான், ஜர்மனி, சைனா, ப்ரான்ஸ் முதலிய
பல தேச அபூர்வ வித்தைகள் 2000-
அடங்கி யிருக்கின்றன.

இதில் வரிசை வழங்குதல், மாம்பழ ஜாலம், சமுத்திர ஜாலம், சங்கிலி ஜாலம், அக்கினி ஜாலம், வாத்திய ஜாலம், எலுமிச்சை வித்தை, செப்பிடு வித்தை, பிசாசு ஜாலம், ரூபாயை அழைக்கும் வித்தை, வாயில் நூலிழுக்கும் வித்தை, சைனாதேச வித்தைகள், தேவாலயம் காட்டும் வித்தை, பல வாத்தியங்கள் கேட்கும் வித்தை, தீபத்தைத் தலைகீழாகக் காட்டுதல், கண்ணில் நூலிழுக்கும் வித்தை, அந்தரத்தில் குத்தும் வித்தை, அந்தரத்தில் நிற்கும் வித்தை, முட்டை விளையாடுகிற வித்தை, கோழித்தலை கூவும் வித்தை, மோகினி வித்தைகள் இம்மாதிரியான பல ஜால வித்தைகளடங்கி யிருக்கின்றன.

குறிப்பு:—மற்றும் எங்களிடம் கிடைக்கக்கூடிய புத்தகங்களின் விலை பட்டியல் தேவை யுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

---

கிடைக்குமிடம் :— **B. இரத்தின நாயகர் ஸன்ஸ்**

நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு,
மின்ட் பில்டிங் போஸ்ட், சென்னை-1.